The

# Viveka Chintamani Series

EDITED BY

C. V. SWAMINATHA AIYAR.

22/4 1897

KNOWLEDGE IS POWER

DIFFUSION OF KNOWLEDGE AGENCY

F THE

THE STORY

OF

# THE LIFE OF BUDDHA.

"If a combined, honest, and sustained effort is made to *transfuse* (not merely *translate*) good English books into Tamil, the effect will be to assist and stimulate greatly the study of both languages. No exercise of faculty is better and nobler for a *real* man than that of struggling with great thoughts and labouring to express them in such a way that they shall reach the heart, instruct the mind, stimulate the best feelings, and elevate the whole being of their fellow-men around them!"—Rev. Dr. G. U. Po[illegible]A. (Oxford.)

The Viveka Chintamani Series.

# THE STORY OF THE LIFE OF BUDDHA

DESCRIBING

## THE GREAT RENUNCIATION

*(MAHABHINISHKRAMANA)*

As depicted by Sir **EDWIN ARNOLD** in his 'Light of Asia.'

*(Reprinted from the Viveka Chintamani.)*

## புத்தரது திவ்வியசரித்திரம்.

மகாபிநிஷ்க்ரமணம் அல்லது பெருந்துறவு.

இஃது

"ஸர் எட்வின் ஆர்னல்ட்" அவர்கள் இங்கிலீஷ்கவியில்
விவரித்துள்ளதைப்பின்பற்றித்தமிழிலெழுதி
விவேகசிந்தாமணியினின்றெடுத்துப்
பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:

PUBLISHED BY

C. V. SWAMINATHA AIYAR,

SECRETARY, DIFFUSION OF KNOWLEDGE AGENCY, TRIPLICANE.

1897.

[Copyright.]

MADRAS:
PRINTED BY C. V. SWAMINATHA AIYAR,
AT THE COMMERCIAL PRESS, WALLAJAH ROAD, TRIPLICANE.
FIRST PUBLISHED IN THE VIVEKA CHINTAMANI, 1896-97.
REPRINTED IN A SEPARATE FORM, 1897.

---

[ *All rights reserved.* ]

804
294.3

# EDITOR'S PREFACE.

## விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள்.

### முகவுரை.

தமிழ்ப்பாஷை சிறந்ததும் இனியதுமென்று அப்பாஷாபண்டிதர்கள் அதைப்பற்றிப் பேசுங்கால் பெருமை கொண்டாடினும், அப்பாஷைப் பயிற்சி தற்காலம் தமிழைச் சுயபாஷையாக வுடையாருள்ளும் விர்த்தியடையாமல் க்ஷீணித்துவருகிற விஷயம் யாவரும் அறிந்ததேயாம். யாவரும் அறிந்தும் அப்பாஷையை அநாதரவு செய்வது பிசகென்று பல்லோர் கூறியும், அதையாதரித்து அப்பாஷையின் பயிற்சியை விர்த்திசெய்யவும், அதன்மூலமாக உபயோகமான அறிவைச் சனங்களுக்குள் பரவச்செய்யவும், பலர் ஒன்று சேர்ந்து பெருமுயற்சி செய்து பயன் விளைவித்ததைக்காணோம்.

தற்காலம், உபயோகமானதும் ஊதியமளிப்பதுமான அறிவு, பெரும்பாலும் ஆங்கிலேய பாஷை மூலமாகவே பெறுவது எளிதாக விருக்கிறது. ஆகையால் இங்கிலீஷ் படித்தவர்கள் அப்பாஷையிலுள்ள புஸ்தகங்களையே மேன்மேலும் வாசிக்கப் பிரியம் கொண்டவர்களாகிறார்கள். தமிழ்ப்பாஷைப் பயிற்சி பலவிதத்திலும் அசட்டை செய்துவிடப்பட்டதால், அப்பாஷையில் அவர்களுக்குச் சாதாரணமாய்த் தேர்ச்சியின்றிப் போய்விட்டது. இங்கிலீஷ் படிக்காத ஜனங்களுக்கு நித்தியப்படி ஜீவனத்திற் குபயோகமான அறிவு பலவகையில் வேண்டிய தவசியமாயிருந்தும், சுயபாஷையில் அவர்கள் தாமாக வாசித்துக் கிரகிக்கத்தக்க உபயோகமான புஸ்தகங்கள் அதிகமின்மையால், அவர்கள் அறிவையடைய

ஆவல்கொண்டும் ஏற்ற வழியின்றித் தவித்துச் சும்மா இருந்துவிடுகிறார்கள். இப்படித் தீராப்பொறியாகச் சும்மாவிருக்கவேண்டி நேரிடுவது வழக்க பலத்தால் சோம்பற்றனமாகமாறி அறிவையடைய வேண்டுமென்கிற ஆசையே இல்லாமற் போகிறது.

இவ்வாறாக, இங்கிலீஷ் படித்தவர்களுக்கும் தமிழ்ப் படித்தவர்களுக்கும் சாதாரணமாய்த் தமிழ்ப்பாஷை தற்காலத்திற்குபயோகமான அறிவையூட்டக் காரியத்தில் பிரயோசன மற்றதாகப் போகிறது. இதனால் நமது ஜனங்களுக்கும் தேசத்திற்கும் விளையும் தீங்குகள் அற்பசொற்பமல்ல. அவற்றைப்பற்றிப்பேசப் புகின் மிகப் பெருகும். படித்தவர்களெல்லார்க்கும் உபயோகமான அறிவைப்பரவச் செய்யப் பிரயோசனமில்லாத ஸ்திதியிலிருக்கும் பாஷை, மற்றெல்லாவற்றிலும் உபயோகத்தையும் ஊதியத்தையும் பெரிதாக நாடி நடக்கும் 19-ம் நூற்றாண்டினிறுதியான இக்காலத்தில், சீக்கிரம் கவனிக்கப்படாவிடிற் சீரழிந்து, சிறப்புக்கெட்டுச் சிதறிப் போகுமென்பதற்குக் கேட்பானேன்! தமிழ்ப்பாஷை சீரழிந்து சிதறிப் போகாதிருக்க அவற்றிலுள்ள ஆதிநூல்களையும் சிறந்த கிரந்தங்களையுமழிந்துபோகாமற் காப்பாற்ற வேண்டிய தவசியமென்பதிற்றடையில்லை: அத்துடன் அப்பாஷை ஜனங்களால் படித்துக்கொண்டாடப்பட வேண்டுமானால், தற்கால அறிவையூட்டத் தகைமையுடையதாக அதைச்செய்யவேண்டியதும் அவசியமேயாம்.

இந்த அவசியத்தை உன்னித் தமிழ்ப்பாஷையைச் சனப்பிரீதிக் கிசைந்ததாகச்செய்து விர்த்திக்குக் கொண்டுவர இரண்டு அம்சங்களிருக்கவேண்டியது அத்தியா

சியகம். ஒன்று: இங்கிலீஷில் கற்றறிந்தாராயிருப்பதுடன் தமிழிலும் தேர்ச்சி பெற்றோர் சாதாரண ஜனங்களுக்குப் புலப்படு நடையில் உபயோகமான விஷயங்களைப்பற்றி யெழுதுவதோடு, தமிழிற் பயிற்சியில்லாத இங்கிலீஷ் படித்தவர்கள் அப்பாஷை பயின்று அதில் ஒருவாறு தேர்ச்சியடைய வகையும் காட்டி எழுதவேண்டியது முதலவசியம். அவர்கள் எழுதினவை ஓர் சிறு புஸ்தகமாகவோ பிரசங்கமாகவோ வெளியிடப்பட்டு, மிகவும் நெருங்கி வரையறுக்கப்பட்ட சிறுவட்டமான சிலர் நடுவே மட்டும் வழங்கி யமுங்காது, படித்தோர் பாமரர் யாவராலும் படிக்கப்பட்டு நாடெங்கும் வழங்கிவரத்தக்க வசதிவேண்டியது இரண்டாவ தவசியம். அத்தியாவசியகமான இவ்விரண்டு அவசியாம்சங்களும் ஒருங்கு பொருந்தியிருந்தால்தான், நாடெங்கும் அறிவு பரவி, கற்றோரும் மற்றோரும் கருத்திற் கலந்து, நமது தேசத்தார் தமக்குள் தாமே பிரிவினையடையாது, கற்றவர் போன வழி மற்றவர் பின்தொடரவும், பின் தங்கினோரை முன் செல்லவைக்கக் கற்றவர் கவனித்துழைக்கவுமாக இப்படி எல்லவரும் ஒருமித்து முன்னகர நம்மவர் ஜாதிமொத்தத்தில் சீரடைந்து முன்னுக்கு வர வழியுண்டாகும். இந்த இரண்டு அம்சங்களையும் பொருந்த அமைந்து மேலே சொன்ன விதம் ஓர் வழி பிறப்பிக்கவேண்டுமென்றுதான் "அறிவைப்பரவச் செய்யும் ஏற்பாடு"* ஒன்று தயார் செய்து அவ்வேற்பாட்டின்படி 1892௵ மேயீ முதல் விவேகசிந்தாமணி என்னும் பத்திரிகை நடத்தப்பட்டுவருகிறது.

---

* *Vide* Editor's Introductory article in Vol. I. No. 1 of the Viveka Chintamani for May 1892.

இப்பொழுது அவ்வேற்பட்டிற்கு இசையவே, மேற்படி விவேகசிந்தாமணியில் வெளியான விஷயங்களில் முக்கியமானதும் நிரந்தர உபயோகமானதுமான அரிய விஷயங்களைத் திரட்டி "விவேகசிந்தாமணிப் பிரசுரங்கள்" என்னும் பொதுப்பெயரிட்டுத் தனிப்புஸ்தகங்களாக அச்சிட்டு எல்லாருக்கும் உபயோகமாகும்படிப் பிரசுரித்துவரத் துவக்கியிருக்கிறோம்.

இத்தலைப்பின்கீழ் பிரசுரிக்கப்படும் புஸ்தகங்கள் யாவரும் விசேஷமாக விரும்பத்தக்கவைகளானது பற்றிச் செலவையும் சிரமத்தையும் கருதாது நல்லமாதிரியாக, தளமான காகிதத்தில் அச்சிட்டு, நாணயமான உயர்ந்த கட்டடம் செய்து வெளியிட்டுவரத் தீர்மானித்திருக்கிறோம்.

[illegible] பூருகவுள்ள குறைகளில், ஜனங்கள் சாதாரணமாக வாசிப்பதற்கினிமையான கிரந்தங்களில்லாக் குறையுடன், நல்ல மாதிரியில் [illegible]யமாக அச்சிட்டு கண்ணுக்குரமணியமான ரூபத்தில் புஸ்தகங்கள் வெளியிடப்படாமலிருப்பதும் ஒரு பெருங்குறையென்பது மனப்பூர்வமாய் நம் புத்திக்குப்பட்ட விஷயமாயிருப்பதால், அக்குறையை நிவர்த்திக்க நம்மாலான முயற்சி செய்துளோம்.

ஜனங்கள் ஏராளமாக இப்புஸ்தகங்களை வாங்கி வாசித்து ஆதரிப்பார்களானால், இன்னும் அநேக புஸ்தகங்கள் வெளியிடுவது சாத்தியமாகும்.

ஆகையால் இவ்வேற்பாட்டின் பிரயோஜனத்தை யுணர்ந்த விவேகிகள் யாவரும், இத்தலைப்பின்கீழ் வெளியாகும் புஸ்தகங்களை எல்லாரும் வாங்கி வாசிக்கும்படி போதிப்பார்களென நம்புகிறோம்.

1896. C. V. S.

# CONTENTS.


| | | Page. |
|---|---|---|
| I. | Birth and Childhood... ... ... | 1 |
| II. | Marriage and Happy Life ... ... | 17 |
| III. | Goes out to see the City and becomes acquainted with the THREE EVILS, (old age, sickness and death) —Reflects on the true state of this Life... ... ... ... ... | 29 |
| IV. | Resolves to go in Search of TRUTH ... | 42 |
| | —The Great Renunciation ... | 59 |
| V. | Wanders in Search of TRUTH ... | 64 |
| | —Goes to see King Bimbisara's Sacrifice and there preaches against Slaughter of Animals ... | 78 |
| VI. | Wanders still in Search of TRUTH and arrives at the foot of the Bodhi Tree ... ... ... ... | 85 |
| VII. | Attains BUDDHAHOOD at the foot of the Bodhi Tree; and returns to Kapilavastu preaching his new-found way to SALVATION to the people ... ... ... ... | 99 |
| VIII. | Teaches the LAW to his kith and kin at Kapilavastu ... ... ... | 122 |
| — | Conclusion ... ... ... ... | 145 |

## NOTE.

The author of this little work having expressed a wish to remain anomymous, the book is issued accordingly; but the Editor can not let this occasion pass without recording his [illegible] th[illegible]rested and able manner in which he has executed his self-imposed task.

His thanks are also due to Rao Bahadhur C. W. THAMOTHAR[illegible]Y AVERGAL, B.A., B.L., F. M. U., for the kindness with which he has gone through the whole of the work before [illegible] and for the corrections and alterations suggested therein. The list of *Corrigenda* attached is his.

# அட்டவணை.

பக்கம்.

I. ஜனனமகோற்சவம்—பாலியப்பருவம் ... 1

II. விவாஹ மஹோற்சவம்-சிற்றின்ப சுகவாழ்வு 17

III. நகர் சுற்றப்போய் மூப்புப் பிணி மரணம் மூன்றையும் கண்டது—உயிர்வாழ்க்கையின் உண்மை நிலை... ... ... ... 29

IV. உலகுய்யும் வழிதேடத் தீர்மானித்தல்— ... 47

மகாபிநிஷ்க்ரமணம் அல்லது பெருந்துறவு. 59

V. சத்தியத்தைக் கண்டுபிடிக்கும் வழிதேடி யலைதல் ... ... ... ... 64

—பிம்பிசாரனது யாகத்தைக் கண்டு உயிர் வதை ஒவ்வாதென்று போதித்தல்... 78

VI. சத்தியத்தைத்தேடிப் பின்னும் அலைந்து போதிமரத்தடியை வந்தடைதல் ... ... 85

VII. போதிமரத்தடியில் புத்தத்துவம் அடைந்து தான் கண்டு பிடித்த உண்மை மார்க்கத்தை உலகுய்யுமாறு போதித்துக்கொண்டு திரும்பக் கபிலவாஸ்து வந்து சேர்தல் ... ... 99

VIII. புத்தர் கபிலவாஸ்து வந்தடைந்து தம் சுற்றத்தாருக்குத் தருமத்தைப் போதித்தல் ... 122

— முடிவுரை ... ... ... ... 145

# புத்தரது திவ்வியசரித்திரம்.

## மகாபிநிஷ்க்ரமணம் அல்லது பெருந்துறவு.

### I.

ஜனனமகோத்சவம்—பாலியப்பருவம்.

ஏறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு வருஷங்களுக்குமுன்னே, நமது இந்து தேசத்தின் வடபாகத்தில், கங்கை நதியின் உபநதிகளில் ஒன்றாகிய ரோகிணி நதியின் கரையில் கபிலவாஸ்து என்று ஒரு நகரம் இருந்தது. அந்நகரம் சமவெளிகளினின்று ஒதுங்கி மலைக்கு சமீபமாயிருந்ததினால்,—அக்காலத்தில் மற்ற நகரங்களைப்போல—அந்நகரத்தார் தங்களது பிராசீன ஆசாரங்களை சிறிதும் கைவிடாமல், தங்கள் பூர்வீகர்களது கண்ணியத்தையும், நடுவு நிலைமையையும், பக்தியையும் காப்பாற்றிவந்தார்கள். அந்த ஜனங்களுக்குத் தகுந்தவனாய், ஜனங்களிடத்

தில் அன்பு, கண்ணியம், பெருந்தன்மை முதலான குணங்களையுடையவனுய்—சுத்தோதனன் என்று ஒரு அரசன் அந்நகரத்தை ஆண்டுவந்தான். அவனுக்கு அன்பு, தயை, ஈசுவர விசுவாசம் முதலிய பெண்களுக்குரிய குணங்களையுடையவளாய் மாயை என்று ஒரு மனைவி இருந்தாள். இவ்விருவரும் சேர்ந்து ராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டுவந்தார்கள்.

இவ்வளவு பாக்கியங்களைப் பெற்றவனுக விருந்தும், சுத்தோதனனுடைய மனது அவைகளில் சந்தோஷமடையவில்லை. இதற்குக்காரணம், அவனுக்கு புத்திரனில்லாத பெருங்குறைவுதான். குழந்தைகளில்லாத வீடு சந்திரனில்லா இரவுபோலும், விளக்கில்லாத வீடுபோலும் அன்ருே! மேலும் நமது கொள்கைப்படி நன்மக்கட்பேறு தாய் தந்தையரை "எழுபிறப்பும் தீயவை தீண்டாது, பழிபிறங்காது" காப்பதல்லவா? கலியாணமந்திரங்களெல்லாம் நாம் மணந்து வாழ்வது சற்புத்திரரைப் பெற்று உலகத்திற்கு நன்மை செய்வதற்கே என்று முறையிடுகின்றன. இவற்றைச் சற்று நோக்கும்பொழுது சுத்தோதன மகாராசன் விசனப்பட்டதைப் பற்றி ஆச்சரியப்படவேண்டியதில்லை.

இப்படியிருக்குங்காலத்தில், ஒருநாளிரவில் அரசன் மனைவியாகிய மாயை நித்திரைசெய்யும்பொழுது, ஆகாசத்திலிருந்து, கண்கூசும்படியான தேஜஸுடன் கூடியதாய் ஒரு ஷட்கோண நக்ஷத்திரமானது விரைவாய்ச்சுழன்றுவந்து தனது கெர்ப்பத்தில் புகுந்ததாகக் கனவுகண்டாள். இதை அவள் அரசனையெழுப்பி அவனிடம் சொல்ல, அரசன் காலமே அதை, கனவின் உண்மையை அறிந்து சொல்லும் சோதிடர்களிடம் தெரிவித்தான். அவர்கள், அது நிகழ்ந்தகாலத்தையும் அதின் விவரங்களையும் நன்றாக ஆராய்ந்து, அரசனிடம் சொன்னதாவது: "அரசனே! இந்த சுவப்பனத்தினால், தங்களுக்கு ஒரு புத்திரனுண்டாகுமென்று தெரியவருகிறது. அவன் யாவரும் அதிசயிக்கும்படியான ஞானமுடையவனாயிருப்பான்; தனது ஞானத்தினால் உலகத்தார்க்கெல்லாம் நல்ல மார்க்கத்தைக் காண்பித்துக் கொடுப்பான்—அல்லது அரசனாயிருக்க விரும்புவானாகில் சக்கிரவர்த்தியாவன்" என்றார்கள். இப்படிப்பட்ட சுபசகுனங்களுடன் மாயையானவள் தனது அதிர்ஷ்டமுள்ள குழந்தையைக் கர்ப்பந்தரித்தாள்.

குழந்தையை ஒன்பது மாதம் சுமந்திருக்

து பத்தாவது மாதம் பிரசவித்தாள். இதுவரை புத்திரனில்லாதிருந்த தமது அரசனுக்கு இப்பொழுது, திவ்வியதேஜஸையுடையவனும், பார்ப்பவர் மனதைக்களிப்பிப்பவனுமும் ஒரு புத்திரன் பிறந்திருக்கிறான் என்ற செய்தி அந்நாடு முழுவதும் பரவினவுடனே, அந்தந்த இடங்களிலுள்ள வர்த்தகர்களும் பிரபுக்களும் அரசனைக்கண்டு பாதகாணிக்கை கொடுத்துப்போக வந்தார்கள். நாடுமுழுவதும், எங்கே பார்த்தாலும் வாத்தியங்களின் சப்தமும், பேரிகைகளின் முழக்கமும், ஜனங்களது உல்லாசமான உடுப்புகளும், ஆட்டமும், பாட்டும் நிரம்பி, புதிதாய் வருபவனுக்கு இசுவிசேஷத்தை வற்புறுத்தித்தெரிவித்தன. மேலும் குழந்தை பிறந்த சமயத்தில்தானே தூரதேசத்திலிருந்து வியாபாரிகள் அரசனுக்கு இனமாக விலையுயர்ந்த சாமான்கள் கொண்டுவந்தார்கள். ஆனதினாலே அக்குழந்தைக்கு ஸர்வார்த்தஸித்தி அல்லது சுருக்கமாக ஸித்தார்த்தன் என்று பெயர் இட்டார்கள்.

இப்படி அக்குழந்தையைக் காணவந்தவர்களுக்குள் 'அஸிதர்' என்பவரும் கூடவந்தார். அவர் மிக வயது முதிர்ந்த ஞானி. வெகுநாளாக உலகத்தைத் துறந்து, ஒரு அ

சவிருக்ஷத்தின் கீழ் தபசுசெய்துகொண்டிருந்தார். அவர் அப்பொழுது நடக்கும் கோஷத்தைப்பார்த்து, இந்தக் குழந்தை உலகத்திற்கு மிகுந்த க்ஷேமம் விளைக்குமென்று மனதில், அசரீரிபோல் ஒரு எண்ணமானது தூண்ட, அப்படியே பார்த்துவிட்டுப் போவதற்காகவந்தார். இவரைக் கூட்டத்தின் மத்தியில் பார்த்து, அவரது ஞான ஒளி பிரகாசிக்கும் பார்வையையும், இவ்வுலகத்தை நீத்ததினுலுண்டாகும் சந்தோஷமான சாந்தம் விளங்கும் கண்களையும், கம்பீரமான தோற்றத்தையும் குறித்து, சுத்தோதனன் அவரையழைத்து அவர் ஆசீர்வதிக்கும்படி அவரது பாதங்களில் குழந்தையைவைத்தான. குழந்தையை சிறிது உற்றுப்பார்த்ததும், அத்துறவி திடுக்கிட்டு, "அரசனே! என் பாதத்திலல்ல இக்குழந்தையை வைக்கவேண்டியது" என்றுசொல்லி அக்குழந்தையின் பாதங்களைத்தன் கண்களில் ஒத்தி, பின்னும் சொல்லுகிறார்: "குழந்தாய், உன்னை நான் வணங்குகிறேன். நீ தான் அவன். ஞானிகளுக்குள்ள முப்பத்திரண்டு முக்கிய லக்ஷணங்களையும், எண்பது சிறிய லக்ஷணங்களையும் உனது உடம்பில் பார்க்கின்றேன். நீ ஜனங்களுக்கு நல்ல மார்க்கத்தைப் போதிப்பாய். உனது போ

தனையைக் கேட்ட ஜனங்கள் எல்லாரும் நற்கதியை அடைவார்கள். இதுவரையில், சாக வேண்டுமென்றெண்ணிக்கொண்டிருந்த நான் உனதுபோதனையைக் கேட்க பாக்கியமில்லாதவனாய் சீக்கிரம் இறந்துபோவேன். அரசனே! மனிதஜாதியாகிய மரத்தில் அனேக நூற்றாண்டுகளுக்கொருதரமே புஷ்பிக்கும் புஷ்பம் இக்குழந்தை. அப்புஷ்பமானது அவ்வளவு அபூர்வமாக இருந்தாலும், ஒருதரம் அலரும்பொழுது இந்த உலகமுழுவதையும் ஞானமாகிற வாசனையினாலும், அன்பாகிற மதுத்துளிகளாலும்நிறைக்கிறது. ஆஹா! இத்தெய்வத்தாமரைக்கு இருப்பிடமாயிருக்கிற இந்த அரசவம்சத்தைத்தான் என்ன என்று சொல்வேன்! ஆயினும், அரசனே! நீர் முற்றும் சுகமடையமாட்டீர். இந்தக் குழந்தையினிமித்தம் மிகுந்த வியாகுலத்தையடைவீர். ஆனால் இக்குழந்தையைப் பெற்றதற்காக இவ்வுலகத்திற்கெல்லாம் கண்ணிமைபோன்ற உன்னரசியோவெனில், இவ்வுலகத்தில் இனியும் கஷ்டம் அனுபவியாமல், இதற்கு ஏழாம்நாளே விண்ணவர் உலகமடைவள்" என்று சொல்லிப்போயினர்.

அவர் சொன்னபிரகாரமே மஹாராணி மாயையானவள் குழந்தை பெற்ற ஏழாம்

நாளே, மண்ணுலகந்துறந்து விண்ணுலகஞ் சென்றாள். ஆதலால் அரசன் மிகுந்த வியாகுலமுள்ளவனாய், தன் குழந்தைக்குத் தன் வம்சத்தைச்சேர்ந்த மகா பிரஜாபதி என்னும் இளவரசியைச் செவிலித்தாயாக நியமித்தான்.

இப்படி எட்டுவருஷம் சென்றன. பின்பு அரசன் தன் மகனுக்கு, அரசர்க்கு வேண்டியவைகளையெல்லாம் கற்றுக்கொடுக்க உபாத்தியாயர் தேடிக் கடைசியாய் சகலகலைகளிலும் தேர்ந்த விசுவாமித்திரன் என்பவரைத் தேர்ந்தெடுத்தான். ஸித்தார்த்தனும் அவருக்குக் கீழ் மிகுந்த பவ்வியத்தோடும் மரியாதையோடும், அவர்கள் சொல்லிக்கொடுப்பவைகளையெல்லாம் நன்றாகக் கற்றுத்தேர்ந்தான். ஆயினும் நாம் கவனிக்கவேண்டியது அவனது கல்வியின் அபிவிர்த்தியைப்பற்றியல்ல. அவனது ஜீவகாருண்ணியம் அன்பு முதலான குணங்கள் ஒவ்வொன்றாய் அலர்ந்து பரிமளிக்கத்தொடங்கின. பேச்சில் வெகு மெதுவாகவிருந்தபோதிலும் அவன் வார்த்தைகள் ஞானத்தினால் விளங்கின; அவன் நடத்தை மிகக் கம்பீரமாயிருந்தபோதிலும் வெகு மரியாதையுடன் கூடினதாகவிருந்தது. அவனது குணம் விசேஷ தைரியத்துடன் கூடிய

தாயிருந்தாலும் மிகுந்த பவ்வியத்தோடும் ஒழுக்கத்தோடும் கருணையோடும் கூடியதாகவேயிருந்தது. க்ஷத்திரியர் வழக்கப்படி மான் வேட்டையாடிச் செல்லும் இளைஞர் கூட்டத்தில் இவனிலும் கைதேர்ந்த குதிரைவீரன் கிடையாது. அவ்வரண்மனையின் பெரிய முற்றங்களில் நடக்கும் போலிச்சண்டைகளில், இவனிலும் நன்றாகச் சண்டைசெய்வதிலும், ரதசாரத்தியஞ்செய்வதிலும் பழகின இளைஞன் இல்லவேயில்லை. ஆயினும் இவ்விதமான விளையாட்டுகளின் மத்தியில், மிகுந்த கவலையுடன் கூடினவனாய் நின்றுவிடுவான். மான்வேட்டையாடிச் செல்லும்பொழுது, மான் கையில் அகப்படும்படியான சமயத்தில், அப்பிராணியின் பரிதாபத்தை நினைத்து இரங்கி, குதிரையை நிறுத்திவிடுவான். பந்தயம்வைத்துக் குதிரைசவாரி செய்யும் பொழுது, தனக்குப் பந்தயங்கிடைக்கிறதாயிருக்கிற தருணத்தில், தனது குதிரையானது வியர்வையொழுகப் பெருமூச்சுவிட்டு வருந்துவதைக்கண்டும், அல்லது பந்தயத்தை இழந்துவிடுவோமேயென்று தன் கூட்டாளிகள் விசனிப்பதைப் பார்த்தும், தனது குதிரையை நிறுத்திவிடுவான். இப்படி அவனது வயதுமுதிரும்பொழுது, அவனது ஜீவ

காருண்ணியமும் நாளொருமேனியும் பொழு தொருவண்ணமுமாக வளர்ந்துகொண்டே வந்தது. ஆயினும் அவன் விசனப், வருத்தம் முதலியவைகளை, அரசர் அனுபவியாத சங்கதிகளென்று அறிந்தானேயொழிய, இன்னதென்று நன்ருக அறிந்தவனல்லன்.

இப்படி இருக்கையில், வஸந்தகாலத்தின் மத்தியில் ஒருநாள், ஸித்தார்த்தன் தனது தோட்டத்தில் தனியாக உட்கார்ந்திருந்தான். அப்பொழுது அனேக அன்னங்கள் கூட்ட மாக ஹிமவத்பர்வதத்தின் உச்சியில் தாங்கள் கட்டியிருந்த கூடுகளுக்கு வடக்குமுகமாக நோககிப் பறந்துபோய்க்கொண்டிருந்தன. கூடுகளில் உள்ள குஞ்சுகளின்மேலுள்ள அன்பினுல் இழுக்கப்பட்டு, அந்நியோந்நியமாகச் சேர்ந்து தம் பாஷையில் ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டு தமது நிர்மலமான இறக்கைகளை விரித்துப் பறந்துகொண்டு போகையில், நமது இளவரசனின் அததானுகிய தேவதத்தனென்பவன் தனது வில்லைவளைத்து, குறிபார்த்து,—நீலமான ஆகாசத்தில் மிதந்துபோவதற்காக விரிக்கப்பட்ட சிறகுகளை இலக்குவைத்து ஒரு அன்னத்தின்மேல் அம்பைவிட்டான். அம்பு தைத்தவுடனே, அவ்வன்னமானது துடித்துக்கொண்டு, இரத்தம்

பாய்ந்து சிறகுகளைச் சிவப்பாக்க, நம் இளவரசன் இருந்த இடத்திற்குச் சமீபமாய் விழுந்தது. அதைக்கண்டு அவன் அதை எடுத்து மடியில்வைத்து, வாழைக் குருத்துப்போலும் மெல்லிய தன் கைகளால் அதை மெதுவாகத் தடவிக்கொடுத்து, அதன் பயத்தைத் தீர்த்து, பின் அதை ஒரு கையால் பிடித்து, மற்றொரு கையால் அதின்மேல் தைத்திருந்த அம்பைப்பிடுங்கி, அந்தப் புண்ணின்மேல் குளிர்ந்த இலைகளைப் பதித்துவைத்து அதின் வலியையாற்றினான். ஆனால் அவன் வருத்தமென்பது யாதென்றறியாததால் அந்த அம்பை எடுத்து தனது கையில் குத்தி யென்ன செய்கிறதென்று பார்த்தான். அப்படிக் குத்தினதினால் தனக்குண்டான நோவைப்பார்த்து சகிக்கமுடியாது "ஐயோ நாம் இலேசாக கையில் வைக்கும்பொழுதே இவ்வளவு நோகிறதே; அதில் இரத்தம் புறப்படும்படியாக தைத்திருந்தது எவ்வளவு வருத்தமாயிருக்கும்" என்று எண்ணி, மறுபடியும் கண்ணீருடன் திரும்பி அப்பக்ஷியைத்தேற்ற ஆரம்பித்தான். இப்படி இருக்கும் நேரத்தில், தேவதத்தனிடமிருந்து ஒரு வேலைக்காரன் வந்து, "எனது எஜமானர் ஒரு அன்னத்தை வீழ்த்தியிருக்கிறார். அதைத் தாங்கள் என்

னிடம் கொடுத்து அனுப்பும்படி பிரார்த்திக்கிறார்" என்று சொன்னான். அதற்கு ஸித்தார்த்தன், "அந்தப் பக்ஷி இறந்திருந்தால், அந்தக் கொன்றவனிடத்தில் அனுப்புவது சரியாயிருக்கும். ஆனால் பக்ஷியிறக்கவில்லை. என் அத்தான் அதன் வேகத்தைக்கொன்றேயொழிய வேறில்லை" என்று மறுமொழி கொடுத்தனுப்பினான். இதைக் கேட்டதும் தேவதத்தன், அவனிடம் நேராகவே வந்து "இக் காட்டுப்பறவை இறந்தாலும் இருந்தாலும் அதைக் கீழே கொண்டுவந்தவனுடையது தான். அது ஆகாயத்திலிருக்கும்பொழுது ஒருவருடையதுமன்று. கீழே விழுந்ததும் என்னுடையதாய்விட்டது" என்றான். அதற்கு ஸித்தார்த்தன் "நான் தரமாட்டேன். நானே அதைக் காப்பாற்றினவன்; ஆகையால் அது என்னது தான். இன்னும் உன்னுரிமையை விடாயானால் நாம் ஒரு பெரியவரிடத்திலபோய் நமது வழக்கையுரைப்போம்" என்றான். அதறகு தேவதத்தனும் சம்மதிக்க இருவரும் தமது குருவை நாடிச்சென்றார்கள். போகும்வழியில் வெகு முதியவராய், மிகக்கற்றுணர்ந்தவர்போல தோன்றின ஒருவரைக்கண்டு தமது வழக்கைசொல்ல அவர் "ஜீவன் ஏதாவது விலை

யுள்ளதானல், ஜீவனை அழிக்க வழிதேடின வனைப் பார்க்கிலும், அதைக் காப்பாற்ற வழி தேடினவனே அந்த ஜீவனுள்ள வஸ்துவுக் குரியவன். கொல்லுகிறவன் அழிக்கப்பார்க் கிருன், காப்பாற்றுகிறவனே வளர்க்கப்பார்க் கிருன். ஆகையால் அப்பக்ஷி ஸித்தார்த்தனுக் கே உரியது" என்று சொலலிப்போனர். அந் தப் பக்ஷியும் அவனிடமேயிருந்து சொஸ்த மான பிறகு தன்னினத்தைப் போய்ச்சேர்ந் தது. இப்பொழுது தான் ஸித்தார்த்தனும் வருத்தமென்பது இன்னதென்று அறிந்தான்.

இங்ஙனமிருக்கையில், ஒருநாள் அரசன் தன் மகனைப்பார்த்து "என் அருமை மைந்த னே, இந்த இனிமையான வசந்தகாலத்தில் பூமியானது தன்னிடத்துள்ள திரவியங்களை அழுப்பவனுக்குக் கொடுக்கும்படியாக எப் படி கிருஷி செய்யப்படுகிறதென்பதையும், எ னக்குப்பின் உனக்குவருகிற இந்த ராஜ்யமா னது எப்படி அதிலுள்ள ஜனங்களையும் போ ஷித்து நமது பொக்கிஷத்தையும் நிரப்புகிற தென்பதையும் பார்க்கவேண்டாமா? இந்த க்காலமானது, புதிதாய்த் தளிர்த்த இலைக ளோடும், அழகிய புஷ்பங்களோடும், பச்சை நிறமான இரத்தினகம்பளம்போன்ற புல்லோ டும் வெகு அழகாயிருக்கிறது; போவோம்

வா" என்று சொன்னான். அப்படியே அவர்கள் இருவரும் கிணறுகளும், குளங்களும், தோட்டங்களும், வயல்களும் நிறைந்த அந்த நாட்டிற்குள் சவாரிபோனார்கள். காளைகள் தமது பலமான தோள்களால் கலப்பைகளை இழுத்துக்கொண்டுபோவதையும், அக்கலப்பைகள் 'கிரீச்' என்று நிலத்தைப் பிளக்கையில் நிலமானது நீண்ட அலைகள்போலச் சுருளுவதையும், உழவோர், கலப்பையின் கொழு நிலத்தில் நன்றாய்ப்பாய, கலப்பையை நன்றாய் மிதித்துக்கொண்டு பாடுவதையும், ஸித்தார்த்தன் கண்டுகளித்தான். போகிற விடமெலாம் பச்சையாக்கிக்கொண்டு, முணுமுணு வென்று தென்னந்தோப்புகளுக்கிடையில் ஓடிக்கொண்டிருக்கிற வாய்க்கால்களும், சிறுபக்ஷிகள் கூடிப் பாடிக்கொண்டிருக்கிற சோலைகளும், ஜீவனடர்ந்து, பல்லிகளும், வண்டுகளும், தேனீக்களும் சப்தஞ்செய்துகொண்டு சலித்துக்கொண்டிருக்கிற புதர்களும், பார்ப்பவர் மனதைக் களிப்பித்தன; பருந்துகள் ஆகாயத்தில் வட்டமிட்டன; மயில்கள் வெள்ளையடித்த கோவில் மதில்களின் மேல் பறந்துகொண்டிருந்தன; நீல மாடப்புறாக்கள் ஒவ்வொரு கிணற்றிலிருந்தும் கத்தின; தூரத்தில் ஏதோ கலியாணவிருந்திற

காக நாட்டுமத்தளங்கள் அடித்தன் ; இப்படி எங்கே பார்த்தாலும் அமைதியும் நிறைவுவ் விளங்கின ; ஸித்தார்த்தனும் கண்டு சந்தோஷித்தான்.

ஆயினும் ஆழ்ந்து நோக்கும்பொழுது, இந்தரோஜாமலர்போலும் இனிதாகக் காணப்படுகிற வாழ்க்கையில், அதன் முட்கள்போல துன்பங்கள் ஒளிந்திருக்கக்கண்டான். குடியானவன் தனது சம்பளத்திற்காக நெற்றி நீர் நிலத்தில் வடிய வேலே செய்வதையும், நடுமத்தியானத்தில, எரிகிறவெயிலில், காளேகளே ஓட்டுவதற்காக, அவைகளின் சூரிய படம்போற் பிரகாசிக்கும் உடம்பில தார்க்கோலால் குத்திய புண்ணுக்குவதையும் பார்த்தான். மேலும் பல்லிகள் எறும்புகளேத் தின்பதையும், பாம்பு பல்லியைத்தின்பதையும், இவ்விரண்டையும் பருந்துதின்பதையும், மீன்குத்திப்பறவை மீன்களேப்பிடித்து விழுங்குவதையும், பூச்சிகளேப் பிடித்துக்கொண்டிருந்த சிறுகுருவியை வல்லூறுனது தூரத்துவதையும், இப்படியே ஒன்று மற்ருென்றைக் கொல்வதையும், அதை இன்னொன்று கொல்வதையும், அதுவேறென்ருல் கொல்லப்படுவதையும், இவ்விதமாக ஜீவிக்கின்ற வஸ்துக்களெல்லாம் மற்றவைகளின் மரணத்

தினலேயே பிழைப்பதையும் பார்த்தான். இந்த அழகானவெளிப்பார்வையானது, உள்ளே ஈ, எறும்பு முதல் தன் அயலானைக் கொல்கின்ற மனிதன்வரையில் உள்ள பிராணிகளெல்லாம் ஒன்றையொன்று கொலை செய்து பிழைக்கிற, ஒரு பெரிய பயங்கரமான இயந்திரத்தை மறைத்துவைத்திருந்தது. இவ்விதம் பசியால் வருந்தும் உழவோனையும், நுகக்கால்பட்டுப்பட்டுப் புண்ணுயிருக்கிற கழுத்துகளையுடைய மாடுகளையும், வாழ்வை ஒரு ஓயாச்சண்டையாக்கும்படி, ஒவ்வொரு பிராணிக்கும் இவ்வாழ்விலுள்ள பிரியத்தையும் பார்த்து, பெருமூச்சுவிட்டு "நான் பார்க்கும்படியாக வந்த சந்தோஷகரமான பூமி இதுதானா? வேலைக்காரனது உணவானது வியர்வையால் எவ்வளவு உப்பாயிருக்கிறது! காளைகளது வேலை என்னகஷ்டம்! புதர்களில பலவீனஜெந்துக்களுக்கும் பலமுள்ளவைகளுக்கும் எவ்வளவு குரூரமான சண்டை நடக்கிறது! ஆகாயத்துப் பறவைகளுக்குள்ளும் அப்படியே; ஜலத்திலும் தப்ப வழியில்லை. பார்த்ததுபோதும்" என்று எண்ணிக்கொண்டு, அடுத்தாப்போலிருந்த ஒரு நாகமரத்தடியில்போய் உட்கார்ந்து, இப்படிப்பட்ட உலகத்தின் துன்பங்களின் கா

ரணத்தையும் அவைகள் நீங்கும் வழியையும் குறித்து ஆலோசிக்கத் தொடங்கினுன். அவனது இருதயமானது விசேஷ கருணையினுலும், உலகத்தில் ஜீவிக்கிற வஸ்துக்களுக்கெல்லாம் பாவிய அன்பினுலும், அவைகளின் துன்பத்தை நீக்கவேண்டுமென்கிற ஆசையினுலும், நிரம்பப்பட்டிருந்ததினுலே, வேறு உலகவிஷயங்களுக்கு இடங்கொடாமல், இந்த ஒரு பெரிய விஷயத்திலேயே தங்கித் தியானித்துக்கொண்டிருந்தது.

இப்படிப்பட்ட மகிமைபொருந்திய தியானத்தில் அவனுக்கு நாழிகைபோவது தெரியவேயில்லை. காலமே தியானத்திலிருந்தவன் மத்தியானங்கழிந்து, அஸ்தமிக்கும் சமயத்தில் அரசனுலனுப்பப்பட்ட சில சேவகர் வந்து அவனை எழுப்பிக்கொண்டு போகும் வரையில், அதே தியானத்திலிருந்தான்.

---

## II.

### விவாகமகோற்சவம்—சிற்றின்ப சுகவாழ்வு.

இப்பொழுது நம்மிளவரசனுக்கு பதினெட்டுவயதாயிருந்தது. அப்பொழுது அரசன் ஸித்தார்த்தனுக்காக மூன்று மாளிகைகள் கட்டினான். அவைகளில் ஒன்று தேவதாரு, சந்தனம் முதலியமரங்களால் உள்வேலை செய்யப்பட்டு குளிர்காலத்திற்காகக் கட்டப்பட்டது. மற்றொன்று பச்சை, நீலம் முதலிய வர்ணங்கள் பிரகாசிக்கும் பளிங்குக்கற்களால் செய்யப்பட்டு கோடைகாலத்திற்கு சௌக்கியமாயமைந்திருந்தது. மூன்றாவது சுட்ட செங்கல்லினால் செய்யப்பட்டு நீலவோடுமேய்ந்து, அழகிய சண்பக முதலாய புஷ்பங்கள் அலரும் வஸந்தகாலத்தில் வாழ்வதற்குச் சரியாய் இருந்தது. இம்மாளிகைகளைச் சுற்றி இனிய தோட்டங்கள் பார்ப்பவர் உள்ளங்களிக்க வெகுதூரம் விரிந்திருந்தன. சலசலவென்று ஓடிக்கொண்டு, ஸ்படிகம்போலும் ஜலத்தையுடைய வாய்க்கால்கள் அத்தோட்டத்தில் குறுக்கும் நெடுக்குமாக வளைந்துகொண்டிருந்தன. அழகிய மைதானங்களும், புஷ்பச்செடிகளால் அலங்கரிக்கப்பட்ட நெடியபாதைகளும், இரவில் சந்திரகிரணங்களைப் பிரதிபலிப்பதால் உருக்கிய வெள்

ளிபோல் பிரகாசிக்கும் ஏரிகளும், நிறைந்துள்ள அவ்வுத்தியானவனமானது, ஸித்தார்த்தன் மாலைவேளைகளில் தோழருடனேயோ தனியாயோ காலத்தை விநோதமாய்க் கழிப்பதற் கேற்றதாயமைந்திருந்தது. இப்படி எல்லாம் சந்தோஷமாயிருந்தபோதிலும்—சூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அழகாய்ச் சிரித்துக்கொண்டிருக்கிற ஏரியானது, ஆகாயம் மேகத்தால் மூடப்பட்ட பொழுது, மந்தமாய் விசனகரமான பார்வையையடைவதுபோல—ஸித்தார்த்தனது மனதில் தான் முன் நாடுபார்க்கப்போன ஞாபகம் அடிக்கடி வரவும், உடனே தனது சந்தோஷகரமான பார்வை மாற அவன் தியானத்தில் அமிழ்ந்து விடுவான்.

இதையெல்லாம் நன்றாகக் கவனித்து அரசன் தனது மந்திரிகளை அழைத்து, "ஐயன்மின்! ஸித்தார்த்தன் பிறந்த சமயத்தின், நக்ஷத்திரங்களின் நிலையைப்பார்த்து சோதிடர்கள் சொன்னதை யறிவீர்களல்லவா? 'அரசாளவிரும்புவனாகில் அரசர்க்கரசனாய் உலகெலாமொருகுடைக்கீழாக்கி ஆளுவன்;' இப்படித்தான் அவனிருக்கவேண்டுமென்பது என் விருப்பம். 'அல்லது—நாடுதுறந்து, வீடுதுறந்து, போகந்துறந்து மிகக்கஷ்டப்

பட்டு—என்ன காரியத்திற்காகவோ—ஞானி யாவாரென்று சொன்னார்கள். இப்பொழுது அவனுடைய நடையைப்பார்த்தால், பின் சொன்னவழிக்குத் தான் வருவான்போற் றோற்றுகின்றது. அப்படியொன்றும் சம்பவியாமல், என் விருப்பப்படி அவன் ஆவதற்கு வழியென்ன?' என்று கேட்டான்.

அவர்களுள் முதன்மையானவன், அதற்கு, "மன்னவ! காதலானது இவையெல்லாவற்றையும் சொர்ஸ்தப்படுத்திவிடும். இதுவரையில் சிறுபையனாயிருந்ததினால் அப்படியிருந்தான். அவனுக்கு வெகு அழகினளாய் ஒரு மனைவி தேடிக்கொடும். அவளது, சுவர்க்கத்தையும் மறக்கடிக்கும் கண்களிலும், அமிர்தந் தவழுமிதழிலும் கிறுங்கிக்கிடப்பான். இருப்புச் சங்கிலிகளால் கட்டப்படாத மனதை பெண்ணின்சிறுகூந்தல் கட்டும்" என்று சொன்னான்.

அதுவே சரியென்று எல்லாரும் ஒப்புக்கொள்ள, அரசன் பின்னும் அவர்களை நோக்கி "நாம் ஒரு மனைவி தேடிக்கொடுப்போம்; அவன் மனது மற்றொருவளிடம் செல்லும். அவன் தன் மனதுக்கிசைந்தபடி ஒருவளைப் பொறுக்கியெடுத்துக்கொள்ள ஓர் உபாயஞ் சொல்லுங்கள்" என்று கேட்க, அவர்களி

லொருவன் "கொற்றவா! இப்பொழுது ஸித்தார்த்தனது பிறந்த நாள் கிட்டிவருகிறது. அந்நாளில், இளவரசன் இவ்வூர்ப் பெண்களுக்கெல்லாம், இனும்கொடுப்பதாக முரசறைவியும். அப்பொழுது எல்லாரும் இவ்விடம் வருவார்கள்; ஸித்தார்த்தன் யார் மேல் பிரியம்வைக்கிருனென்பதை யறியலாம்" என்ருன்.

அப்படியே அரசனும் முரசறைவித்தான். பிறந்தநாளன்று அவ்வரண்மனைக்காட்சி மிக விநோதமாயிருந்தது. அந்நகரத்துப்பெண்களெல்லாரும், இளவரச ஸித்தார்த்தன்கையிலிருந்து இனும் வாங்கப்போகிருமென்ற எண்ணத்தினுல் களிப்புற்று, தமது ஆபரணங்களையெல்லாமணிந்து, தமது உயர்ந்த வஸ்திரங்களைத் தரித்து, தங்களால் கூடியவரை தம்மைச் சிங்காரஞ்செய்துகொண்டு, அரண்மனையில் வந்து கூடினுர்கள். அந்நகரத்துப் பிரபுக்களெல்லாரும் இவ்விநோத காட்சியைப்பார்க்கப் பேராவல்கொண்டவர்களாய் அரண்மனை சென்ருர்கள். மிகுந்த கோலாகலத்துடன் இனுங்கொடுத்தலாரம்பிக்கப்பட்டது. பெண்களெல்லாரும் ஒவ்வொருவராக, தம் வடிவுக்கேற்றபடி பரிசுகளைப் பெற்றுக் கொண்டு போனுர்கள். ஆனல் அப்படி வாங்

கினவர்களில் ஒரு
நிமிர்ந்து பார்க்க
னது அழகும், கம்
றமும், சாந்தமான பார்வையும், தெய்வத்
தன்மையவாய்த் தோன்றியவேயன்றி, தாங்
கள் சிறிதும் ஆசைவைக்கத்தக்கதாய்த் தோ
ன்றவில்லை. இப்படி ஒவ்வொருவரும் தலை
யைக்குனிந்துகொண்டே பரிசுபெற்றுப்போ
க, பரிசுகளெல்லாம் செலவழிந்துபோயின.
அப்பொழுது 'திரைக்கடலமுதேயுருக்கொ
ண்டது'போலினியபார்வையும் 'மலைமகள்
கருணையும் கமலையினெழிலும்' விளங்கிப் பிர
காசிக்கும் வதனத்தையும், 'நறவுமிழ்தாமரை
பொலிவிழந்திருப்ப' இவ்வாண்மனை புகுந்த
செல்வியோவெனக் கண்டோர் மடங்கும்
அழகையும் உடையளாய், யசோதரை யென்
பவள் அங்குவந்தாள். அவள் மற்றவர்களைப்
போல் தலைகுனிந்து நில்லாது, நிமிர்ந்து
நின்று, இளவரசனை நோக்கி இனிதாய் முறு
வலித்து, "என் ஐய! எனக்குப்பரிசொன்று
மில்லையோ?" என்று கேட்க, ஸித்தார்த்தன்
"இந்நகர்க்கு ஓர் பெருமையாய் விளங்கும்
என் இனிய சகோதரி! எல்லாம் ஆய்விட்
டது; ஆயினும், எனக்காக இதைவைத்துக்
கொள்" என்று தன்மார்பிலணிந்திருந்த ஓர்

ஆரத்தையெடுத்து அவள் [illegible]கழுத்திலிட்டான். அப்பொழுது அவர்கள் ஒருவரை [illegible]ருவர் பார்த்த[illegible]யில் [illegible]கிற்று.

இதையெல்லாம் பார்த்திருந்த மந்திரிகள் அரசனிடம் இந்த சமாசாரத்தைச்சொல்ல, அரசன் உடனே யசோதரையின் தந்தையாகிய ஸூப்ரபுத்தன் என்பவனை வரவழைத்து, அவன் பெண்ணைத் தன்பிள்ளைக்குக் கலியாணம் செய்துகொடுக்க வேண்டிக்கொண்டான். ஆயினும் அக்காலத்தில், அரசர், பிரபுக்களுக்குள்—ஒரு பெண்ணைக் கலியாணஞ்செய்ய விரும்புகிறவர்களில் எவன் மற்றவர்களைவிட விற்போர், வாட்போர், குதிரைசவாரிசெய்தல் முதலிய க்ஷத்திரியவிருத்திகளில் தன் சாமர்த்தியத்தைக் காண்பிக்கிறானோ அவனுக்கே பெண்ணைக்கொடுப்பது வழக்கமாயிருந்தது. ஸூப்ரபுத்தனும், தான் வழக்கத்தினின்று தவறேன் என்று சொல்லவே, அரசனுக்கு தன்மகன் இவைகளில் மற்றவர்களை ஜயிப்பானோவென்று சந்தேகம் பிறந்தது. ஆனால் ஸித்தார்த்தன் சிறிதும் அஞ்சாமல், தன் திறதனை மற்றவர்களுடன் போட்டி போட்டுக் காண்பிப்பதாக ஒப்புக்கொண்டான். அப்படியே தன்காதலியை மணந்துகொள்ள விரும்பிவந்தவர்களையெல்லாம் ஜயி

த்து, தன் உரிமையை ஸ்தாபித்தான். அவ்விரு காதலர்க்கும், வேதவிதிப்படி மிகுந்த கோலாகலத்துடன் கலியாணம் நடந்தேறியது. இவ்விதமாக ஸித்தார்த்தன் இவ்வுலகத்திற்குக் கட்டுப்பட்டவனானான்.

ஆயினும் அரசன், ஸித்தார்த்தன் துறவி வழியில் இறங்காவண்ணங்காக்க, காதலைமட்டும் நம்பியிருக்கவில்லை. காமனரண்மனையென்று சொல்லும்படி ஒரு மாளிகையும் கட்டுவித்தான். அரண்மனையைச் சுற்றிய பெரிய உத்தியான வனத்தில், பட்டணத்தினின்று வெகு ஒதுங்கி, ஒரு குன்று இருந்தது. நகரச்சந்தடியும், ஓசையும், நன்றாகக்கேளாமல், ஒரு புதரிலிருந்து வரும் வண்டுகளின் ரீங்காரம்போல அங்கு வெகு அமர்ந்து கேட்டது. அக்குன்றின் அடிவாரத்தில் ரோஹிணீ நதியானது அதைச்சுற்றி யரித்து ஓடிக்கொண்டிருந்தது. அக்குன்றினின்று வடக்கு முகமாகப்பார்க்க—ஹிமயமலைத் தொடரானது ஒன்றின்மேலொன்றாயுயர்ந்து கண்ணுக்கெட்டாதவுயரம், பனியால் மூடப்பட்ட தனது வெள்ளிய சிகரங்களையெழுப்பி, ஆகாசத்தில் மறைந்துபோயிற்று. அம்மலைத் தொடரின் சாரல்களினடிப்பக்கத்திலுள்ள காடுகள், வெள்ளிய சிகரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கை

யில், அம்மலையணிந்த பச்சையாடைபோல் தோன்றின. அக்குன்றின் மற்றப் பக்கங்களில், தோட்டங்களாலும் வயல்களாலும் மூடப்பட்ட சமவெளி, அழகிய பச்சைக் கம்பளம் விரித்ததுபோலப் பாவியிருந்தது. இவ்வித அழகிய காட்சியையுடைய அக்குன்றின்மேல், அரசன் 'விசிரமவன'மென்கிற அரண்மனையைக் கட்டச்சொன்னான். அவ்வரண்மனைக்குவழி, மயன் நிருமித்ததோ வென்று சொல்லும்படி அழகாய்ச் சித்திரித்த ஒரு பளிங்கு வாசலின்வழியாய் உள்கொண்டுவிட்டது. அதின் கதவுகள் சந்தனத்தினால் செய்யப்பட்டு தந்தத்தினால் உள்வேலை செய்யப்பட்டிருந்தன. அதின்வழியாக உள்சென்றதும், 'வஸந்தன'மிருப்பிடமிதுவோவென்று கண்டோர் அதிசயிக்கும்படியான காட்சி கண்ணில் தென்பட்டது. அழகிய பூங்கொடிப் பந்தர்களும், பளிங்குக்கற்கள் பாவிய நடைகளும், உன்னதமான தூண்களால் தாங்கப்பட்டு அழகே யுருவெடுத்து வந்ததுபோல் விளங்கும் வஸந்தமண்டபங்களும்; மனிதர் சிற்பத்திறமை இவ்வளவுதூரம் செல்லுமென்று வரையறுத்துக் காட்டுவதற்காகச் செய்யப்பட்டனவாய்த் தோன்றினவேயன்றி, மனிதர் வசிக்கச் செய்யப்பட்டனவாகத் தோ

ன்றவில்லை. அங்கு, இனிய விசாலமான கண்
களையுடைய மான்கள் நிர்ப்பயமாய் ஓடியாடி
விளையாடின. மயில்கள் நீலமணிகளிழைத்
ததுபோற் பிரகாசிக்கும் தமது தோகைகளை
ஒருபக்கம் விரித்தாடிக்கொண்டும், ஒருபக்
கம் அழகாயிழுத்துக்கொண்டும், உல்லாச
மாய் நடந்துகொண்டிருந்தன. கிளிகள் பழத்
தினின்று பழத்திற்குச் சாடி, கொஞ்சிக்குலா
வின. மாடப்புறாக்கள் தமக்காகக் கட்டப்
பட்ட பொன் மேடைகளில் உட்கார்ந்து ஒன்
றையொன்று உபசரித்து விளையாடின. தூய
வர்ணங்கள் பொருந்திய வேறு பல பறவை
கள், ஒரு வீட்டுக் குழந்தைகள்போல அந்நி
யோந்நியமாய் சஞ்சரித்துக்கொண்டிருந்தன.
அணில்கள் சிறிதும் மனிதர் பயமின்றி ஓடி
ஆடிக்கொண்டிருந்தன. தாமரை, அல்லி முத
லிய புஷ்பங்கள் அலர்ந்து, ஸ்படிகம்போன்ற
ஜலம் நிறைந்து, பளிங்குக் கற்களால் கட்டிய
படிக்கட்டுகளுடன் கூடின தடாகங்கள், சூரிய
கிரணங்களைப் பிரதிபலிப்பதால் சொர்ணமய
மாக ஜொலித்துக்கொண்டிருந்தன. வஸந்த
மண்டபங்களில்—இராமாயணம், மகாபாரத
ம் முதலான இதிகாஸங்களிலிருந்தும், புரா
ணங்களிலிருந்தும் உள்ள கதைகளைக் குறிப்
பிக்கும் படங்கள் அக்காலத்திய உயர்ந்த

சிற்பிகளால்வரையப்பட்டு மாட்டப்பட்டிருந்தன. அவ்விடத்திலுள்ளவர்களும்—எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன்—ஏவிய பணிவிடைகளை வெகு சந்தோஷமாய் செய்துவந்தார்கள். எங்கு பார்த்தாலும் சமாதானமும், சந்தோஷமும், அழகும் நிரம்பியிருந்தன.

அவ்வரண்மனையின் உள்ளறைகளைப் பற்றி வர்ணிப்பது மனிதர் நாவுக்கெட்டாதது. இவ்வுலகத்திய சுகங்களையெல்லாம் உருட்டித்திரட்டி வைத்தாற்போலிருந்தது. அதற்குள் செல்லும்வழி ஓரினிய பூஞ்சோலையின் வழியாகப்போயிற்று. அச்சோலையின் மத்தியில், நீலரேகைகளோடிய பளிங்கினல் செய்த படிகளையுடைய ஓர் இனியதடாகம், மரங்களினூடாகவரும் சூரியரஸ்மிபடுவதனல் தகதகவென்று எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அதின் கரைகள், எவ்வித உஷ்ணமான கோடையிலும், இராக்காலம் போல் குளிர்ந்திருந்தன. இதனருகில்தான் ஸித்தார்த்தனது முக்கிய அறையிருந்தது. அதின் வாசலில், “வனப்பில் மிக்கோர்க்கேயல்லாது மற்றவர்க்கு வழிவிடோம்” என்று தடுப்பதுபோல் சரிகைப்படுதாக்கள் தொங்கிக்கொண்டிருந்தன; அதின் உட்பக்கம்—

முல்லை மல்லிகை சண்பகமுதலாய புஷ்பங்களை அடித்துக்கொண்டுவரும் தென்றல்போன்ற இளங்காற்றுகள் எப்பொழுதும் வீசிக்கொண்டிருந்தன. இரவோ பகலோவென வித்தியாசந் தெரியாதபடி வாசனை யூட்டிய தைலங்களால் எரிக்கப்பட்ட விளக்குகள் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அதின் இடங்களில் வைக்கப்பட்டு, ஹிமயமலையின் பனிக்கட்டிகளால் உறைத்த சர்பத்துகள் முதலிய இனிய பதார்த்தங்கள் பார்ப்பவரை உண்ண வருந்தியழைத்தன. அவ்விடத்திய ஆகாயம், சண்பக முதலிய புஷ்பங்களின் வாசனையாலும், சந்தனம் பனிநீர் முதலியவைகளின் வாசனையாலும், நிறைந்து பரிமளித்துக்கொண்டிருந்தது. மணிக்காலமளிகள்மேல் 'துணைபுணரன்னத்தூவியணை'கள் ஆங்குளோர் உடலைத் தாங்கவேண்டிக்கொண்டன. ஸித்தார்த்தனிட்ட கட்டளையைத் தலைமேல் தாங்கி மலர்ந்த முகத்துடன்செய்ய அழகிய நாட்டியச் சிறுமியர் காத்துக்கொண்டிருந்தார்கள். அவனது பொழுதுபோக்குக்காக அவனைத் தமது நடனத்தால் களிப்பித்து, ஆயாசமான நேரங்களில் அவனையும் அவனது உயிருக்குயிரான யசோதரையையும், வீணை முதலிய வாத்தியங்கள் சேர்ந்த கானத்தால் உற்சாகப்

படுத்த நாடகசாலைப் பெண்கள் தயாராக விருந்தார்கள். இவ்விதமான இன்பங்களுக்கிடையில்—யசோதரையுடன்—தன்னைத் தவிர உலகம் வேறு இருக்கிற தென்பதை யோராமலே காலங்கழித்து வந்தான்.

இதுவன்றி, அரசன், இம்மதில்களுக்குள், மரணத்தையாவது, மூப்பையாவது, பிணியையாவது, அல்லது வேறு துன்பம் எதையாவது பற்றி ஒருவரும் பேசக்கூடாதென்று கட்டளையிட்டான். யாராவதொருவர், பாடும் பொழுதாவது, ஆடும்பொழுதாவது கொஞ்சங்களைத்து முகஞ்சோரவிட்டால், உடனே அவர்கள் அவ்வரண்மனையினின்றுந் துரத்தப்பட்டவர்கள் தான். இந்த உத்தரவின்படி எல்லாம் நடந்தேறிவருகிறதாவென்று பார்க்கும்படி அரசன் சில பெண்களை வைத்திருந்தான். மேலும் வாடின புஷ்பங்களும் இலைகளும் இருந்த இடம் தெரியாது மறைக்கப்பட்டன. கண்ணுக்கினியவையல்லாத வஸ்துக்களெல்லாம், அவ்விடத்திருந்து நீக்கப்பட்டன. இவ்விதம், அரசன் தன் மகன் உலகத்தின் துன்பங்களினின்று ஒதுங்கி நடந்தால், பின்பு அவைகளினால் தன் இன்ப நிலையைவிட்டு நீங்காமல், அரசர்க்குரிய அந்தஸ்துடன் வாழ்வான்; அப்பொழுது அவன்

அரசர்க்கரசனாய் வாழும் பாக்கியந் தனக்குக் கிடைக்குமென்று எண்ணி, எல்லாம் ஏற்பாடு செய்தான். இதுவும் போதாதென்று, அரசன் இக்காமனுறைவிடத்தைச்சுற்றி ஒரு பெரிய மதில் கட்டுவித்து, அதன் வாசல்களில் காவல்வைத்து, ஒருவரும் தன்னாணையின்றி வெளியே நடக்கக்கூடாதென்று கட்டளையிட்டான். ஸித்தார்த்தனும், இச்சிற்றின்பசிறையில் காலத்தைக் கழித்துவந்தான்.

---

## III.

### நகர்சுற்றப் போய் மூப்புப் பிணி மரணம் மூன்றையும் கண்டது—உயிர்வாழ்க்கையின் உண்மைநிலை.

இப்படி நம்மிளவரசன் இச்சிற்றின்ப வீட்டில், அன்பும் இன்பும் அல்லாது—இவ்வுலகத்தார்க்கு வரும் மூப்பும், பிணியும், மரணமும், துன்பமும், துயரும், உபாதையும்—தூங்கும்பொழுதுண்டாகிற அற்புத அநுபவங்களின் மூலமாயொழிய—வேறு விதத்திலும் அறியாதவனாய் சிலகாலம் வாழ்ந்து வந்தான். அப்படி—யசோதரையின் மடிமீது தலைவைத்து நித்திரை செய்யும்பொழுது காணும் சொப்பனங்களின் நடுவில் "ஐயோ! இவ்வுலகின் துயரைக் கண்ணுற்றேன்; கூடிய சீக்கிரத்தில் மீட்க வருவேன்" என்று வாய்

குழறிப் பேசுவான். அப்பொழுது அவன் முகத்தில் தோன்றிய துன்பக்களையை நோக்கிய யசோதரை, "என் ஐயனை யாது வருத்துகிறது?" என்று கேட்க அவன் உடனே விழித்துக்கொண்டு தன் சொப்பனத்தின் ஞாபகம் மறைய, இனிதாய் புன்னகைசெய்து, தனதருகிலுள்ளவர்களுள் ஒருவனை வீணையையெடுத்து வாசிக்கச்சொல்லுவன். இவன் தூங்கும்பொழுது வாசித்த வீணையின் கானம் ஒருதடவை பின்வரும் அருத்தத்தை உள்ளமைத்து, தேவர்கள் பாடினதைப்போல் சொப்பனத்தில் தோன்றிற்று :—

"சுகத்தை நாடி யலறியும் சுகத்தையடையாதிருக்கும் காற்றின் வார்த்தைகள் நாங்கள். காற்றானது எப்படி ஒருபொழுது மெதுவாசப் பெருமூச்சுவிட்டுக்கொண்டும், மறுசமயம், ஓ! வென்றலறிக்கொண்டும், ஒருபொழுது இலேசாகப் புலம்பிக்கொண்டும், மறுசமயம் பயங்கரமான இடி முழக்கத்துடன் புசலாயடித்துக்கொண்டும் இருக்கிறதோ அதுபோலத்தான் மனிதனது வாழ்க்கையும்.

"நாங்கள் எவ்விடமிருந்து, என்னத்திற்காக வருகிறோமென்பதையும், நீங்கள் எவ்விடமிருந்து வந்து என்னத்திற்காக உயி

வாழ்கிறீர்களென்பதையும் நீவிர் அறியமாட்டீர்கள். நாங்களும் இவ்வுலகத்தைப்போலவே மாறுபடும் ஒரு உலகினின்று வருகிறோம். எங்களுக்கதினால் யாது சுகம்?

"ஸ்திரம்போல்தோற்றும் இவ்வின்பத்தினால் உனக்குத்தான் யாது சுகம்? காதலானது எப்பொழுதும் நிலைத்திருப்பதானால், இதில் ஏதாவது சந்தோஷமிருக்கலாம். ஆனால் இவ்வுலகத்திய விஷயங்களெல்லாம் காற்றைப்போல மாறுபட்டுக்கொண்டு—வீணையால் வாசிக்கும் ஸ்வரங்கள்போல் சிறிது காலமட்டுமே தரித்திருக்கின்றன.

"ஓ மாயாபுத்திரா, இவ்வுலகத்தை யெப்பொழுதும் வலம் வருவதினாலேதான் இத்தந்திகளின் மூலமாய் எங்கள் விசனத்தைத் தெரிவிக்கிறோம். எத்தனையோ தேசங்களில் திரிந்து எண்ணிறந்த கஷ்டங்களையும், எங்கு பார்த்தாலும் அழுதகண்களையும் பிசைந்த கைகளையும் பார்ப்பதினாலேயன்றோ நாங்கள் சிரிப்பதேயில்லை?

"ஆனால் நாங்கள் இவ்வுலகத்திற்காக விசனித்தபோதிலும், அதினுடைய பேதைமையைப்பார்த்து நகைக்கிறோம். ஏனெனில் தங்கள் மனது ஆசையுடன் கட்டிக்கொள்ளும் வஸ்துக்களெல்லாம் நிழல்போல் பொய்மை

யானதென்று இவ்வுலகத்தவர் அறிவார்களே யானல் இவ்வின்பங்களை நிலைநிறுத்தமுயல் வது—ஓடுகிறமேகத்தை நிறுத்தப்பார்ப்பது போலென்று—விட்டுவிடுவார்கள்.

*          *          *          *

“எப்பொழுதும் அலைந்துகொண்டிருக்கும் காற்றின் வார்த்தைகள் நாங்கள். இராஜ புத்திரா! நீயும் உன் மனவமைதியை நாடியலைவாயாக. காதலைக்காதலர்க்கு விடுத்து, இவ்வுலகத்தின் துன்பத்திற்காக இவ்வாடம்பரத்தைவிட்டு தனியாய்க்கடுவழி நடப்பாயாக!”

*          *          *          *

இது நடந்த சில நாளுக்குப் பிறகு ஒரு நாள் சாயந்திரம் தனது அழகிய பெண்டிர்ப் படைசூழ உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுது, அவர்களில் ஒருவளாகிய சித்திரையென்பவள் நேரம்போவதற்காக விநோதமாய்—சமுத்திரக் கரையோரத்தில்—ஜனங்கள் தினம் சூரியன் கடலுள் அமிழ்வதைப் பார்க்கும்—ஒரு தேசத்தைப்பற்றியும், அதிலிருந்த ஒரு மாயக்குதிரையைப்பற்றியும் ஒரு கதை சொன்னாள். அக்கதையைக் கேட்டதும், ஸித்தார்த்தனுக்கு தான் உலகத்திலுள்ள தேசங்களைப் பற்றிக் கற்றதெல்லாம் ஞாப

கத்திற்குவந்தது. உடனே அவன் "இவ்வுலகமெல்லாம் இம்மதிற்குள் அடங்கியிருப்பதுபோல, இதுவரை இதனுள்ளேயே வளையவந்துகொண்டிருந்தேன். ஆயினும் இப்பொழுது, மதிற்கு வெளியேபோய் அரசரல்லாத மற்ற ஜனங்கள் எவ்விதமாக வாழ்கிறார்களென்பதை அறிய ஆவலுள்ளவனாயிருக்கிறேன்." என்று, அன்று தன்னைப்பார்க்க வந்த அரசனிடம் சொன்னான். அரசனும் அதற்குச் சம்மதித்துவிட்டுப் போனான். ஆனால் அரசன் சும்மாவிருக்கவில்லை. உடனே ஆட்களையனுப்பி "இளவரச ஸித்தார்த்தன் இந்நகரத்தில் நாளைககாலையில் பவனிவரப் போகிறார். ஆனதினால், பாதைகளையும் வீதிகளையும் நன்றாகப்பெருக்கி, சிங்காரிக்கவேண்டியது. வீடுகளெல்லாவற்றையும் நன்றாக வெள்ளையடிக்கவேண்டியது. அமங்களமான பார்வைகளொன்றும் கண்ணுக்குத் தட்டுப்படக்கூடாது. எங்கு பார்த்தாலும் சந்தோஷகரமாகவே யிருக்கவேண்டும்" என்று பறைசாற்றுவித்தான். காலமே ஸித்தார்த்தனும், சன்னனென்ற சாரதியினால் நடத்தப்பட்ட இரதத்தின் மேல் ஏறிக்கொண்டு நகரத்தைப் பார்க்கப் புறப்பட்டான்.

அரசனது திட்டப்படி எல்லாம் வெகு

மனோகரமாகவேயிருந்தது. அரசனது வெள்ளைக் குதிரைகள் கட்டிய இரதத்தைச் சூழ்ந்துகொண்டு ஜனங்கள் ஆசி கூறியழைத்ததையும், இந்த அன்பும் மரியாதையும் உள்ள ஜனங்கள் உல்லாசமான உடைகளையுடுத்துக்கொண்டு சந்தோஷமாயிருப்பதையும் பார்க்க இளவரசனுக்கு மனங்களித்தது. இதையெல்லாம் கண்டு அவன் "இவ்வுலகம் இனிதாயிருக்கிறது. அரசரல்லாத இந்த ஜனங்களும் நல்லவர்களாயும் சந்தோஷமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் இவ்வளவு களிப்புற்றிருக்க நான் என்ன பாக்கியஞ் செய்தேன்! இப்படிப்பட்ட நகரங்களில் ஆளுவது எவ்வளவு சந்தோஷகரமானது! நான் வெளியில் வருவதனாலேயே இவர்கள் களிப்புற்றார்களேயானால், சந்தோஷம் எவ்வளவு சுலபமாக அடையக்கூடியது! இச்சிறிய வீடுகளே இந்நகர முழுவதையும் புன்னகைகளால் ஜ்வலிக்கச் செய்யுமானால், நான் எவ்வளவு வஸ்துக்களை வேண்டாமலிருக்கலாம்? சன்னா! இன்னும் நடத்து; நான் இவ்வுலகத்தை இன்னும் கண்டு களிக்கட்டும்" என்றான்.

இப்படியாக சிலர் ரதத்திற்குமுன்னோடி வெள்ளைப் பரிகளின் கழுத்தில மாலைகளை

யணியவும், சிலர் அவைகளுக்குத் தின்பண்டங்கள் கொண்டுவந்து கொடுக்கவும், வேறு அநேகர் ரதத்தைவளைந்துகொண்டு "நமது இளவரசர்க்கு ஜே! ஜே!" என்று கூவி ஆர்ப்பரிக்கவும், இவ்விதமான கோஷங்களுடன் இளவரசனும் நகரம் சுற்றிவந்தான். அரசனது கட்டளைப்படி எங்குபார்த்தாலும் மலர்ந்த முகங்கள் விளங்கிக்கொண்டிருந்தன; மங்களகரமான காட்சிகள் நிறைந்திருந்தன.—ஆயினும் விதியைத் தடுக்கவல்லார் யாவர்? பாதையில்போய்க்கொண்டிருக்கும் மத்தியில்—தான் மறைந்திருந்த குடிலினின்று வெளிப்பட்டு, மெல்ல மெல்லத் தள்ளாடிக்கொண்டு மாமிசமில்லாத எலும்புகளின்மேல் மூடிக்கொண்டு திரைத்திருந்த தோலையுடைய, மிக்க வயது சென்ற ஓர் கிழவன் நடுவீதியில் நகர்ந்துவந்தான். அவன் முதுகு தள்ளாதவயதினால் கூனியிருந்தது. அவனது கண்ணிமைகள் வெகுகாலத்துக் கண்ணீரிலடிபட்டுத் துருப்பிடித்ததுபோலச் சிவந்திருந்தன. இருந்த இடம் தெரியாது உட்குழிந்த கண்கள் சலனமற்று மங்கிக்கிடந்தன. பற்களற்ற தாடைகள், இவ்வித கோஷத்தைக்கண்ட பயத்தினாலோ, அல்லது, சுபாவமாயுள்ள வாதத்தினாலோ ஒன்றோ

டொன்று அடித்து நடுங்கிக்கொண்டிருந்த அவன் ஒருகையால் தள்ளாடிகொண்டிருந்த உடம்பைத்தாங்க ஓர் தடியைப்பிடித்துக்கொண்டிருந்தான். மற்றொருகையான மூச்சுவிடுகிற கஷ்டத்தால் வருந்திக்கொண்டிருந்த மார்பை, மார்பெலும்பை, சாந்தபடுத்துவதுபோல், அதின்மேல் அழுத்திக்கொண்டிருந்தது. இவ்வித அலங்கோலத்துடன் அவன் நடுவீதியில் நின்று, "நற்சனங்களே! என்வயதிற்கும துர்ப்பலத்திற்கும் இரங்கி எனக்குப்பிச்சை கொடுங்கள்" என்று புலம்பினான். உடனே இருமல்வந்து தொண்டையை யடைத்துவிட்டது. ஆயினும் அவயவங்களையெல்லாம் வலித்துக்கொண்டு இருமுகிற மத்தியிலும் ஒருகையை நீட்டி "பிச்சை" என்று முணுங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது அங்கிருந்தவர்கள் அவனை "இளவரசன் வருவதைப் பார்க்கவில்லை? போ! உன் குடிலுக்குள்!" என்று உதைத்துத் தள்ளியிருப்பார்கள்; ஆனால் ஸித்தார்த்தன் அவர்களைக் கையமர்த்தி சாரதியைப்பார்த்து, "சன்னா! இவ்வுருவம் யாது? மனிதனைப்போல் தோன்றியபோதிலும் மற்ற மனிதர்களைப்போலல்லாமல், எவ்வளவோ கூனியும், மிக விகாரமாயும், பயங்கரமாயும்

இருக்கிறனே. இப்படியும் மனிதர்கள் சில சமயங்களிற் பிறக்கிறார்களோ? அவனது எலும்புகள் இப்படி வெளியில் தெரிகின்றனவே, அவனுக்கு என்ன, ஆகாரம் கிடைக்கிறதில்லையோ? இம்மனிதனுக்கு யாது துன்பம் நேரிட்டது?" என்று கேட்க;

அதற்கு சாரதி, "என் இன்னரசே! இவன் வயது முதிர்ந்த ஒரு மனிதனேயல்லாமல் வேறில்லை. சற்றெண்பது வருஷங்களுக்கு முன் இவன் முதுகு நிமிர்ந்திருந்தது. அவன் கண்கள் பிரகாசமுள்ளனவாயும், அவன் உடம்பு பார்க்க நன்றாயும், இருந்தன. இப்பொழுது கள்ளவயது, அவனிரத்தத்தை யுறிஞ்சி, அவன் பலத்தையழித்து, அவனது புத்தியையும் மருக்கிவிட்டது. விளக்கிலுள்ள எண்ணெயெல்லாம், எரிந்தாய்விட்டது; திரியும் அநேகமாய் எரிந்து கரியாய்விட்டது; ஒரு சிறு பொறிமாத்திரம் நின்று சிறிது ஒளிவிட்டுக்கொண்டிருக்கிறது. மூப்புவரும் பொழுது எல்லாம் இப்படித்தான். நீங்கள் ஏன் இதைக் கவனிக்கவேண்டும்?" என்று மறுமொழி சொன்னான். அப்பொழுது அரசன், "இம்மாதிரி மூப்பு வெகு அபூர்வமோ? அல்லது மற்றவர்களுக்கும் வருமோ?" என்று வினவ; சாரதி "என் ஐய!

இங்கு நிற்பவர் எல்லோரும் அவனவ்வளவு காலம் ஜீவித்தால் அவனைப்போல் ஆவார்கள்" என்றான். அரசன் மறுபடியும், "ஆனால் நானும் இவ்வளவு காலமிருந்தால் இப்படியாவேனோ? என் யசோதரையும், மற்றுமுள்ள பெண்களும் எண்பதுவருஷமிருந்தால், இப்படி மூப்பு அவர்களுக்கும் வருமோ?" என்று கேட்க சாரதி "ஆம்" என்றான். அப்பொழுது அரசன், "ஆனால், ரதத்தைத் திருப்பி வீட்டிற்குக் கொண்டுபோ. நான் பார்க்கக்கருதாததைப் பார்த்துவிட்டேன்; போதும்!" என்றான்.

அன்று முதல் ஸித்தார்த்தனது நினைவெல்லாம் இதிலேயே சென்றுகொண்டிருந்தது. தானும் மற்றெல்லோரும் விருத்தாப்பியத்தை யடைவார்கள்; அப்பொழுது இச்சுகங்களெல்லாவற்றிலும் ஒன்றினாலாவது தம்மை சந்தோஷப்படுத்தமுடியாது; என்கிற எண்ணம் எல்லாவற்றிலும் மேலாக அவன் மனதில் மிதந்துகொண்டிருந்தது. மேலும் அரசன், நகரத்தை யெப்பொழுதும் இருப்பதுபோல தன்னிடம் காண்பிக்கவில்லை யென்பதும் நன்றாய்ப் புலப்பட்டது. அதனால் ஒருநாள் அரசனிடம் சென்று "என் தந்தையே! எனக்கு நம் நகரை இன்னும் ஒரு

தாம் பார்க்கவேண்டுமென்று ஆவலாயிருக்கிறது. ஆனல், இந்தத்தடவை நீர் முன்னடி ஒன்றும் தயார்செய்யக்கூடாது. நானும் சன்னவும் நாளைக்காலமே மாறுவேஷம் பூண்டு நாம் ஆளும் நகரைப் பார்ப்போம்" என்று சொல்ல, அரசனும் "புதிதாக வண்டியில் கட்டிய எருது எதைக்கண்டாலும் பயந்து கலையும். பழகினவுடன் சரியாய்விடும். அதுபோல இவனும் நன்ருக எல்லாவற்றையும் பார்க்கும்போது கவனிக்க மாட்டான்" என்று அப்படியே அநுமதி கொடுத்தான்.

மறுநாட்காலையில் ஸித்தார்த்தனும் சன்னவும் வர்த்தகர்போல் மாறுவேஷம்பூண்டு வெளியே புறப்பட்டார்கள். அந்நகரவீதிகளில் புகுந்து மற்ற நகர்வாசிகளுடன் நடந்து, அந்நகரத்து நல்லதும், கெட்டதுமான காட்சிகளையெல்லாம் கண்டுகொண்டுபோனர்கள். வாசலில் இழைக்கோலங்கள்போட்ட தெருக்கள் ஓசைநிறைந்திருந்தன. ஒருபக்கம் கொள்பவரும் கொடுப்பவரும் சாமான்களின் விலையை நயமாக்கச் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு பக்கத்தில் ஒரு ஆசிரியன் சில பிள்ளைகளைவைத்துக்கொண்டு அவர்களிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்

தான். ஒரு பக்கத்தில் சில ஸ்திரீகள்சேர்ந்து, அயற்பக்கத்திலிருந்த கிணற்றினின்றும் நீரைக் குடங்களில் நிரப்பி இடுப்பில்வைத்துக்கொண்டு, வம்புபேசிக்கொண்டு நடந்தார்கள். அரிசிமுதலிய சாமான்கள் நிறைந்த வண்டிகளை மாடுகள் தெருவில் தமது பலமான கழுத்தினால் கடகடவென்று இழுத்துக்கொண்டு சென்றன. ஒரு பக்கத்தில கன்னார்கள் பாத்திரங்கள் செய்வதற்காக பித்தளைமுதலிய உலோகத்தகடுகளை லொட்டுலொட்டென்று தட்டிக்கொண்டிருந்தார்கள். ஒரு பக்கத்தில் ஒரு பாம்பாட்டியைச் சூழ்ந்து அநேக சிறுவர்களும் சிறுமிகளும் கூடியிருந்தார்கள். இன்னுமொரு பக்கத்தில் மேளவாத்தியங்களுடன் ஒரு கலியாணப் பல்லக்கு போய்க்கொண்டிருந்தது. இவ்விதம் எங்கு பார்த்தாலும் ஓசையும், குழப்பமும் நிறைந்து, அவரவர் ஜோலியை அவரவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு ஸித்தார்த்தன், நகரமதில்களைத்தாண்டி நதியண்டைபோய்ச் சேர்ந்தான்.

அப்பொழுது, ஒரு கொடிய தொத்து நோயினால் வருந்துபவன் ஒருவன், பாதையைக் கடந்துகொண்டிருக்கையிலேயே வலி

யினால் கீழே தள்ளப்பட்டு, "ஐயா! என்னை யிரக்ஷியுங்கள்" என்று புலம்பினன். அவனது முகம் வலியினால் அங்குமிங்கு மிழுக்கப்பட்டு விகாரமாகத் தோன்றிற்று. அவன் கண்விழிகள் வேதனையினால் சொருகிக்கொண்டன. பெருமூச்சு விட்டுக்கொண்டு, நடுங்கிக்கொண்டிருந்த கைகளால் புல்லைப்பிடித்துக்கொண்டு, எழுந்திருக்கப் பார்த்தவன் பாதியெழுவதற்கு முன்னமே மறுபடியும் "ஐயோ!" என்றலறிக்கொண்டு, கீழே விழுந்தான். உடனே ஸித்தார்த்தன் ஓடிச்சென்று அம்மனிதனை மெல்லிய தன் கைகளால் எடுத்து இனிமையான பார்வையுடன் அவன் தலையை தன் மடிமேல் தாங்கிக்கொண்டு, "நண்பனே! உனக்கு யாதுதீங்கு சம்பவித்தது? ஏன் உன்னால் எழுந்திருக்க முடியவில்லை? சன்னா! ஏன் அவன் இவ்விதம் புலம்புகிறான்? பேசுவதற்கு வாயெடுத்தும் பேச முடியாமல் இவ்வளவு வருத்தத்துடன் பெருமூச்சுவிடுவதேன்?" என்று கேட்க, சாரதி "என் ஐய! இவன் ஏதோ தொத்துவியாதியினால் வருந்துகிறான். அவனது அவயவங்களெல்லாம் தாறுமாறாகப்போயின; முன் சரியாகப்போய்க்கொண்டிருந்த இரத்த நாடிகளில் இரத்தம் கொதித்துக் குதித்துக்கொ

ண்டோடுகிறது. சிறிது நேரத்திற்கு முன் சரியாக அடித்துக்கொண்டிருந்த இருதயம் இப்பொழுது தாறுமாருக அடிக்கிறது. அவனது தசைகளினது பலமெல்லாம் போய் விட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் அவனது நரம்புகள் தளர்ந்து அவனும் இறப்பான். ஐயனே! அவனை அப்படிவைத்துக் கொண்டிருப்பது சரியல்ல. வியாதி உம்மையும் தொடர்ந்தாலும் தொடரும்" என்ருன்.

அதற்கிளவரசன் "இவனைப்போல வருந்துபவர்கள் வேறு அநேகர் உண்டோ? எனது கதியும் இப்படியே யாகுமோ?" என்று கேட்க, சாரதி "கொற்றவா! இது அநேக விதத்தில் எல்லா மனிதருக்கும் வருகிறது. காயமென்றும், வாதமென்றும், ஜுரமென்றும் ஜன்னியென்றும் குஷ்டமென்றும் எல்லா மனிதரும் வருந்துகிருர்கள்" என்ருன். ஸித்தார்த்தன், பின்னும் "இத்தீமைகள் கவனிக்கப்படாமல் வருகின்றனவோ?" என, சாரதி "செடியிலிருந்து மெல்ல ஊர்ந்து வந்து கடிக்கும் பாம்புபோலும், வழியோரத்தில் செடிமறைவிலிருந்து பிரயாணிமேல் தாவும் வரிப்புலிபோலும், வருகின்றன" என்ருன். "பின் எல்லா மனிதரும் இவைகளுக்குப்பயந்துதான் வாழ்கிருர்களோ?

ஒருவராலும், 'நான் இன்று சுகமாக உறங்குகிறேன்; நாளை அப்படியே எழுந்திருப்பேன்' என்று சொல்லமுடியாதோ?" என, சாரதி அதற்கு "ஆம்" என்று தலையசைத்தான்.

"ஆயின், இப்படிப்பட்ட கஷ்டங்களின் முடிவென்ன? வருந்திவருந்தி கடைசியில், வருத்தத்தை சகிக்கமுடியாமல்போனால், பிறகு அவர்கள் என்னமாவார்கள்?" என்று கேட்க, சாரதி "இறப்பார்கள்" என்றான். இறப்பதாவது என்னவென்று ஆச்சரியத்துடன் ஸித்தார்த்தன் தலைநிமிர, சாரதி, "ஆம், கடைசியில் வருவது மரணம். எப்படியாவது, எந்த சமயத்திலாவது, எல்லாரும் இறப்பது திண்ணம். அதோ இறந்தவனைப் பாருங்கள்" என்று சொல்லி, நதியை சசுட்டிக் காட்டினான்.

உடனே, ஸித்தார்த்தன், அண்ணாந்து, ஆற்றோரத்தில் சில மனிதர் அழுதுகொண்டு போவதைப் பார்த்தான். அவர்களில் ஒருவன் கையினின்றும் தீச்சட்டியொன்று தொங்கிக்கொண்டிருந்தது. அவனுக்குப் பின் நான்கு மனிதர்கள் ஒரு பாடையின்மேல் ஒட்டியுலர்ந்து உருவழிந்துபோயிருந்த ஒரு பிணத்தைத் தூக்கிக்கொண்டுபோனார்கள். அப்பாடையை ஆற்றோரமாக அடுக்கப்பட்டி

ருந்த ஒரு காஷ்டத்தின்மேல் கொண்டுவைத்து நெருப்பு மூட்டினார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம், நெருப்பானது நன்றாகப்பற்றி தனது சிவந்த கரங்களால் அம்மனிதனைத் தழுவி, தனக்குள் ஐக்கியமாக்கிக்கொண்டது. கொஞ்சகாலத்தில் அக்கினி சிறிது சிறிதாகத் தணிந்து கடைசியில இங்குமங்கும் சில எலும்புத்துண்டுகளோடு கூடிய ஒருபிடி சாம்பலை விட்டுவிட்டு அணைந்துபோயிற்று.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஸித்தார்த்தன் பெருமூச்சுவிட்டுக்கொண்டு "இவ்வுலகத்தில் வாழ்பவர்களுக்கெல்லாம் வரும் முடிவு இதுதானோ?" என்று கேட்க, சாரதி "இது தான் எல்லார்க்கும் வரும் முடிவு. அதோ அவ்விறகடுக்கின்மேல் கிடப்பவன், நம்மைப்போலவே உண்டுடுத்துக் களித்து வாழ்வைவிரும்பியிருந்தான். பிறகு மலேச்சுரமோ, பாம்பு விஷமோ, ஒருசாண் கூரியசத்தியோ, யார் அறிவார்?—வந்து அவனதுயிரைமாய்த்தது. இப்பொழுது அவனுக்கு ஆசையும் இல்லை, சுகமுமில்லை, துக்கமுமில்லை; அவனது இதழ்களில் கொடுக்கும் முத்தமும், அவனதுடலைக் கரிக்கும் நெருப்பும் அவனுக்கு ஒன்றுபோலவேதான். அவன் கண்களினின்று பார்வையும், செவியி

னின்று கேள்வியும், நாசியினின்று மோப்பமும் போய்விட்டன. உயிருக்கு விளக்குத்தண்டுபோலிருந்த உடலும் போகிறதேயென்று அவனது நேசர் அழுகிறார்கள். எவ்விடத்தும் உடம்பினது கதியிதுதான். உயர்குடிப்பிறந்தோரும், தாழ்குடிப்பிறந்தோரும், நல்லோரும், தீயோரும், எல்லோரும் இறக்கவேண்டியதுதான். பின்பு அவர்கள் மறுபடியும்—எவ்விடத்திலோ, எப்படியோ, யார் அறிவார்கள்?—ஜனிக்கவேண்டும். மறுபடியும் கஷ்டங்களும், நேசரிடத்தினின்று பிரிவும் சுடலையும் திரும்பிவருகின்றன" என்றான்.

இதற்குள்ளாக ஸித்தார்த்தனது கண்கள் நீரைப்பெருகவிட்டுக்கொண்டு, அவன் ஏதோ ஒன்றைப்பற்றி ஆலோசித்ததுபோல, ஆகாசத்தை நோக்கிக்கொண்டிருந்தன. அவன் மனதில் எரிந்துகொண்டிருந்த அன்பினால், முகம் தெய்வத்தன்மையுடையதுபோல் தேஜோமயமாகப் பிரகாசிக்க, பின்வருமாறு மொழிந்தான்: "இவ்வுலகத்தின் துன்பத்தினளவையும், இன்பத்தின் பொய்மையையும் கண்டேன். உயர்ந்தது என்று சொல்லப்படுவனவெல்லாம் ஜாலமென்றும், தாழ்ந்தவையென்று சொல்வதெல்லாம் துன்பமென்

றும் அறிந்தேன். இன்பம் துன்பத்திலும்,
யௌவனம் விருத்தாப்பியத்திலும், நேசம்
பிரிவிலும், வாழ்வு மரணத்திலும், மரணம்
புதிய ஜன்மங்களிலும், முடிகின்றன. இப்
புதிய ஜன்மங்களிலும் இதுபோலவே பொய்
மையான சுகங்களும், பொய்மையல்லாத
துன்பங்களும் நிறைந்திருக்கின்றன. இப்
பொய்த்தோற்றமானது என்னையும் ஏமாற்றி
விட்டது. நானும் வாழ்வது சுகமென்றும்,
இவ்வாழ்வை சூரிய கிரணங்களையுண்டு எப்
பொழுதும் பிரகாசமாய் ஓடும் சிற்றாறு என்
றும் எண்ண; இப்படி பிரகாசமாய் புல்தரை
களினூடே பாறைகளை நெறுநெறென்று புர
ட்டிக்கொண்டு துள்ளியோடுவதெல்லாம், த
னது ஸ்படிகம்போன்ற நீரை உவர்க்கடலில் சீ
க்கிரம்கொண்டு கொட்டத்தானென்பதை மற
ந்தேன். என்கண்களை மறைத்திருந்த இருள் நீ
ங்கிவிட்டது. தம்தெய்வங்களின் பெயரை உர
க்கக்கூவியும், கவனிக்கப்படாமலிருக்கிற இம்
மனிதர்களைப்போலவே நானும். ஆயினும்,
இவர்களுக்கும் எனக்கும் எல்லாருக்கும் எப்
படியாவது உதவிவரும். ஒருவேளை, துக்
கத்துடன் மனிதர் அலறும்பொழுது காப்
பாற்ற சக்தியில்லாத இத்தெய்வங்களுக்கும்
ஒருவேளை உதவிவேண்டியிருக்கலாம். என்

னால் ஒருவனையிரக்ஷிக்க முடியுமானால் அவனை ஒருபோதும் வருந்தவிடமாட்டேன். பின், பிரமாவானவர் எப்படி ஒரு உலகத்தை சிருஷ்டித்து அதை அநாதையாக வருந்தவிடுவர்? ஏனெனில், சர்வசக்தியுடையவராயிருந்து, இப்படி விட்டிருந்தாரேயானால், அவர் நல்லவரல்ல; இரக்ஷிக்கச் சக்தியில்லாமற் போனால் தெய்வமுமல்ல.—சன்னா! வீடு திரும்புவோம் வா. என் கண்கள் பார்த்தது போதும்!"

---

### IV.

#### உலகுய்யும்வழிதேடத் தீர்மானித்தல்.

சித்திரை மாதத்துடன் வசந்தகாலமும் ஆரம்பித்தது. மா, பலா முதலிய மரங்களில் காய்கள் பழுக்க ஆரம்பித்தன. ஆம்பல், குவளை, தாமரை, தாழை, மந்தவி, சண்பகம் முதலிய புஷ்பங்களின் மகரந்தத்தையுண்டு, திரியும் தென்றலை எல்லோரும் மகிழ்ச்சியுடன் அழைத்தார்கள். சித்திராபூரணியன்று, இரவு பூமியை வெகு மெதுவாகச் சூழ்ந்தது. சந்திரனும் விரைவில் கிழக்கிலுள்ள மலைகளினின்று வெளிக்கிளம்பி ஆகாயமேறவே, ஸித்தார்த்தனது இன்பவீட்டின் மேல்பக்கமெல்லாம் வெள்ளி முலாம்

பூசியதுபோல் விளங்கிற்று. அங்கு சிறிது நேரத்திற்கெல்லாம் ஓசையடங்கவே, அரண்மனைவாயிலில் இருந்த சேவகர்கள் இடைக்கிடையே சொல்லிக்கொண்ட குறிமொழிகளின் சப்தத்தைத்தவிர எல்லாம் அமைதியாகவிருந்தது.

மாளிகைக்குள், ஸித்தார்த்தனறைக்கு முன்னறையில், ஸித்தார்த்தனது அழகிய சபையோர்களெல்லாரும் நன்றாக உறக்கத்தில் அமிழ்ந்திருந்தார்கள். அவர்களுக்கு யாது கவலை? காலைமுதல் மாலைவரை இன்பந்தரத்தக்க தொழில்களையே செய்துகொண்டு, ஸித்தார்த்தனது முகவொளியில் களித்து—பகல் முழுதும் சூரியனது பிரகாசத்தில் விளங்கிக்கொண்டிருந்து, காலையில் மறுபடியும் சூரியனது முகத்தைக்கண்டு அலருவதற்காக, இரவு முழுவதும் கண்மூடியிருக்கும் தாமரை புஷ்பங்கள்போல்—கண்வளர்ந்தார்கள். ஒருவள், ஸித்தார்த்தனை உறங்குவிப்பதற்காக பாடிக்கொண்டிருந்தவள், அப்படியே நித்திரைபோனாள். அவள் கைவிரல்கள் இன்னும் வீணைத்தந்திகளில மாட்டிக்கொண்டிருந்தன. வேறொருவள், ஒரு மானுக்கு ரோஜாமலர்களை ஊட்டிக்கொண்டிருந்தவள், கையில் சில மலர்களை வைத்துக்கொண்டு உறங்கி

விட்டாள். அந்த மான் வாயில் சில இதழ்கள் கடித்ததும் கடியாததுமாய் வெளியேதெரிய, அவள் மார்பில் தலையைவைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தது. இன்னொருவள், புஷ்பந்தொடுத்துக்கொண்டிருந்தவள், தொடுத்தமாலை அழகாய் மார்பைச்சுற்றி விழுந்து கிடக்க, சில புஷ்பங்களைக் கையில் பிடித்துக்கொண்டு தூங்கிவிட்டாள். இப்படி எல்லாரும அவரவர் ஜோலிகளின் மத்தியிலேயே கவலையின்றி கண்ணயர்ந்து நித்திரைபோனார்கள்.

அதற்கடுத்த ஸித்தார்த்தனறையில், பொன் சங்கிலிகளில் தொங்கிக்கொண்டு, வாசனை யூட்டிய தைலங்களால் எரிக்கப்பட்ட வெள்ளி விளக்குகளினின்றுவரும் ஒளியும், சாளரங்களின் வழியாய் வரும் சந்திர கிரணங்களின் ஒளியும் இனிதாகச் சேர்ந்து பிரகாசித்தன. பனிமூடிய இமயமலையினின்று வீசிக்கொண்டிருந்த குளிர்ந்தகாற்று, அத்தோட்டத்தின் சண்பகம், மல்லிகை, முல்லை முதலிய புஷ்பங்களின் மகரந்தங்களை வாரிக்கொண்டு, சாளரத்திற்குள் நுழைந்து தன் பரிமளத்தைப் பரப்பிற்று. இவைகளெல்லாவற்றிலும் மேலாய், இவைகளுக்கெல்லாம் ஒரு விசேஷ ஒளியும் வாசனையும் கொடுத்

துக்கொண்டு ஸித்தார்த்தனும் யசோதரையும மணிக்காலமளிமீது கண்ணயர்ந்தார்கள்.

அப்பொழுது யசோதரை திடீரென்று விழித்துக்கொண்டு, கண்களினின்றும் நீர்பெருக, பெருமூச்சுவிட்டுக்கொண்டு எழுந்து, ஸித்தார்த்தனது கையை முத்தமிட்டு, "என் நாத! எழுந்து உமது வாக்கின் தேறுதலையெனக்கு அளியும்" என்று புலம்பினாள். ஸித்தார்த்தன் எழுந்திருந்து "என் உயிரே! உனக்குற்றது யாது?" என்று வினவ, யசோதரை புலம்பிக்கொண்டு சொன்னாள்: "என்னிறைவ! என் வயிற்றிலிருக்கும் உமது குழவியை சீக்கிரம் பெறுவேனென்னும் எண்ணத்தினால் இன்புற்றவளாய் இன்றிரவு படுத்தேன். ஆனால், தூக்கத்தில் மிகப்பயங்கரமான மூன்று காட்சிகளைக்கண்டேன். அவைகளை நினைக்கும்பொழுது இன்னும் என் உடல் நடுங்குகிறது. ஆதிசேஷனது படத்திலிருக்கும் மாணிக்கமோ, அல்லது ஆகாயத்தில் ஒளிரும் நக்ஷத்திரங்களிலொன்றோ என்று சந்தேகிக்கும்படி பிரகாசித்த ஒரு இரத்தினத்தை நெற்றியில் தரித்து, நன்றாகப் பிரிந்த கொம்புகளையுடைய ஒரு ரிஷபம் கம்பீரமாக வீதிகளின்வழியாய் நகரவாயில்களை நோக்கி நடந்துபோய்க்கொண்டிருந்தது. அப்பொ

ழுது, இந்திரன் கோயிலினின்று ஒரு சப்தம், "இந்த எருதைப் பிடித்துக்கட்டாவிடில் இந்நகரத்தின் சிறப்பு இதினின்று வெளியேபோகிறது" என்று கேட்டபோதிலும், ஒருவரும் அதைத்தடுக்கத் துணியவில்லை. உடனே நான் உரக்க அழுதுகொண்டு அதன் கழுத்தை என் கையினல் இறுகக்கட்டிக்கொண்டேன். ஆயினும் அவ்வெருத்தரசன் தலையை யசைத்து என்னை யுதறிவிட்டு, மதிற்கதவுகளை முறித்துக்கொண்டும் அவற்றின் காவலாளர்களைக் கீழே தள்ளிக்கொண்டும்போயிற்று. மற்றொரு கனவு என்னவெனில: கண்ணைக் கவருகின்ற அழகையுடையவராயும், பிரகாசிக்கின்ற மேனியையுடையவராயும், நால்வர் அநேகந்தேவர்கள் புடைசூழ இந்நகரத்துள் புகுந்து இந்திரன்கோவிலை நோக்கிச்சென்றார்கள். உடனே அவ்விடத்து நாட்டியிருந்த பொற்கொடி அசைந்து கீழேவிழ, அதனிடத்தில், அதனிலும் பதின்மடங்கழகாயும் விசேஷ அர்த்தமுள்ள வார்த்தைகள் வரையப் பெற்றதாயும் ஒரு கொடி உயரக்கிளம்பிற்று. அப்பொழுது கிழக்கிலிருந்து மிருதுவான காற்றுவீசி, எல்லாரும் வாசிக்கும் வண்ணம் அக்கொடிச் சீலையை விரித்துக்காட்ட, நான் இதுவரை பார்த்திராத அதிசய வர்

ணங்கள் வாய்ந்த புஷ்பங்கள் ஆகாயத்தினின் றும் பொழியப்பட்டன."

அப்பொழுது இளவரசன், "என் அன்பே! இதெல்லாம் பார்க்க இனிமையான காட்சிதானே!" என்று வினவ, இளவரசி "ஆம், என் ஐய! ஆனல் இதெல்லாம், கடைசியில், 'காலம் சமீபித்தது! காலம் சமீபித்தது!' என்ற பயங்கரமான சப்தத் துடன் முடிந்தது. மூன்றுவது கனவு என்ன வெனில்: நான் உம்மைத்தேடி இவ்விடம் வந்து இப்படுக்கையைப் பார்த்தபொழுது, அங்கு தலையழுந்தாத ஒரு தலையணையும், உமது வஸ்திரமும் தவிர வேறென்றையும் காணவில்லை. என் மேலிருந்த உமது முத் தரைக்கச்சை கடிக்கும் பாம்பாகமாறிற்று. என்பாதசரங்கள் கழன்றுபோயின; என் கைக்காப்பு தறித்துவிழுந்தது. இப்படுக்கை யும் பூமிக்குள் அழுந்திற்று. அப்பொழுது, மறுபடியும் அவ்வெருது தூரத்தில் உறுமு வதையும், அக்கொடி காற்றில் வீசியடிப் பதையும், 'காலம் சமீபித்தது! காலம் சமீ பித்தது!' என்று அந்த பயங்காமான சப்தம் முழங்குவதையும் கேட்டேன், என்னிறைவ! நான் இறப்பேன், அல்லது அதிலும்கொடிது நீர் என்னைத்துறப்பீர், என்பதைவிட இக்கன

விற்கு வேறுயாது பொருள் இருக்கிறது?"
என்றுள்.

இதைக் கேட்டு, ஸித்தார்த்தன், சாயங் காலத்து சூரிய வெளிச்சம்போல் இனிமையாகப் புன்னகைசெய்து, "என் கண்ணே! மாறுதலில்லாத அன்பில் ஏதாவது சுகமிருந்தால் நீ வருந்தவேண்டாம். உன் கனவுகள் பின்வரும் தீங்குகளையே குறிப்பிட்டபோதிலும், தேவர்களே தங்களிருப்பிடத்தினின்று பெயர்க்கப்பட்டபோதிலும், உனக்கும் எனக்கும் யாதுசம்பவித்தபோதிலும், நான் யசோதரைமேல் மாருத அன்புள்ளவனுயிருக்கிறேனென்பதை நீ நிச்சயமாயறி. நான் சில நாட்களாக, வருந்துமிவ்வுலகை யிரக்ஷிக்க ஓர் வழியைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன் என்பதை நீயறிவாய். காலங்கூடிவரும் பொழுது எது சம்பவிக்கவேண்டுமோ அது சம்பவிக்கும். நானறியாத உயிர்களுக்காகக் கவலைப்பட்டு, எனதல்லாத துயரங்களுக்காக விசனப்படுகிறேனுனல், என் வாழ்வை இனிமையாக்கும் இவர்கள் மேலும், எல்லாரிலும் எனக்கு அருமையாயும் சமீபமாயும் இருக்கிற உன்மேலும், என் அன்பு எப்படிச் செல்லவேண்டுமென்பதை நீயே யறிந்துகொள். என் அருமைக்காதலி! உனக்கு என்ன சம்ப

வித்தபோதிலும், நான் எல்லாரிடத்திலும் பூரண அன்புள்ளவனுயிருத்தலால, உன்னிடத்தும் விசேஷ அன்புள்ளவனுயிருக்கிறேனென்பதையும், நான் எல்லார்க்காகவும் தேடுவது முக்கியமாக உனக்காகவும் தேடுகிறேனென்பதையும், நன்ருக மனதில் வைத்துக்கொள். இனி நீ தூங்கலாம்; நான் உட்கார்ந்துகொண்டு உன்னைப் பார்த்துக்கொண்டிருப்பேன்" என்ருன். யசோதரையும் உடனே கண்மூடினுள். ஆனுல் பழைய கனவையே மறுபடியும் கண்டதுபோல "காலம் சமீபித்தது! காலம் சமீபித்தது!" என்று புலம்பிக்கொண்டே தூங்கினுள்.

அப்பொழுது ஸித்தார்த்தன் சொன்னதாவது: "ஆம்; நான் புறப்படவேண்டிய காலம் சமீபித்துவிட்டது. நம்மைப் பிரித்தபோதிலும், உலகத்தைக் காப்பாற்றும் வழிக்கு உன்வாயினின்றுவருஞ் சொற்களே என்னையழைக்கின்றன. எனதாகக்கூடிய சிங்காதனம் எனக்குவேண்டியதில்லை. நான் அரசனய், வேற்றரசர்க்கு விரோதமாகச் சுழற்றும் என் வாளின்பிரகாசத்தைக் காணக்காத்துக்கொண்டிருக்கிற இராச்சியத்தை விட்டுவிடுகிறேன். யுத்தகளத்தில் ஆயிரக்கணக்காய் இறந்த போர்வீரரின் உதிரத்தில் என்

இரதம் ஊர்ந்துசென்று, அதனால் எனக்கு ஜயமும் கீர்த்தியும் கிடைக்கவேண்டியதில்லை. ஆனால் இப்பூமியில் வருந்திகடந்து, தரையில்கிடந்து, அதின்கானகங்களில் வசித்து, அதின்தாழ்ந்த பிராணிகளுடனேயே பழகி, தாழ்ந்த சண்டாளர்கள் உடுத்தும் உடையிலும் உயர்ந்ததொன்றுடாது, நல்லோர் கொடுக்கும் பிட்சையைத்தவிர வேறு உணவில்லாமல், குகை அல்லது புதர்களைப்பார்க்கிலும் உயர்ந்த வீடுகளில் வசியாமல் சஞ்சரிப்பதே போதும். ஏனெனில் இவ்வுலகத்தில் உயிர் வாழ்வனவற்றின் புலம்பலெல்லாம் என் செவியில் எட்டிற்று. என் உயிர் உலகத்தின் துன்பத்தினால் வருந்துகிறது. வரும் இடையூறுகளுடனெல்லாம் சண்டையிட்டு, அதற்காக எனது என்று நான் சொல்லக்கூடியவையெல்லாவற்றையும் துறப்பதினால் இத்துன்பத்தை நீக்க முடியுமானால் நான் நீக்குவேன். மனிதர்கள் இவ்வுலகத்தின் துன்பங்களின்மேலுள்ள பயத்தினால், தெய்வங்களை யாராதித்தவினாலாவது இக்கஷ்டங்களினின்று நீங்கோமா என்று அவர்களை வணங்குகிறார்கள். அதினால் என்சகோதரராகிய இம்மனிதருக்கு, மூப்பினாலும் பிணியினாலும் பிரிவினாலும் மரணத்தினாலும் மரணத்திற்குப்

பின்வரும் புதிய ஜன்மங்களாலும் உள்ள கஷ்டங்களில் சிறிதளவேனும் நிவிர்த்தியாகிறதா?' என் சகோதரிகளாகிய ஸ்திரீகள், தாங்கள் அநுஷ்டிக்கிற விரதத்திலாவது, தெய்வங்களுக்குக் கொடுக்கிற நிவேதனத்திலாவது, துளசிமரத்தைச்சுற்றிவருகிற பிரதக்ஷணங்களாலாவது, பிரசவகாலத்திலுள்ள வேதனையில் சிறிதளவேனும் குறைத்து அநுபவிக்கிறார்களா? ஒரு ஜீவன் புல்லாய், பூண்டாய், மரமாய், புழுவாய், பறவையாய், மிருகமாய், மனிதனாய், தேவனாய், இப்படி ஒரு பெரியவளையம் வருகிறதென்று சாஸ்திரங்கள் சொல்வது உண்மையானல், இப்பிரபஞ்சமெல்லாம் ஒரே தன்மையதாய் ஓரிடத்தினின்றுண்டானதாயிருக்கிறது. ஆதலால் மனிதரைக் காப்பாற்றும் வழி மற்றெல்லாவுயிரையும் காப்பாற்றும். ஆம், அவ்வழி எங்காயினும் இருக்கவேண்டும். நெருப்பை மறைத்துவைத்துக்கொண்டிருந்த தீத்தட்டிக் கல்லினின்று, அதை ஒருவன் வெளிப்படுத்தியதுவரை மனிதர் குளிரினல் வருந்திக்கொண்டிருந்தார்கள். ஒருவன் மிகுந்த சிரமத்துடன் எழுத்துக்கள் உண்டுபண்ணினது வரை, மனிதர்கள் தம்மெண்ணத்தை தூரத்திலுள்ளவர்களுக்கும், பின் சந்ததி

யார்க்கும் சரியானபடி வெளியிட முடியாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படி என் சகோதரர்கள் அநுபவிக்கும் சுகங்களெல்லாம் அவர்களுக்கு முன்னுள்ளவர்கள் வருந்திக் கண்டுபிடித்ததினலேயே வந்தன. ஆகையால், உலகத்தில் உயர்ந்தவனும், பாக்கியவானும், சம்பத்தும் சௌக்கியமும் பூரணமாய் உள்ளவனும்; பிறவி முதல் இராசசியமான ஏற்பட்டவனும்; இவ்வுலகத்திய சுகங்களை அநுபவித்து, வயதினல் அவைகளின்மேல் ஆசையற்றுப்போகாமல், புதிதாக அவைகளில் இறங்கிக்களிக்கிறவனும்; வயதுமுதிர்ந்து, நரைதிரைவந்து, கூனிநடக்காமல், இவ்வாழ்வின் துன்பங்களுடன் கலந்திருக்கிற அழகினுலும் யஜஸ்ஸினுலும் திருப்தி யடைந்தவனும்; இவ்வுலகத்தின் இனியவைகளினின்று தனக்கு வேண்டுவனவற்றைத் தெரிந்தெடுக்க சக்தியுள்ளவனும்; தனதல்லாத—மூப்பும், பிணியும், வறுமையும், துயரமும் ஆகிய—துன்பங்களால் அல்லாமல் வேறொன்றினுலும் வருந்தாத என்னைப்போன்ற ஒருவன், இவ்வளவு பெரிய பாக்கியங்களையெல்லாம் மனிதர்க்காக இழந்து,—மேலுலகத்திலோ கீழுலகத்திலோ எங்கிருந்தாலும்—சத்தியத்தைக் கண்டுதான்

விடுவதென்ற தீர்மானத்துடன், தன் வாழ்நாளை அதற்கே செலவிடுகிறதாயிருந்தால், அவனுக்கு இப்பெரிய உண்மையை மறைத்து வைக்கும் திரை ஏதாவது ஒருபக்கம் திறக்கும். எல்லாரையும் துன்பத்தினின்று நீக்கி சுகத்திற்கொண்டு சேர்க்கும் மார்க்கம் எவ்விடத்திலாவது தென்படும். இது கைகூடுமானால் நான் அரசாளுவதைவிட அரசைத் துறப்பதினால் எனது ஜனங்களின் துன்பத்தை நீக்கவல்லவனாவேன். என் இராச்சியத்தின் மேலுள்ள அன்பினால், என் இராச்சியத்தைத் தள்ளிவைக்கிறேன். என் இளமையையும், என் கிரீடத்தையும், என் இன்பங்களையும், இவைகளெல்லாவற்றிலும் துறக்க மிகக்கொடிதான என் ஆருயிர்க்காதலியையும், துறக்கிறேன்.—என் அன்பே! ஆயினும், நான் நல்லமார்க்கத்தைக் கண்டுபிடிப்பதால் உலகத்தைக் காப்பாற்றுவதுபோல உன்னையும் உன் வயிற்றிலிருக்கும் சிசுவையும் காப்பாற்றுவேன். என்னை வளர்த்தெடுத்த என் தந்தாய்! என்னை அன்புடன் நேசிக்கும் ஜனங்களே! நான் இப்பொழுது புறப்படுவதனாலுண்டாகும் வருத்தம் உங்களையும் சிறிது பீடிக்கும். ஆயினும் உங்களுக்காகவே நான் போகிறேன்.—இனி நான்போகலாம். நான்

தேடுவதைக் கண்டுபிடிக்கிறவரை திரும்பேன்."

### மகாபிநிஷ்க்ரமணம் அல்லது பெருந்துறவு.

இப்படிச் சொன்னதும், ஸித்தார்த்தன் எழுந்து தூங்கும் யசோதரையின் மேல் குனிந்து, தன் குளிர்ந்த பார்வையினால் விடைபெற்றுக் கொண்டு, தான் இனி ஒருபோதும் உபயோகிக்கப்போகாத படுக்கையை வலம்வந்து வெளியே புறப்பட்டான். மூன்றுதரம் போக காலெடுத்துவைத்தும்மனமெழாமல் திரும்பி வந்து கடைசியாக அவ்வறையினின்றும் காலெடுத்து வெளியே வைத்தான்.

வெளியறையில் அவனது சபையோர்களாகிய பெண்களெல்லாரும் தூங்குவதைப் பார்த்து "என் இனிய தோழிகளே! இதுவரை என்னைச் சந்தோஷிப்பித்துவந்த உங்களைவிட்டுப் பிரிவதும் வருத்தமாகவேயிருக்கிறது. ஆயினும், இப்பொழுது நீங்கள் உறங்குவது போல, உங்களழகையும், இனிமையையும் இழந்து கடைசியில் உறங்குவீர்கள் என்பதை நினைந்து உங்களைவிட்டுப் பிரிகிறேன். உங்களதன்பினால் நான் யாதொரு துன்பமும் அறியாது வாழ்ந்துவந்தேன். இதே வாழ்வு எனது ஆயுளளவும் எனக்குக் கிடைத்தபோதிலும்

—வசந்தகாலத்தில் களித்து, கோடையில் வாடி, குளிரினால் இலையுதிர்ந்து, கடைசியில் எரிப்பதற்கல்லது வேறு பயனின்றி வெட்டப்படும் மரங்கள்போல—நான் இவ்விடத்தில் இரேன். ஆதலின் என் தொழிகளே! நான் போய் வருகிறேன். இரவு உங்களது கண்ணிமைகளை நன்றாகக் கீழேயிழுத்து விழிகளை மூடட்டும்."—என்று இவ்விதம் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியில் வந்தான். சந்திரனது வெகு ரம்ணீயமான பிரகாசத்தினால் விளங்கிக்கொண்டிருந்த தோட்டத்தின் வழியாக சாரதியிருந்த இடத்திற்குச் சென்று அவனை யெழுப்பி குதிரையைக் கொண்டு வரச்சொன்னான். சாரதி மிகுந்த ஆச்சரியத்துடன், "சுவாமீ! இரவில், எல்லாரும் உறங்கும் சமயத்தில், வழிகளெல்லாம் இருண்டிருக்கும் பொழுதா சவாரிசெய்யப்போகிறீர்?" என்று கேட்க, ஸித்தார்த்தன்: "மெதுவாகப்பேசு. என் குதிரையைக் கொண்டுவா. உண்மையைக் கண்டுபிடிக்க, என்னை இதுவரை சிறைப்படுத்தியிருந்த காவலினின்றும் நான் போகப்போகிறேன். நான் தேடுகிறது கிடைக்கிறவரை மனிதர்க்காக முயற்சித்துக் கொண்டேயிருப்பேன்" என்றான்.

சாரதி பின்னும், ஸித்தார்த்தனைப் பார்த்து "ஐய! கற்றுணர்ந்த பெரியோர் கிரகங்களைப் பார்த்து, சுத்தோதன ராஜன் மகன் ஒன்றின் மேலொன்றாக நாடுகளைவென்று மன்னர்க்கு மன்னனாய் வாழ்வானென்று சொன்னதெல்லாம் வீணோ? இவ்வளவு பெரிய ஆளுகையை விட்டுவிட்டு, பிச்சைப் பாத்திரத்தைக் கையிலேந்தி நடக்கவோ நீர் வெளியே போகிறீர்? சுவர்க்கமென்று சொல்லத்தகுந்த இவ்வரண்மனையை விட்டு உற்றாரில்லாத வெளியில் அலையவோ போகிறீர்?" என்று கேட்க, இளவாசன், "இப்படி யலைவதற்காகவே இவ்வுலகத்திலிருப்பதன்றி, நான் சிங்காதனங்களிலிருந்தாள்வதற்காகவன்று வாழ்வது. இவையெல்லாம் மாறுதலை யடைந்துகொண்டே வந்து கடைசியில் லயத்தையடைகின்றன. நான் இச்சிக்கும் அரசாட்சி இவற்றிலெல்லாம் சிறந்தது.—ஆகையால் போய் குதிரையைக்கொண்டுவா." என்றான். சாரதி மறுபடியும், "இறைவ! உமது தந்தையின் விசனத்தையும், பின்னும் உம்மைத் தம்முயிர்போல் பார்க்கிற மற்றவர்களின் துயரத்தையும்பற்றி யோசித்தீரா? அவர்களை நீர் முதலில் துன்பத்திலாழ்த்தி பின் எப்படி அவர்களுக் குதவுவீர்கள்?" என, ஸித்தார்த்தன்:

"நண்பனே! அன்பினல் வரும் இன்பங்களுக்காக வைக்கும் பிரியம் பொய்யானது. ஆனல் எனது சுகத்தைப் பார்க்கிலும் இவர்களது நன்மையைத் தேடுகிற நான் அவர்களையும் மற்ற மனிதர்களையும் காப்பாற்றப் புறப்படுகிறேன்.—போய்க்குதிரையைக்கொண்டுவா" என்ருன்.

சாரதி ஆகட்டுமென்று, மிக விசனத்துடன் லாயத்திற்குள் சென்று கண்டகனென்ற ஸித்தார்த்தனது குதிரையை அவிழ்த்து சேணம் பூட்டி வெளியே கொண்டுவர, ஸித்தார்த்தன் அதைத் தடவிக்கொடுத்து தைரியப்படுத்தி அதின்மேல் தாவிக் குதித்தான். அரண்மனையைச் சுற்றியிருந்த காவலாட்களெல்லாம் தம் ஆயுதங்களை நழுவவிட்டுக்கொண்டு தூங்கினர்கள். ஸித்தார்த்தனும் அவர்களைக் கடந்து நகரத்துக் கோட்டைவாசலையும் தாண்டி தன் குதிரையை விரைவாக நடத்திக்கொண்டு சென்ருன்.

இவர்கள் காலையில் அருணேதயத்திற்கு முன்னமேயே, சுத்தோதனனது நாட்டிற்கும் பிம்பிசாரனது நாட்டிற்கும் நடுவிலுள்ள வாய்க்காலண்டைவந்து சேர்ந்தார்கள். அங்கே ஸித்தார்த்தன் குதிரையை நிறுத்தி, கீழே குதித்து, பின்வருமாறு சாரதியிடம் சொன்

னன். "இப்பொழுது நீயெனக்குச்செய்த உதவி உனக்கும் எல்லா வுயிர்களுக்கும் நன்மையைத்தரும், இதற்காக நான் உன்னிடம் எப்பொழுதும் மாருத அன்புள்ளவனயிருப்பேன். என் குதிரையைத் திரும்பிக்கொண்டுபோ. அதுடன், இந்தக் கிரீடத்தையும், என் ராஜ உடையையும், மணிகளிழைத்த இவ்வரைக் கச்சையையும், அதில் தொங்கும் இந்த வாளையும் அரசனிடம் கொண்டுபோய்க்கொடு. அரசரிலும் பதின்மடங்கு மகிமைகொடுக்கும் ஞானத்துடன் நான் திரும்பிவரும்வரை என்னை மறக்கும்படி வேண்டுகிறேனென்று அரசனிடம் சொல். மேலும் உலகத்தைக் காப்பாற்றுவதற்காக உலகத்தை வெறுத்த நான் இதில் ஜயித்தேனுனல், நான் கொடுக்கும் உதவியினுலும் அன்பினுலும் உலகமுழுவதும எனதாகுமென்று அரசனிடம் சொல் —இனி யான் போகிறேன்."

## V.

### சத்தியத்தைக் கண்டுபிடிக்கும் வழிதேடியலைதல்.

பிம்பிசாரனது நாட்டின் தலைநகராகிய ராஜகிருகத்தை ஐந்து குன்றுகள் சுற்றிலும் காத்துக்கொண்டிருந்தன. மனிதர் காலடிகள் பட்டுப்பட்டு தேய்ந்துபோன கற்கள் பாவிய ஒரு பாதை அந்நகரினின்று புறப்பட்டு, வயல்களினருகாகவும், மூங்கிற் கூட்டங்களினிடையிலும் ஓடி, மாந்தோப்புகளினூடே திரிந்து, அந்நகரத்தின் கிழக்குப்பக்கத்திலிருக்கிற இரத்தினகிரியென்ற குன்றின் அடிவாரத்தில் கொண்டுவிடுகிறது. அம்மலையின் மேற்புறம் ஒரு குகைநிற்கிறது. இக்குகையில்தான் கவுதமசாக்கியமுனி வெகு காலம் வாழ்ந்துவந்தார். வெயிலென்றும் மழையென்றும் பாராமல், தர்மசிந்தையுள்ளவர் கொடுத்த பிச்சையையுண்டு, காஷாயவஸ்திரந்தரித்து, இரவில் நரிகள் குகையைச்சுற்றிலும் வளையவந்து ஊளையிடுவதையும் புலிகள் அடுத்தகாட்டில் உறுமுவதையும் கேட்டுக்கொண்டு தனியாக அப்புல்லாந்தரையில் படுத்துறங்கி; இப்படி ஒவ்வொரு வருஷமாக அங்கே காலத்தைத்தள்ளிவந்தார். இன்பத்திற்கென்று பிறந்த அழகிய உடலையடக்கிக்கொண்டு, எப்பொழுதும் தியா

னத்திலேயே நேரத்தைச் செலவிடுவார். புருக்கள் பக்கத்திலிருந்த பிச்சைப்பாத்திரத்தினின்று உணவைக் கொத்திக்கொண்டு போவதையும் அணில்கள் தன்மேல் குதித்து விளையாடுவதையும் கூட அறியாதபடி, சில சமயங்களில் அவ்வளவுதூரம் தியானத்தில் அமிழ்ந்திருப்பார்.

வெயிலின் உஷ்ணத்தினால் வஸ்துக்களெல்லாம் ஊசலாடுவதுபோற் றோற்றும் நடுமத்தியானத்தில உட்காருபவர், சூரியன் உருண்டுருண்டு மரங்களின் உச்சிகளையும் குன்றுகளின் சிகரங்களையும் சொர்ணமாக்கிக்கொண்டு மேற்கே மறைவதையும், அவனரசாண்ட இடத்தில சந்திரன் தன் தாரகைக் கணங்களோடு வந்து தன் வெண்கதிர் பரப்பியாள்வதையும் உணராது, இவ்வுலகத்தின் துன்பங்களையும் அவைகளின் காரணத்தையும்பற்றி தியானித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பார். தூரத்திலுள்ள நகரத்தின் ஓசையெல்லாம் அடங்கி, அண்டைக்காட்டில் மிருகங்கள் செய்யும் சப்தமும் சில்வண்டின் ஒலியுமே நிறைந்திருக்கும் நடுராத்திரியில் படுப்பார். ஆயினும் அருணோதயத்திற்குமுன்பே எழுந்திருந்து, அக்குன்றின் இருண்ட பாறையொன்றின்மேல்நின்றுகொண்டு சுற்றுமுள்ள

பூமியை அதில்வாழும் உயிர்களுக்கெல்லாம் பரவிய அன்புடன் நோக்கிக்கொண்டிருப்பார். சிறிது நேரத்திற்கெல்லாம் கிழக்கு வெளுத்து, அவ்வெளிச்சம் மெல்ல மெல்லப் பூமிமுழுதும்பரவ; ஆகாயத்தில் மேகங்களினருகெல்லாம் அக்கினிச் சுவாலை போல் பிரகாசிக்க, உன்னத விருக்ஷங்களின் நுனிகளையும், குன்றுகளின் சிகரங்களையும் பொன் முலாம் பூசும்படி தன் கதிர்களைவிட்டுக்கொண்டு, உலகத்திற்கெல்லாம் கண்ணே போன்ற பரிதியும்—தன்வரவை யெதிர்பார்த்துக்கொண்டு பாடும் பக்ஷிகளின் மனதைக் களிப்பித்துக்கொண்டு—உதயமால்வரை யெழுந்தனன் !

கௌதமர் அப்பொழுது சூரியனை வணங்கி, பின் தனது காலைக்கடனை முடித்துக்கொண்டு, அக்குன்றினின்று நகரத்திற்குப போகும் பாதைவழியாய் நடப்பார். கையில் பிச்சைப் பாத்திரத்தை யேந்திக்கொண்டு ஆண்டியைப்போல் தெருத்தெருவாக நடந்து தனக்குவேண்டிய சிறு உணவை யாசிப்பார். தெய்வத்தன்மையதாகத் தோன்றும் அவரது கம்பீரத்தையும் கருணைவிளங்கும் அழகையும் பார்த்த ஜனங்கள் எல்லாரும் மனமுவந்துகொடுத்ததால் அப்பாத்திரமும்

சீக்கிரம் நிரம்பிவிடும். அவரும் கொடுத்தவர்க்கெல்லாம் மெதுவாக வந்தனமளித்து, பாத்திரம் நிறைந்ததும் தானிருந்த காட்டிற்கு வந்து அங்கிருந்த தபசிகளுடன் படிப்பதும் தியானிப்பதுமாகக் காலத்தைக் கழிப்பார்.

இந்த ரத்னகிரியின் தாழ்வரையில், அதற்கும் நகரத்திற்கும் இடையில் உள்ள அமைதியான சோலைகளில் சில தபசிகள் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவாகள் இவ்வுடல் உயிர்க்குப்பகையென்றும், முரட்டுமிருகத்தைப்போல அதைப் பிடித்துக்கட்டவேண்டுமென்றும் எண்ணி, நோவு இனி உடலை வருத்தாதிருக்கும்வரை அதை வருத்திவந்தார்கள். அவர்களில் சிலர் கைகளை இரவும் பகலும் உயர்த்திக்கொண்டு நின்றூர்கள்; அதனால் அவை கடைசியில் இரத்த ஓட்டமின்றி நோயினுல்வாடி, உலர்ந்த மரங்களின் கொம்புகள்போல் நீட்டிக்கொண்டிருந்தன. வேறு சிலர் மிகுந்த பிடிவாதத்துடன் கைகளை மடக்கிக்கொண்டிருந்தார்கள்; அதனுல் நகங்கள் கைகளைச்சுற்றியும், ஊடாகவும் வளர்ந்தன. சிலர் கூரியகற்கள்மேல் படுத்து, அதனுல் கிழிண்ட தசையை நெருப்பினுலும் முட்களாலும் இம்சைப்படுத்தினூர்கள். சிலர்

பிணங்களும், அவைகளுக்குமேல் வட்டமிடும் கழுகுகளும், அவைகளைச்சுற்றி ஊளையிடும் நாய்நரிகளுமே துணையாகக்கொண்டு சுடலையில் வசித்தார்கள். சிலர் ஒருகாலை யூன்றிக்கொண்டு மற்றொருகாலை மடக்கிக்கொண்டு அப்படியேயிருந்தார்கள்; அதினால் ஒருகால் சூம்பிக்கிடந்தது. இப்படி கோரமாக அங்கங்குறைந்து, பிணம்போல் ஒட்டியுலர்ந்தவர்கள் எல்லாம் கூட்டமாக அங்கிருந்தார்கள். ஒரு பக்கத்தில் ஒருவன் நாள்தோறும் ஆயிரம் அரிசியைக் கணக்காய் எண்ணிவைத்து, பட்டினியால் ஒட்டியுலர்ந்த பொறுமையோடு அவைகளை ஒவ்வொன்றாகத் தின்று, அப்படியே தன்னைச் சாக அடித்துக்கொண்டிருந்தான். மற்றொருவன் நாவுக்கு உருசி காட்டக்கூடாதென்று கசப்பான சருகுகளைத்தின்று ரத்த புஷ்டியைக் குறைத்துக்கொண்டுவந்தான். இன்னொருவன், தன்னுடலுக்கிழைத்த துன்பங்களால கண்ணிழந்து, செவியிழந்து, பேச்சிழந்து, நொண்டியாய், தனக்கு இனிவரப்போகிற மோக்ஷத்தை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

கௌதமர் இவர்களையெல்லாம் மிகுந்த விசனத்துடன் பார்த்து, ஒருநாள் இவர்களின்

தலைவனை நோக்கி, "மிகவருந்தும் ஐயனே! நான் சத்தியத்தைத் தேடிக்கொண்டு அநேக மாதமாக இகுன்றில் வாழ்கிறேன். இங்கு வாழும் என் சகோதரர்களும் தாங்களும், தங்களை மிக வருத்திக்கொள்வதைப் பார்க்கிறேன். இவ்வாழ்வின் துயரம் போதாதென்றோ இன்னும் இதற்குத் திங்கிழைத்துக் கொள்கிறீர்கள்?" என்று வினவ, அத்தபசி, "ஒருவன் உடலைவருத்தி வருத்தி, அதனால் அவன் வாழ்வு துன்பமயமாய், அவனுக்கு மரணம் பேராநந்தமாக மாறினால், இப்படிப்பட்ட சுசு ஜீவனிடத்திலிருந்து பாபமாகிய அழுக்கை யெடுத்துவிடும். அப்பொழுது, ஜீவன் பரிசுத்தமாகி, இத்துன்ப உலகிலிருந்து, நம்மால் எண்ணக்கூட முடியாத இன்பத்தையுடைய சுவர்க்கங்களுக்குப்போகும் என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள்" என்றான்.

அதற்கு ஸித்தார்த்தன், "அதோ, ஆகாசத்தில் பொன்னுடைபோல் மிதக்கிற மேகம் கடலினின்று அங்கே எழுந்தது. ஆயினும் அது மழைத்துளிகளாகக் கீழேவிழுந்து, கரடு முரடாயும் மலினமாயுமிருக்கிற நிலங்களின் வழியாக வடிந்துகொண்டும், தரை வெடிப்புகளினூடாக அறுத்துக்கொண்டும்

சென்று, களிமண் கலங்கிவரும் சிற்ருறு களின் வெள்ளத்தில் சேர்ந்து, கங்கையுடன் கலந்து, கடைசியாக, தான் எதினின்று எழும் பியதோ அக்கடலில் போய்விழுகிறது. நண் பனே! சுவர்க்கத்திலிருக்கும் புண்ணியாத்து மாக்களுடைய கதியும் இப்படித்தானன்ருே? உயர எழுவது மறுபடியும் கீழேவிழுகிறது; நாம் விலைக்குவாங்குவது சீக்கிரம் செல வழிந்துபோகிறது; ஆகையால், நீங்கள் உங் களது இரத்தத்தினுல் சுவர்க்கத்தை விலைக்கு வாங்கினீர்களானுல், நீங்கள் செய்த தவத் தின் பயன் அழிந்துபோகும்பொழுது இவ் வாழ்வின் துன்பத்தை மறுபடியும் அநுப விக்கத்தானேவேண்டிவரும்?" என, அவ் யோகி, "ஆம், வந்தாலும்வரும். எங்களுக்கி தொன்றும் தெரியாது. ஆயினும் இரவின் பின் பகல் வருகிறது; குழப்பத்தின் பின் அமைதி உண்டாகிறது. என்பதை நாங்கள் அறிவோம். ஆகையால், சுயேச்சையாகத் திரியும் ஜீவனைக் கட்டிப்பிடிக்கிற இப்பாழும் உடலைப்பகைத்து, ஜீவனுக்காக இச்சிறு துன்பங்களைச் சகித்து அதனுல் தேவர்களிட மிருந்து பெரிய பேறுகளையடைய எண்ணு கிருேம்" என்ருன்.

அதற்கு ஸித்தார்த்தன் "கோடிவருஷம்

நிலைத்திருந்தபோதிலும், இப்பேறுகள் கடைசியில் அழிந்துபோகின்றன. இலையெனில், ஒருபொழுதும் மாறாதபடி, இவ்வாழ்வினின்று அவ்வளவு வேறானதாய், ஒரு வாழ்வு கீழுலகத்திலாவது மேலுலகத்திலாவது இருக்கிறதோ? உமது தேவர்கள் எக்காலத்தும் நிலைத்திருக்கிறார்களோ? சொல்லும்" என்று கேட்க, அத்தபசி, "இல்லை, பிரம்மம் மட்டுமே என்றும் நிலைத்திருக்கிறது. தேவர்கள் எல்லாம் சிலகாலமட்டுமே வாழ்கிறார்கள்" என்றான்.

அதற்கு கௌதமர், "நீங்கள் சுத்தர்களாக தைரியமுள்ளவர்களாகவும் தோன்றுகிறீர்கள். அப்படியே ஞானமுள்ளவர்களாகவும் இருந்தால், நிச்சயமல்லாததும் நாசமடையக் கூடியதுமான லாபங்களுக்காக இவ்வளவு தூரம் உங்களை துன்பப்படுத்திக்கொள்வீர்களா? ஆத்துமாவிடத்தில் பிரியமுள்ளவர்களாயிருந்தால், அவ்வாத்துமாவுக்கு வாகனமாயிருக்கிற இவ்வுடலை, அது தன் காரியத்தைச்செய்து முடிப்பதற்குள், இப்படித் துன்பப்படுத்தவேண்டுமோ? இவ்வுடல் ஜீவனுக்கு வீடு. நாம் முன் ஜன்மங்களிற்செய்த பழவினையால் இதில் வாசஞ்செய்கிறோம். விடியற்காலமாகி நல்ல வெளிச்சம் வருந்

தனையும், நமக்குக்கிடைத்த சிறிய ஒளியோடு அதில் தங்கியிருந்து, சாளரங்களினின்றும் எப்பொழுது விடியப்போகிறதென்று பார்த்துக்கொண்டிருப்பதைவிட்டு, அவ்வீட்டை உள்ளிருந்தே யிடிக்க ஆரம்பிப்பது என்ன மதியீனம்?" என்று சொல்ல, அவர்கள் "ராஜபுத்திரா! நாங்கள் இந்த வழியைப் பிடித்துக்கொண்டு, அதில் பாவிய கற்களெல்லாம் நெருப்பாகவிருந்தாலும், மரணம் நிச்சயமென்று நம்பி, அதுவரை இவ்வழியிலேயே நடக்க நிச்சயித்திருக்கிறோம். உனக்கு இதனிலும் நல்லவழி தெரியுமானுல சொல்; இல்லாவிடில் உன் பாட்டைப்பார்த்துக்கொண்டுபோ" என்றார்கள்.

இப்படி மனிதர் வாழ்வின்மேலுள்ள பிரியத்தினுல, சுவர்க்கத்தை நம்பி, தங்களை வருத்திக்கொள்வதையும், இனி நரகம் கிடைப்பதாயிருந்தால் அது இவ்வாழ்விலும் கெட்டதாயிருக்காதபடி இவ்வாழ்வை நரகத்திலும் கேடுகெட்டதாகச்செய்வதையும், உடல் மிகச்சிதைந்திருந்தால் ஜீவன் அதிலிருந்து சீக்கிரம் விடுபடுமென்று உடலைத்துன்பப் படுத்துவதையும், கௌதமர் பார்த்து மிகுந்த விசனத்துடன் சொன்னார்: "முகத்தைச் சூரியனிடம் காண்பித்துக்கொண்டு, அவன்

கொடுக்கும் வெளிச்சத்தினலே சந்தோஷமடைந்து, அதற்குப்பதில் மனேக்கியமான வாசனையையும், கண்ணுக்கினிய வர்ணங்களையும் கொடுக்கும் புஷ்பங்களே! நீங்களொருவரும் உமது அழகைக்கெடுத்து வாழ்வை விசனகரமாக்குவதில்லை. மலையினின்றும் தண்கடலினின்றும் வீசும் இளங்காற்றையுண்ண ஆவலாய், ஆகாயத்தைத் துளைத்துக்கொண்டு உமது தலையை உயரக்கிளப்பும் விருக்ஷங்களே! நீங்கள் விதையினின்று முளைத்துப் பலன் கொடுப்பதுவரை சந்தோஷமாக வளர்ந்து, காற்றில் உல்லாசமாய்ப்பாடி யிசைந்துகொண்டிருப்பது யாது தந்திரத்தினுல்? மரங்களில் களிப்புடன் பாடிக்கொண்டு வசிக்கும் பக்ஷிகளே! நீங்கள் ஏன், உங்களுக்கு இப்பொழுது வேண்டியவைகளை வெறுத்து, அதினுல் பெரிய பேறுகளையடைய விரும்புவதில்லை? ஆனுல் உங்களைக்கொல்லும் மனிதன் உங்களைவிட தியானதால் ஞானமுள்ளவனுயிருக்கிருன். ஜீவஹிம்சையில் வளர்ந்த ஞானம், இப்படித் தனக்குத் துன்பம் விளைப்பதில காண்பிக்கிறது.”

இப்படி அவர் சொல்லிமுடியுமுன், அம்மலையினின்று ஒரு ஆட்டுக்கூட்டம் இறங்கி வந்தது. அவை பாதையினின்று, புல்லையும்

தழையையும் கடிப்பதற்காக, விலகியோடாத படி இருவர் பின்னிருந்து அவைகளை யோட்டிக்கொண்டிருந்தார்கள். அந்தக்கூட்டத்தி லுள்ள ஒரு பெண்ணாட்டின் இரண்டுகுட்டி களில் ஒன்று நொண்டியாயிருந்தது. ஆகை யால் அதன் கூட்டாளி முன் குதித்துக்கொ ண்டோடுகையில், இது பின்னால் நொண்டி நொண்டி நடந்தது. அவைகளின் தாய், ஒன்றையும்விட மனமின்றி இரண்டிற்கும் நடுவில் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந் தது. இதைக் கௌதமர் கண்டு, "அம்மா, நீ வருந்தவேண்டாம். நீ போகிறவிடத்து க்கு உன் குழந்தையைக்கொண்டுவருகிறேன். அக்குன்றிலிருந்து உலகத்தின் கஷ்டங்களைப் பார்த்துக்கொண்டிருப்பதைவிட ஒரு பிரா ணியின் துன்பத்தையாவது தீர்ப்பது நல் லது" என்று அந்தக்குட்டியை யெடுத்து தோளில் வைத்துக்கொண்டார். பின்னும், அவ்விடையரைப்பார்த்து, "நண்பர்களே, சாதாரணமாக சாயந்திரமல்லவோ ஜனங் கள் ஆடுகளை வீட்டிற்குத் திரும்ப ஓட்டிக் கொண்டுபோவது. நீங்கள் ஏன் மத்தியான மே அவைகளை நகரத்திற்கு ஓட்டிக்கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்க, அவர்கள், "எங்களரசன் இன்று செய்கிற யாகத்திற்

காக இந்த இருநூறு ஆடுகளையும் கொண்டு போகிறோம்" என்றார்கள். கௌதமர் "ஆனால் நானும் வருகிறேன்" என்று, அந்தப் பெண்ணோடு பின்னேவர குட்டியையும் சுமந்துகொண்டு அவர்களுடன் கூடப்போனார்.

அவர்கள் சிறிதுதூரம் போகையில் ஒரு சிறிய பெண்பிள்ளை எதிர்வந்து, கௌதமரை வணங்கி, பின் வருமாறு சொன்னாள்: "நானும் என் குழந்தையும் வசித்துவந்த இத்தோப்பில் என்மேல்நேற்றையதினம் கிருபை வைத்தருளிய சுவாமி! என் குழந்தை செடிக[illegible] மறைவில் விளையாடிக்கொண்டிருக்கையில் ஒரு பாம்பைக்கண்டு அதனுடனும் விளையாடினான். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் முகம் வெளுத்து விளையாடுவதையும் முலைகுடிப்பதையும் விட்டு கைகாலசைக்க முடியாமல் கிடந்தான். அவனைப் பார்த்தவர்களெல்லாரும், 'விஷம் ஏறிப்போயிற்று' 'அவன் இறப்பான்' என்றார்கள். நான் அவர்களிடம் மருந்து கேட்க அவர்கள், 'அக்குன்றில் ஒரு ரிஷியிருக்கிறார். அவர் இதோ இவ்வழியாக வருகிறார். அவரிடம்போய் இதற்கேதாவது வழியுண்டோவென்று கேள்' என்றார்கள். நானும் அப்படியே உம்மிடம் வந்து குழந்தையைக் காண

மிக்க, நீர் மிகுந்த தயவுடன் அந்தக் குழந்தை யைப்பார்த்து சொன்னதாவது, 'என் சகோதரி! இதற்கு ஒரு மருந்துண்டு. அதைக் கொண்டுவருவாயானால் நீயும் உன் குழந்தையும் சுகப்படுவீர்கள். ஒரு பலம் கடுகு வேண்டும்; ஆனால் நீ அதை எந்த வீட்டிலிருந்து வாங்குகிறாயோ அந்த வீட்டில், தாயோ, தந்தையோ, குழந்தையோ, வேலைக்காரனோ ஒருவரும் இறந்திருக்கக்கூடாது. அப்படிப் பட்ட கடுகு கொண்டுவருவாயானால் நல்லது என்றீர்.''

அப்பொழுது கௌதமர், புன்சிரிப்புடன், "ஆம் அப்படியே சொன்னேன். உனக்கு அந்தக் கடுகு கிடைத்ததோ?'' என்று கேட்க, அவள் "ஐய! வரவர அதிகமாகக் குளிர்ந்துகொண்டுவந்த என் குழந்தையைத் தோள்மேல் போட்டுக்கொண்டு, ஒவ்வொரு வீட்டிலும்போய்க் கேட்டேன். அவர்களெல்லாரும் மனமகிழ்ந்து கொடுத்தார்கள். ஆனால், அவர்களை அவர்கள் வீட்டில் யாராவது இறந்ததுண்டோவென்று கேட்க, அவர்கள் 'ஐயோ இதென்ன இப்படிக் கேட்கிறாய்? இவ்வுலகத்தில் இறந்தவர்கள் பலர், இருப்பவர் சிலர்' என்றார்கள். இப்படி நான் எந்த வீட்டில்போனாலும், கடுகு கிடைத்தது;

ஆனால் எல்லாரும் புருஷனிறந்தான், பிள்ளை பிறந்தது, வேலைக்காரனிறந்தான் என்றார்கள். மரணம் எங்கும் சாதாரணமென்று தோன்றுகிறது. என் பிள்ளையும் இதற்கு முன் இறந்திருப்பானென்று எண்ணுகிறேன்" என்றாள்.

அதைக்கேட்டு, கௌதமர், "சகோதரி! ஒருவரும் கண்டுபிடியாததைத்தேடி, நான் உனக்குக்கொடுக்க உத்தேசித்திருந்த கசப்பான மருந்தைக் கண்டுபிடித்தாய். நீ மிக அருமையாய் நேசித்த சிறுவன் நேற்றைய தினமே உன் தோளில் இறந்து கிடந்தான். நீ படுந்துயரத்தினால் உலகம் முழுவதும் வருந்துகிறதென்பதை, நீ இன்று அறிந்தாய். எல்லாராலும் அநுபவிக்கப்பட்ட துன்பம் ஒருவனுக்கு வரும்பொழுது, அதினால் அவனுக்கு வருத்தமுண்டாவதில்லை. இதோ இந்த ஆடுகளைப் புல்தரைகளின் வழியாகவும் பூஞ்சோலைகளின் வழியாகவும் சாவிற்கு ஓட்டிக்கொண்டு போவதுபோல, அவைகளின் யஜமானராகிய மனிதரையும் இவ்வுலக சுகங்களின் வழியாக மரணத்திற்கோட்டிக்கொண்டுபோகும் விதியைத் தடுக்க, என்னிரத்தத்தை யூற்றி, என்னுயிரைக்கொடுக்க சித்தமாயிருக்கிறேன். அந்த இரகசியத்தைத்

தான் நான் தேடிக்கொண்டிருக்கிறேன்.—நீ போய் உன் குழந்தையைப்புதை" என்றார்.

### பிம்பிசாரனது யாகத்தைக்கண்டு உயிர்வதை ஒவ்வாதென்று போதித்தல்.

அங்கிருந்து நடந்து, அவ்விராஜகுமாரனும் இடையர்களும், சாயங்காலத்தில் நகரத்திற்குட்சென்றார்கள். ஜனங்கள் இவரது முகத்தின் அழகையும் சாந்தத்தையும், இவருருவத்தின் கம்பீரத்தையும பார்த்து, "இப்படிப்பட்டவர் ஏன் ஆட்டைச் சுமந்துகொண்டுபோக வேண்டு"மென்று அதிசயித்தார்கள். அரண்மனைக் காவற்காரரும் இவரைத் தடுக்கப் பயந்து விட்டுவிட்டார்கள்.

அரசன் தனதுயாகசாலையில் நின்றான். அவனிருபக்கத்திலும் பிராமணர்கள் வரிசையாக நின்று மந்திரங்களை ஜபித்துக்கொண்டிருந்தார்கள். யாகசாலையின் நடுவிலிருந்த யாககுண்டத்தில், சந்தன முதலிய மரங்களால் வளர்த்த அக்கினி பெரிதாகச் சுழித்துச் சீறிக்கொண்டு, தன்னிடத்திலிடப்பட்ட நெய்யையும் வாசனுதிரவியங்களையும் உற்சாகமாய் உண்டது. இதுவரை கொல்லப்பட்ட பிராணிகளின் இரத்தம் யாககுண்டத்தைச்சுற்றி, சிவந்து கொழுத்த ஒரு சிறிய வாய்க்காலாக ஓடிக்கொண்டிருந்தது. வெட்

டுவதற்காக இன்னும் ஒரு ஆடு கீழே கிடந் தது. அதன் தலை தர்ப்பையினல் பின் னிமுத்துக் கட்டப்பட்டிருந்தது. ஒரு பிராம ணன் அதன் கழுத்தின்மேல் ஒரு கத்தியைப் பிடித்துக்கொண்டு பின்வருமாறு சொன் ஞன்: "தேவதைகளே! இது பிம்பிசாரனிட மிருந்து அநேக யக்ஞங்களின் தலைமையான தாக வருகிறது: அதனிரத்தம் வெளிப்பாய் வதைக்கண்டும், அதன்கொழுத்த மாமிசம் வாசனையுள்ள நெருப்பில் வாடுகிற வாசனை யினலும், உங்கள் மனது சந்தோஷப்படட் டும். அரசனது பாபங்கள் இதின் தலையில் வைக்கப்படட்டும். அக்கினி அவைகளை உண் ணட்டும். இதோ அடிக்கிறேன்."

அப்பொழுது அங்குவந்து சேர்ந்த கௌ தமர் உடனே, "மன்னவா! அவன் அதை அடிக்கவேண்டாம்" என்று சொல்லி, உட னே அந்தப்பிராணியின் கட்டை அவிழ்த்து விட்டார். அவரது ரூபத்தில் விளங்கின பெருமையைக்கண்டு, ஒருவரும் அவரைத் தடுக்கத் துணியவில்லை. பிறகு அவர்களி டம் உத்திரவு கேட்டுக்கொண்டு உயிரைப் பற்றிப் பேசினுர். இவ்வுயிரை எல்லாராலும் எடுக்க முடியுமானலும் ஒருவராலும் கொ டுக்கமுடியாது; எல்லாப் பிராணிகளும்

அதை நேசித்துக்காப்பாற்ற முயலுகின்றன; அது ஒவ்வொரு பிராணிக்கும் அருமையாயும், இனிமையாயும் இருக்கிறது; தாழ்ந்தவர்களுக்கு வாழ்வை சுகமாயும், உயர்ந்தவர்களுக்கு வாழ்வை மேன்மையானதாயும், செய்கின்ற கருணை எங்கு இருக்கிறதோ அங்கு உயிர் ஒரு பாக்கியமாயிருக்கிறது; என்றார். தெய்வத்தினிடத்திலிருந்து மனிதன் கருணை யாசிக்கிறான்; ஆனால் அவன் இவைகளுக்குத் தெய்வம்போலவிருந்தும் இவைபிடத்தில் சிறிதும் கருணையில்லாமலிருக்கிறான்; அதுவுமல்லாமல், இவன் கொல்லும் ஆடுகள் இவனுக்குப் பாலும் கம்பளியும் கொடுத்து, தம்மைக் கொல்லும் மனிதன்மேல் மிகுந்த விசுவாசம்வைத்திருந்தன;—என்று இவ்விதமாக, அப்பிராணிகளுக்கு வாயிருந்தால் எப்படி தம் கக்ஷியையெடுத்து வாதாடியிருக்குமோ அப்படியெடுத்துப் பேசினார். மரணத்தின் பின் சிலர் மிருகமாயும், சிலர் பறவையாயும் ஜனித்து, தங்கள் பாபங்கள் தொலைந்தபின் மறுபடியும் மனிதராவாரென்று சாஸ்திரங்கள் சொல்வதை யெடுத்துக் கூறி; அது உண்மையானால் கொலையானது ஒரு ஜீவன் தன் பாபத்தைத் தொலைத்துக்கொண்டு உயரக்கிளம்புவதைத் தடுக்கிறது;

ஆகையால் அந்தக்கொலையோடு கூடியயாகம் புதிய பாபமாகிறது ; என்றார். மேலும், ஒருவன் பிராணிகளின் இரத்தத்தினால் தன் ஜீவனைப் பரிசுத்தமாக்கமுடியாது ; தேவர்கள் நல்லவர்களாயிருந்தால் அவர்கள் கொலையினால் சந்தோஷப்படமாட்டார்கள் ; கெட்டவர்களானால் அவர்கள் எப்படி நமக்கு நன்மை செய்வார்கள் ? எல்லாவற்றையும் நன்றாகக் கவனித்துப் பார்த்துக்கொண்டு, சிறிதும் அசையாமல், நன்மைக்கு நன்மையும் தீமைக்குத்தீமையும் கொஞ்சமும் தவறாது படியளக்கும் சட்டம் ஒன்று இவ்வுலகத்தையாள்கிறது ; அதின் பிரகாரம் ஒருவன் செய்த தவறுகளுக்கு அவனே முழுதும் உத்தரவாதியாக வேண்டுமேயல்லாது, அவற்றில் அணுவளவேனும் ஒரு தீங்குமறியாப் பிராணிகளின்மேல் போடமுடியாது ; என்றார். இப்படி அவர் அதிகாரத்துடன் சொன்ன கருணைசுரக்கும் வார்த்தைகளைக் கேட்டவுடனே, அங்கிருந்த பிராமணர்கள், இரத்தத்தினால் சிவந்த தம கைகளை வஸ்திரத்தினால் மூடிக்கொண்டார்கள். அரசன் கைகூப்பிக்கொண்டு அவர் சமீபத்தில் வந்து, மிகுந்த கவனத்துடனும் பணிவுடனும் அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால்

அவர் இதொன்றையும் கவனியாது இதே மாதிரி சொல்லிக்கொண்டுபோனார். எல்லாவுயிர்களும், இரத்தப் பசையில்லாமல் சுத்தமாயிருக்கிற ஆகாரங்களையே புசித்து ஒன்றிற்கொன்று நேசமாயிருந்தால் இவ்வுலகம் எவ்வளவு நன்றாயிருக்கும் என்பதைப்பற்றிச் சொன்னார். பொன்னிறமான தானியங்களும், பிரகாசமான நிறங்கள் வாய்ந்த பழங்களும், எல்லார்க்காகவும் வளரும் இனிய புற்பூண்டுகளும், பரிசுத்தமான ஜலமுமே, இவ்வுலகத்தில் எல்லார்க்கும் வேண்டுமளவு ஆகாரத்திற்கும் பானத்திற்கும் போதுமானதாயிருக்குமென்றார். இப்படி அவர் சொன்னதைக் கேட்டவுடனே அவ்வேதியர் தாமே யாககுண்டத்தின் அக்கினியையணைத்து கையிலிருந்த கத்தியைத் தூர எறிந்தார்கள். மறுநாள் அந்நகரத்தில் பின்வருமாறு பறைசாற்றப்பட்டு, பாறைகளிலும் தூண்களிலும் எழுதப்பட்டது: "இதுவரை புசிப்பதற்காகவும் யாகத்திற்காகவும் கொலை நடந்துவந்தது. எல்லாவுயிர்களும் ஒன்றேயாதலாலும், கருணையுள்ளவனுக்கே திருவருள் கிடைக்குமாதலாலும், இனியொருவரும் பிராணிகளைக் கொல்லவோ மாமிசம் புசிக்கவோ கூடாது."

பிம்பிசாரன், கௌதமரின் அரசப்பிறவியையும், இப்பொழுது அவர் தபசிவேஷம்

பூண்டதற்குக் காரணத்தையும் அறிந்து, அவரை நோக்கி, "உமது இராஜவுடம்பு இந்த விரதங்களின் கஷ்டத்தைத் தரிக்காது; உமது கைகள் செங்கோலைப் பிடிப்பதற்கு ஏற்பட்டனவேயன்றி பிச்சையெடுக்க ஏற்படவில்லை. பிள்ளையிலாத என்னுடன் என்னரண்மனையில் வசித்துக்கொண்டு, என் பிரஜைகளுக்கு ஞானத்தைப்போதியும்" என்று, அடிக்கடி அவரை மிகவும் வேண்டிக் கொண்டான். அதற்கெல்லாம் அவர், "அரசனே! இவைகளெல்லாம் என்னிடத்திருந்தன. நான் இப்பொழுதும் இனியும் தேடும் உண்மைக்காக இவைகளையெல்லாம் விட்டு வந்தேன். தேவேந்திரனதரண்மனையே தன் கதவுகளைத்திறந்து, தேவகன்னிகள் என்னை உள்ளே வருந்தியழைத்தாலும் என் தீர்மானத்தினின்று தவறமாட்டேன். நான் தேடிக்கொண்டிருக்கும் உண்மை, இந்த ரிஷிகளிடத்தினின்றாவது, சாஸ்திரங்களிலிருந்தாவது, தேகம் மூர்ச்சிக்கும்வரை அநுசரிக்கும் உபவாசங்களினலாவது, கிடைக்குமென்று தோன்றவில்லை. ஆகையால் அதை நாடி நான் வேறு இடங்களுக்குப்போகிறேன். நான் அறியவேண்டிய உண்மையையறிவேனானல், நண்பனே, உன்னிஷ்டப்பிர

காரம் உன்னிடம்வருவேன்" என்றார்.

பிம்பிசாரன், அதன்மேல், கௌதமரைச் சுற்றி வலம்வந்து நமஸ்கரித்து விடைகொடுத்தனுப்பினான். கௌதமரும், உடம்பு மெலிந்து, க்ஷீணித்து, சிறிதும் திருப்தியடையாது கயையை நோக்கிப் புறப்பட்டார். ஆயினும், மலையிலிருந்த அலாரன், உத்ரன் என்றவர்களும் வேறு சிலரும், எல்லாம் சாஸ்திரங்களில் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், ஒரு மனிதனாலும்—பெரிய மகரிஷிகளினால் கூட—சுருதிஸ்மிருதிகளினால் சொல்லியிருப்பதைவிட அதிகமாக அறியமுடியாதென்றும் சொல்லி தடுக்க முயன்றார்கள். நிஷ்பிரபஞ்ச, நிர்விஷய, நிர்விகாரமாய், "அண்டபகிரண்ட உயிரெவைக்கும் நேராக அறிவாய் அகண்டமாய் ஏகமாய் நித்தமாய் நிர்த்தொந்தமாய் நிர்க்குண விலாசமாய், வாக்குமனமணுகாத நிர்மலானந்தமாய்" நிற்கும் பிரமம் ஒன்றேயென்று சொல்லும் ஞானகாண்டத்திலும் உயர்ந்த ஞானத்தை மனிதனால் எப்படி அடைய முடியும்? காமாதிகளையடக்கி, அகங்காரமென்னும் பிசாசை வதைத்து, விஷயங்களாகிய கயிற்றால் கட்டப்பட்ட மாயையென்னும் கட்டைத்தறித்து, "பெரிய மௌனத்தின்

வைப்பாகிய" சச்சிதானந்தத்தில் மூழ்கும் வழியைச் சொல்லும் கர்மகாண்டத்தில் சொல்லியிருப்பதைவிட நல்லவழியில் எப்படி மனிதனால் நடக்க முடியும்? என்றார்கள்.

ஆனால் ஸாக்கியமுனி அவைகளைக்கேட்டும் திருப்தியடையவில்லை.

---

## VI.

### சத்தியத்தைத்தேடிப் பின்னுமலைந்து 'போதி' மரத்தடியை வந்தடைதல்.

பராகாளத்திலிருந்து வடமேற்குமுகமாக, கங்கை நதிபாயும் பூமியின்வழியாய் ஒருவன் போவானானால், 'நிலாஜன்,' 'மொஹானே,' என்ற இரண்டு சிற்றாறுகள் உற்பத்தியாகும் குன்றுகளில் வந்துசேருவான். அவைகள் ஓடும் வழியைத் தொடர்ந்து சென்றால், அவையிரண்டும் சேர்ந்து, 'பல்கு' வென்ற பெயருடன் கயைக்குச்செல்லும் வழியிலுள்ள சமநிலத்தைக்காணலாம். அந்நதிக்குச் சமீபத்தில், அங்குமிங்கும் சில மணற்குன்றுகள் பொருந்தியதாய், முட்புதர்களை நிறைந்துள்ள ஒரு சமவெளி படருகிறது. இவ்வெளியின் ஓரத்தில், மரங்களடர்ந்த ஒரு காடு தொடங்குகிறது. அதினிடையில், பலவித மீன்கள் களித்து விளையாடும் ஒரு சிற

ருேடை அழகாய்ப் பிரகாசித்துக்கொண்டு சலசலவென்று ஓடுகிறது. ஆடுமாடுகளைக் காப்பாற்றிக் காலங்கழிக்கும், கள்ளங்கபடமறி யாத ஜனங்கள் வசியாத 'ஸெநாநி' யென்னுங் கிராமம், தென்னந்தோப்புகளால் சூழப் பட்டு, அருகேதோன்றிற்று.

அந்தக்காட்டின் மத்தியில், கௌதமஸாக்கிய முனி, மனிதரின் துன்பத்தையும், விடுதலை வழியையும், ஆகாயத்தின் இந்திரதனுசுபோல் பொய்மையான இவ்வாழ்வையும் [illegible] சிந்தித்துக்கொண்டு வெகுகாலம் வாழ்ந்து வந்தார். சிலசமயங்களில், இவ்விதமான தியானத்தில் காலம்போவதுகூட தெரியாம லிருந்து, கடைசியில் கண்விழிக்கும்பொழுது, தன் பிச்சைப்பாத்திரம் நிறையாம லிருப்பதைப்பார்த்து, வானரங்களோ கிளி களோ மாத்திரம் தின்றுதிர்க்கும் காட்டுக்கனி களைத் தின்று வயிற்றை நிரப்புவார். வசந்த காலத்து இளந்தளிர்களின் அழகு [illegible] னின்று உலர்ந்து உதிரும் சருகுகள் [illegible] ணப்படும் அளவுகூட, தன்னுட்டிற்கொ[illegible] மகிழ்ச்சி கொடுத்துக்கொண்டிருந்த [illegible] ர்த்தனதழகு அவரிடத்து இப்பொழுது கா ணப்படவில்லை.

ஒருகாள், இளவரசன், கௌப்பிருல் [illegible]

சித்து, இறந்தவர்போல் கீழேவிழுந்து கிடந்
தார். அப்பொழுது அவ்வழியாக வந்த ஒரு
ஆட்டிடையன், இப்படி அவர் வெயிலில்
கிடப்பதைப்பார்த்து, அருகே நின்ற ஜம்பு
விருக்ஷங்களினின்று கிளைகளொடித்து, அவ
ரைக் காப்பதற்கு ஒரு சிறிய பந்தலிட்டு;
அவ்வளவு உயர்ந்தவராயும், பரிசுத்தமுள்ள
வராயும், தோற்றும் ஒருவரை தான் தொடப்
பயந்து, ஒரு வெள்ளாட்டின் மடியைப்பிது
க்கி அப்படியே அவர்வாயில் பிழிது பால்
சொட்டினான். அதினால் அவர் மூர்ச்சை
தெளிந்து விழித்துக்கொண்டு, அவனது பாத்
திரத்தில் கொஞ்சம் பால் கறந்து கொடுக்
கும்படி அவனை வேண்டிக்கொண்டார். அத
ற்கு அவன், "ஐயா! நான் கொடுப்பது தகு
தியன்று. நான் சூத்திரன்; நான் தொட்
டால் நீங்கள் அசுத்தமாவீர்கள்" என, சாக்
கியமுனி, "துன்பமும் இரக்கமும் மனித
ரெல்லாரையும் பந்துக்களாக்குகிறது. எல்
லாரிடத்திலும் ஒரே மாதிரி சிவந்திருக்கும்
இரத்தத்திற்கும், எல்லாரிடமும் ஒரே வித
மாய் உப்புக்கரித்திருக்கும் கண்ணீருக்கும்
ஜாதி பேதமில்லை. மனிதன் தாய்வயிற்றினி
ன்று பிறக்கும்பொழுது நெற்றியில் விபூதி
யும், தோளில் பூணூலும் தரித்துப் பிறப்

பதில்லை. நல்லது செய்பவனே துவிஜன்; கெட்டது செய்பவன் சூத்திரன். ஆகையால், நீ யெனக்கிப்பொழுது கொடுப்பதைக்கொண்டு ஒரு தீங்குமில்லை" என்று சொல்ல, அவ்விடையனும் மனமகிழ்ந்து கொடுத்தான்.

மற்றொருநாள், அவர் இருந்த இடத்தின் வழியாக, சில க்ஷத்தியர்கள்—மத்தளமடிப்பவனொருவனும், துருத்தியூதுபவனொருவனும், தம்பூர் மீட்டுபவன் ஒருவனுமாகச் சேர்ந்த—தம்மேளக்காரருடன் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களது பாதசிலம்புகள் கால்களைச்சுற்றி கிதம்பாட கைவளைகள் கலகலவென்று சப்திக்க, அவர்கள் உல்லாசமாக நடந்துபோனார்கள். அப்பொழுது தம்பூரைக் கொண்டுபோனவன் தம்பூரை மீட்ட, அவன் பக்கத்திலிருந்தவள் பின்வரும் கருத்துள்ள பாட்டைப்பாடினாள்:

"தம்பூர் சுருதி சரியாக சேர்ந்திருக்கும்போது ஆட்டமும் நன்றாக ஓடுகிறது. அதின் சுருதியை அதிகமாக உயர்த்தாதே. அதிகம் தாழ்த்தவுங்கூடாது. அப்பொழுது நாங்கள் மனிதரது மனதை ஆடிக்கொண்டுபோவோம்.

"தந்தியை அதிகமாக முறுக்கினால் ஒடிந்துபோய்ப் பாட்டை நிறுத்துகிறது. தந்தி அதிகம் நெகிழ்ந்திருந்தால் பேசாமல்போய் கானத்தைக்கெடுக்கிறது.

"ஆகையால் சுருதி அதிக உயர்ந்தாவது தாழ்ந்தாவது இருக்கக் கூடாது."

என்று இவ்வித வீணைப்பாட்டுகளைப் பாடிக் கொண்டு, தான் பாடினது தன் கூட்டத்தைத் தவிர வேறொருவர் காதில் விழுந்திருக்குமென்று கனவிலும் நினையாமல் போயினாள். ஆனால் கௌதமர் இதைக்கேட்டு, "சில வேளை அறிவிலிகளும் அறிவுள்ளோர்க்கு புத்தி புகட்டுகிறார்கள். அறிவாகிய சங்கீதம் உண்டாவதற்காக, இவ்வுடலாகிற தந்தியை அதிகமாக முறுக்குகிறேன். நான் உண்மையைக் கண்டுபிடிக்கிற தருணத்தில் என் கண்கள் இருளுகின்றன. எனக்கு பலம் வேண்டிய முக்கிய சமயத்தில் நான் க்ஷீணத்தையடைகிறேன். இப்பொழுது எனக்கு யாராவது சிறிது உதவிசெய்வார்களானால் மிக நன்மையாயிருக்கும்" என்றார்.

அந்த ஆற்றருகில், மிகப்பக்திமானும், தனிகனும், ஏழைகளுக்கெல்லாம் ஒரு நல்ல தோழனும், ஒரு பிரபு வசித்தான். அவன் குடும்பத்தினின்றுதான் அந்த ஊருக்கு 'ஸெநானி'யென்று பெயர்வந்தது. அவ்விடத்துப்பெண்களிலெல்லாம் சிறந்த அழகையுடைய சுஜாதையென்பவளை மனைவியாக வடைந்து அவன் திருப்தியாயும் சுகமாயும்

வாழ்ந்து வந்தான். அந்த சுஜாதை, ம
ரிக்கையும் உண்மையும் உடையவளாயும்;
களங்கமின்மையோடும் தயவோடும், எல்லா
ரிடத்தும் இனிய பேச்சும் களித்தமுகமும்
உடையவளாயும்; ஸ்திரீரத்னம்போல் வி
ங்கி, தனது அமைதியான வீட்டில் சுகமாக
தன் நாயகனுடன் வாழ்ந்து வந்தாள். ஆ
னுல் அவர்கள் வீட்டை சந்தோஷப்படுத்த
ஒரு புத்திரனுண்டாகவில்லை. அதற்காக
அவள் அநேக தெய்வங்களைப் பிரார்த்தித்
ததுமன்றி, அருகிலிருந்த காட்டுத் தெய்வத்
திற்கும் தான் ஒரு ஆண்குழந்தையைப்பெற்
ருல், தேவாமிர்தத்துக்கு ஒப்பான நிவே
தனம்செய்து பொற்கிண்ணத்தில் கொடுப்ப
தாகவேண்டிக்கொண்டாள். அவளும் சடிதி
யில் கர்ப்பந்தரித்து ஒரு ஆண் குழந்தையைப்
பெற்ருள். பெற்று மூன்று மாதத்திற்கெல்
லாம், ஒருநாள், ஒரு கையினுல் தன் குழந்
தையை மார்பிலணைத்துக்கொண்டு, மற்றொ
ருகையினுல் தலையில் வைத்திருந்த நிவேதன
பாத்திரத்தைப் பிடித்துக்கொண்டு காட்டுத்
தெய்வத்தின் கோவிலுக்கு நடந்தாள்.

அப்பொழுது, முன்போய், இடத்தைப்
பெருக்கி அலங்கரிப்பதற்காக அனுப்பப்பட்
டிருந்த ராதை யென்பவள், ஒடோடியும்

திரும்பிவந்து, "தாயே! தெய்வம் நமக்குப் பிரத்தியக்ஷமாய் தன்னிடத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்! அவரது முகத்தைச் சுற்றி தேஜஸ் எப்படி விளங்குகிறது! தெய்வீகமான பார்வையுடன், எவ்வளவு சாந்தமாயும் உயரவாயும் தோற்றுகிறார் பார்! இப்படி தெய்வங்களை நேரில் பார்க்க என்ன பாக்கியம் பெற்றோம்!" என்றாள். சுஜாதையும், கௌதமரைத் தெய்வமென்றெண்ணி, மிகுந்தவணக்கத்துடன் அருகிற்சென்று, நமஸ்கரித்து, "பகவன்! அடியாளிடத்தில் திருவைகூர்ந்து, ஏழையேன் கொண்டுவந்திருக்கும் அற்ப உணவை யேற்றுக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்" என்று பொற்கிண்ணத்தை அவர் முன்னிலையில் வைத்து அதில் நிவேதனத்தையிட்டாள். அவள் வணக்கத்துடன் ஒதுங்கிநின்று களிக்க, அவர் ஒன்றும் பேசாமல் அதை உண்டார். அவ்வுணவின் விசேஷத்தால், அது உட்சென்றதும், சாக்கியமுனிக்கு உடம்பில் ஒரு உற்சாகமும் திடனும் உண்டாயிற்று. அதின் வீரியம் மனதிற்கும் சென்றாற்போல, அவரது புத்திக்கும் ஒரு தீக்ஷண்யமுண்டாகவே, அவர் முகத்தில் ஒரு விசேஷ களை தோன்றிற்று. இதைக்கண்டு களிப்புற்ற சுஜாதை, "ஏழை

யேன் கொடையும் ஐயனுக்கேற்றதோ?" என்று மெதுவாகக்கேட்டாள்.

ஆனல் கௌதமர் அதைக்கவனியாமல, "நீ யெனக்குக் கொண்டுவந்ததென்ன?" என்று கேட்க,

சுஜாதை, "சுவாமி! நான் நான்கு தொழுவத்திலிருந்து புதிதாக ஈன்ற தாழு பசுக்களின் பால்கொண்டு ஐம்பது பசுக்களை வளர்த்தேன். இவ்வைம்பதுகொண்டு வேறு இருபத்தைந்து வளர்த்தேன். அவைகளைக்கொண்டு பன்னிரண்டு மாடுகளையும், அவற்றிலிருந்து, வேறு ஆறு மாடுகளையும் வளர்த்தேன். இவ்வாறுமாடுகள்தான் எம்மந்தைகளிலெல்லாம் உயர்ந்தவை. அவற்றின் பாலை, ஒவ்வொன்றும் ஒரு முத்து என்று சொல்லும்படி பொறுக்கியெடுத்த அரிசியுடன், நல்ல வாசனைத்திரவியங்கள் சேர்த்து, வெள்ளிப்பாத்திரங்களில்வைத்துப் பொங்கினேன். எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தால், செய்வதாக வேண்டிக்கொண்டபடி இவ்வளவையும் வெகு சிரத்தையுடன் செய்தேன். எனக்கு இப்பொழுது ஒரு புத்திரனிருக்கிறான்; இனி எனக்கு வாழ்வெல்லாம் இன்பமே."

கௌதமர், குழந்தையை மூடியிருந்த வஸ்

திரத்தை மெல்ல எடுத்து, அதன் தலையில் தன் கைகளை வைத்துக்கொண்டு, "உன் சந்தோஷம் வெகு நாள் நீடித்து நிற்கட்டும்! வாழ்வின் பாரம் இவன் தலையில் மெதுவாக விழட்டும்!" என்று ஆசிர்வதித்து, பின்னும், "நீ யாருக்கு உதவினையோ அவன் தேவனல்ல; உன்னைப்போல் ஒரு மானிடன். முன்பு ஒருகாலத்தில் இளவரசனயிருந்தேன். இப்பொழுது, மனிதரது அஞ்ஞானவிருளைப் போக்கடிக்கும் வெளிச்சத்தைத்தேடி அலைகிறேன். நான் நிச்சயமாய் அதைக்கண்டு பிடிப்பேன். இப்பொழுதுதான் அது என் மனதில் உதிக்கப்பார்த்தது; ஆனல் அத்தருணத்தில் என் உடம்பு க்ஷீணிதமாய்ப் படுத்துக்கொண்டது. நீ தந்த உணவினல் பலமடைந்தேன்.—ஆனல், வாழ்வதே உனக்கு இனிமையாகவிருக்கிறதா? அன்பும் வாழ்வும் மட்டுமே போதுமோ?" என்று கேட்க,

சுஜாதை "ஆண்டவனே! என மனது மிகச்சிறிது: வயலை ஈரமாக்கக்கூடப்போதாத, சிறிய மழை, ஆம்பற்புஷ்பத்தின் கிண்ணத்தை நீரால நிறைக்கிறது. என் நாதனது அருள்விளங்கும் கண்களிலும், என் பாலனது புன்னகை தவழும் முகத்திலும், உயிர் நிறைந்து பிரகாசித்து, என் வீட்டை

அன்பு நிறைந்த இளவேனிலாகச் செய்தால்; அதுவே யெனக்குப் போதும். காலையில் எழுந்து கடவுளைத்தொழுது, தெய்வங்களுக்கு நைவேத்தியங்கள் செய்து, துளசிமடத்தை வணங்கி, வேலைக்காரிகளை அவரவர் தொழிலில் ஏற்பாடு செய்வதும்; மத்தியானத்தில் என் நாதனுக்கு அமுதூட்டி, பின் விசிறி கொண்டு வீசி, தாலாட்டி, உறங்குவிப்பதும்; அப்படியே இரவில் சூரியன் அஸ்தமித்தவுடன் என் நாயகன் பக்கத்தில் நின்று, பலகாரங்கள் பரிமாறி, பின் ஆலயந்தொழுது, இஷ்டர்களுடன் சம்பாஷித்து, நக்ஷத்திரங்கள் மனிதரைத் தூங்குவிக்க வெள்ளி விளக்கேற்றும்பொழுது, நானும் என் அவயவங்களை இளைப்பாறக் கிடத்துவதும்; இப்படி என் வாழ்நாட்கள் இல்லற விஷயமான விசாரங்களிலேயே இனிதாகக் கழிந்துபோகின்றன. இதோடு, என் நாயகனை சுவர்க்கத்திற்குக் கொண்டுபோகக்கூடிய இச்சிறு பாலனையும் பெற்றதன்பின், நான் சந்தோஷமாயிருப்பதற்குத் தடையென்ன? ஏனெனில், ஒருவன் வழிப்போக்கர்க்கு நிழல் கொடுக்க மரம் நட்டுவளர்த்து, ஜனங்களின் சௌக்கியத்திற்காக ஒரு கிணறு வெட்டி, ஒரு ஆண்பிள்ளையும் பெறுவானானால், இவைகள் அவனுக்கு

மரணத்திற்குப் பின் நன்மையைக் கொடுக்கு மென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. தேவர்களுடன் பேசி, வேதங்களையுண்டு பண்ணி, நல்லறிவிற்கும் முக்திக்கும் வேண்டிய வழிகளையெல்லாம் அறிந்த, நம்முன்னோர்களைவிட நாம் தெரிந்தவரல்லவாதலால், அவர்கள் சொல்வதை நான் தாழ்மையுடன் அங்கீகரிக்கிறேன். நல்வித்துக்களினின்று இனிய கனிகளும், விஷவித்துக்களினின்று கசப்பான வஸ்துக்களும், உண்டாவதையும்; நம் வாழ்நாட்களில் கூட, கொடுமையினால் பகைவரும், இனிமையினால் நேசமும், பொறுமையினால அமைதியும், வாய்ப்பதையும் நாம் காண்கிறோம். ஆகையால், எவ்விடத்திலும், எக்காலத்திலும், யாவர்க்கும், நல்லதினின்று நன்மையும், தீயதினின்று தீமையும் நிச்சயமாய் உண்டாகுமென்று நம்புகிறேன். ஆகையால், நம்மை இவ்வுலகத்தினின்று நீக்க கடவுளுக் கிஷ்டமாகும் பொழுது, இங்கு இப்போதிருப்பதுபோலவே அங்கும் அப்பொழுது நன்மையாகவே யிராதோ? இதிலும் நல்லதாகவே யிருக்கலாம்; ஏனெனில் விதைக்கப்பட்ட ஒரு சிறு நெல்லினின்று, ஐம்பது நெற்கள்பதித்த ஒரு கதிர் உண்டாகிறது; நக்ஷத்திரங்கள் புஷ்பித்

தனுபோற் பிரகாசிக்கும் சண்பகத்தின் பொன்மயமான மலர்களெல்லாம் அதன் சிறிய அழகில்லாத விதைகளில் ஒளிந்திருந்தன. இறைவனே! பொறுமையை இருந்த விடந் தெரியாது போக்கடிக்கும் துன்பங்கள் உண்டென்பது எனக்குத்தெரியும். இக்குழந்தை யிறக்குமாயின் என்னெஞ்சு பிளக்குமென் றெண்ணுகிறேன். நெஞ்சு பிளக்கவேண்டுமென்று முற்றும் விரும்புகிறேன். ஏனெனில் அப்பொழுது என் குழந்தையுடன் விண்ணவருலகஞ்சென்று, நன்மனைவிகள் வசிக்குமிடத்தில், என் நாயகன் வரவை யெதிர்பார்த்திருப்பேன். ஆனால் 'ஸௌநா[illegible] முன்னிறப்பதாயிருந்தால், [illegible]ஷ்டமே, தினம்போல் அவ்வருமைத்தலையை மடியில் வைத்துக்கொண்டு, சந்தோஷமாக் காஷ்டத்தில் தீமூட்டுவதை யெதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். ஏனெனில், ஒருமனைவி இப்படித் தன்னுயிரைக் கொடுப்பாளானால், அவளதன்பினால் அவள் புருஷனுக்கு, அவள் தலையிலுள்ள ஒவ்வொரு மயிருக்கும் ஒரு கோடிவருஷம், சுவர்க்கானுபவம் கிடைக்குமென்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஆகையினால் சிறிதும் எனக்குப் பயமில்லை; ஆகையினால் என் வாழ்வும் இனிமையாகச் செல

கிறது. ஆயினும், வருத்தமும் வறுமையும் பாபமும் துன்பமும் நிறைந்த மற்ற ஜீவர்களை நான் சிறிதும் மறக்கவில்லை. அவர்கள்மேல் கடவுள் கிருபை வைப்பாராகவென்று பிரார்த்திக்கிறேன். எனக்கு, எது வரவேண்டியதோ—எது வருமோ—அது நல்லதாகவே வருமென்று நம்பி; நல்லதென்று எனக்குத் தோன்றுவதைத் தாழ்மையாகச் செய்யவும், சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் முயலுகிறேன்" என்றாள்.

அதற்கு கௌதமர், "உன் சிறிய அறிவு முதியோர் உணர்விலும் ஞானமுடையதாய், பெரியோர்க்கும் புத்தி புகட்டுகின்றது. நன்மையையும் கடமையையும்பற்றி உனக்குத் தெரிந்ததைக்கொண்டு திருப்தியடையக்கடவை! உன்போன்ற புஷ்பங்கள் அமைதியான நிழலிலேயே வளரவேண்டும். உச்சிவெயிலுக்கொப்பான சத்தியத்தினொளி மெல்லிய தளிர்களுக்கு ஏற்றதன்று. அவைகள் அமர்ந்த வெயிலில் வளர்ந்து பின்ஜன்மங்களில் தம் உச்சிகளை உயர ஆகாயத்திற்கிளப்பி சத்தியமாகிய சூரியனதொளியை உண்ணவேண்டும். என்னை வணங்கிய உன்னை நான் வணங்குகிறேன். அன்பினாலேயே கூட்டிற்குப் பறந்துபோகும் புறாவைப்போல, அறி

யாமலே கற்றுணர்ந்த உன்னிடத்திலிருந்தே, துயருறும் மனிதர்க்கு நற்கதியுண்டென்பது தெரியவருகிறது. நீ சுகமே போ. நீ எக்காலமும் சந்தோஷமாயிருக்கக்கடவை! உன் எண்ணம் நிறைவெய்தியதுபோல் என்காரியமும் கைகூடக்கடவதாக வேண்டிக்கொள்" என, அவளும், "நீரும் உமது காரியத்தில் சித்தியடையக்கடவீர்!" என்று சொல்லி, தன் வீட்டை நோக்கித் திரும்பினாள்.

உடனே கௌதமர், அவ்வுணவினால் பலமடைந்து—அதன்கீழ் அவர் ஞானமடைந்ததனால் போதி* மரமென்று பெயர்பெற்ற—ஒரு பெரிய விருக்ஷத்தின்கீழ் சென்றார்.

---

* இதன்பேர், போதம் (𑌬𑍋𑌧𑌂) = அறிவு, என்ற ஸம்ஸ்கிருத பதத்தினின்று வந்தது. இதே வாக்கினின்றுதான் புத்தன் என்ற பெயரும் கௌதமர்க்கு வந்தது. அந்த மரத்தின் கீழ் அவருக்கும காமாதிசனுக்கரசனாகிய மாரனுக்கும் பெரிய யுத்தம் நடந்ததாகவும், அதில் அவர் ஜயித்ததாகவும், மறுநாட்காலையில் சூரியோதயத்துடன் உலகம் முழுவதும் சமாதானமாயிருந்ததாகவும் கதை. அதனால் கௌதம புத்தருக்கு மாரஜித் என்றும் பெயர்.

## VII.

### போதிமரத்தடியில் புத்தத்துவமடைந்து, தான் கண்டு பிடித்த உண்மை மார்க்கத்தை உலகுய்யுமாறு போதித்துக்கொண்டு, திரும்பக் கபில வாஸ்து வந்துசேர்தல்.

ஸித்தார்த்தன் பக்கத்திலில்லாததினால், மிகுந்த விசனத்துடன், சுத்தோதனன் இவ்வாண்டுகள் முழுவதும் வாழ்ந்துவந்தான். யசோதரையும், தன் நாயகனும் இறைவனுமாகிய கௌதமனையிழந்து, வாழ்வின் இன்பமொன்றையும் அறியாது மிகுந்த துயரத்துடன் காலத்தைத் தள்ளினாள். அடிக்கடி, ஏதாவது மாடுமேய்க்கிறவர்களோ அல்லது வியாபாரிகளோ ஒரு துறவியைக்கண்டதாக சமாசாரம் கொண்டுவருவார்கள். உடனே அரசனிடமிருந்து தூதர்கள்போய், விசாரித்து, வீட்டைத்துறந்து தனிமையாக அலையும் யாதானும் ஒரு துறவியைப்பற்றி சமாசாரம் கொண்டுவருவார்களேயன்றி; கபிலவாஸ்து ராஜவம்சத்திற்குக் கிரீடம்போல விளங்கிய, யசோதரையின் உயிர்க்குயிரான ஸித்தார்த்தனைப்பற்றி ஒரு செய்தியும் கொண்டுவந்ததில்லை. அவன் தன் தேசத்திலிருந்து வெகு தூரம் அலைந்து, தன் வீட்டை மறந்து, நன்றாக உருமாறியோ அல்லது இறந்தோ போய் விட்டானென்று அநேகர் எண்ணினார்கள்.

மாமரங்களெல்லாம் இளந்தளிர்களாலும் புஷ்பங்களாலும் சிறிய பிஞ்சுகளாலும் மூடப்பட்டு, பூமியெல்லாம் பச்சைப்போர்வை போர்த்து சந்தோஷித்திருக்கும் வசந்தகாலத்தில் ஒருநாள், யசோதரை, அரண்மனையைச்சுற்றிய உத்தியானவனத்தில்,—இருபக்கமும் தாமரை மலர்களால் மூடப்பட்டு முன்னாள் இவளும் ஸித்தார்த்தனும் சந்தோஷமாக விளையாடுவதை தன் கண்ணாடிபோன்ற மார்பில் பிரதிபலித்த—வாய்க்காலின் கரையில் நடந்துகொண்டிருந்தாள். அவள் கண்ணிமைகள் அழுது சிவந்திருந்தன. அவள் முகம்வாடி கன்னங்கள் ஒட்டியிருந்தன. முற்காலத்தில் புன்னகை தவழ்ந்துகொண்டிருந்த இதழ்கள் நன்றாக மூடி உள்ளிழுக்கப்பட்டிருந்தன. முன், கருவண்டுபோற் பிரகாசித்துக்கொண்டிருந்த கூந்தல், இப்பொழுது பேணுவாரின்றி, ஒளிமழுங்கி, சடைபிடித்து ஒருபக்கமாக இறக்கிக்கட்டப்பட்டிருந்தது. உடம்பில் ஒரு ஆபரணமும் தரியாமல், விதவைகளுடைபோல் வெள்ளையாயும் கரடுமுரடாயும் ஒருடை உடுத்திருந்தாள். தன் நாயகனது சப்தத்தில், மான் குட்டிபோல் கீழேபாவாது அசைந்துகொண்டிருந்த கால்கள், இப்பொழுது, மெல்ல

வருந்திகிடந்தன. இரவில் இளவெயில் எயித்ததுபோல், எவ்விடத்தும் இனிமையும் பிரகாசமும் கொடுத்துக்கொண்டிருந்த கண்கள், தமது இனிமையையும் பிரகாசத்தையும் இழந்து, வசந்தகாலம் வந்ததைச் சிறிதும் கவனியாது அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தன. ஸித்தார்த்தன் தன்னைவிட்டுப்போன நாள்முதல், எப்பொழுதும் தன்னுடனேயே கொண்டுபோய்க்கொண்டிருந்த அவனதரைக்கச்சையை ஒரு கையில் பிடித்திருந்தாள்; மற்றொரு கையால், ஸித்தார்த்தன் தன்பின் விட்டுப்போன ராகுலனின் கையினை நடத்தினாள். அவனுக்கு இப்பொழுது ஏழு வயதாயிருந்தது. அவன் தந்தையின் அழகும் இனிமையும் இவனிடமும் விளங்கின. அவன், தன் தாயின் விசனமொன்றையும் அறியாது, வசந்தகாலத்தைக்கண்டு சந்தோஷத்துடன் அவள்பக்கம் குதித்துக்கொண்டு சென்றான்.

11/198

இப்படி அவர்கள் தாமரைத்தடாகங்களின் பக்கமாக நடந்துகொண்டிருக்கையில், ராகுலன் அக்குளங்களில் அரிசியை வாரியிறைத்து, அவைகளிலுள்ள அழகிய மீன்கள் ஒன்றின்மேலொன்று விழுந்துகொண்டு அதைத் தின்பதைக் கண்டுகளித்துக்கொண்டிருந்தா

ன். யசோதரை, அப்பொழுது அங்கு பறந்துகொண்டிருந்த சில கொக்குகளைப் பார்த்து, "எப்பொழுதும் அலைந்துகொண்டிருக்கும் பறவைகளே! நீங்கள் என்னாதன் ஒளித்திருக்கும் இடத்தில் இறங்குவீர்களாயின், அவர் வாயினின்று ஒரு மொழிக்காக யசோதரை சாகிறாள் என்று அவரிடம் சொல்லுங்கள்" என்று பெருமூச்செறிந்தாள். இப்படி இவர்கள், ஒருவர் துக்கிப்பதும், மற்றவன் சந்தோஷமாக விளையாடுவதுமாக விருக்கையில், இரண்டு பெண்கள்வந்து, "தாயே! ஹஸ்திநாபுரத்து வர்த்தகர் இருவர், மிக விநோதமான ஆபரணங்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் வேறொன்று கொண்டுவந்திருப்பதை நோக்குங்கால், இதெல்லாம் அற்பமாகத்தோன்றும். ஏனெனில், இந்நாட்டிற்கு ஒரு திலகம்போன்ற, உமது நாயகன் ஸித்தார்த்தனைப்பற்றிச் செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் அவரை நேராகக்கண்டு தொழுதார்கள். ஏனெனில், அவர், முன் சோதிடர் கூறியதுபோல ஞானிகட்குள் ஞானியாயும், உலகம் வணங்கும் பரிசுத்தனாயும் இருக்கிறார். இன்சொல்லாலும், ஆகாயம்போல் உலகம் முழுவதும் பரந்த கருணையாலும், மனிதர்க்கு நன்

மார்க்கத்தைக் காண்பித்துக்கொடுத்து, உயிரையெல்லாம் முக்திநெறிகொண்டு சேர்க்கும் புத்தன்* ஆய்விட்டார். அவர் இவிடம் நோக்கிவருகிறாரென்று இவர்கள் சொல்லுகிறார்கள்” என்றார்கள்.

இதைக்கேட்டதும், யசோதரையுடலில்—இமயமலையில் பனிக்கட்டியுருகும்பொழுது கங்கை பிரவாகித்துப் பரப்பதுபோல்—சந்தோஷத்தினால் உதிரவெள்ளம் பரந்தது. கண்களில் நீர்சோர, இதழ்களில் புன்னகை தவழ, அப்பெண்களைப்பார்த்து, “அவ்வணிகரை விரைவில் அழைத்துவாருங்கள். அவர்கள் கொண்டுவரும் செய்தியைப் பானம்பண்ண என் செவிகள் தவிக்கின்றன. போய்

---

* கௌதம சாக்கியமுனியின் நாமங்களில் பின்வருவன சில:—புத்தர் = அறிவுடையவர். ததாகதர் = உண்மை ஞானமுடையவர். சர்வக்ஞர் = எல்லாம் அறிந்தவர். விநாயகர் = காப்பாற்றுபவர். சுகதர் = நல்ல ஞானத்தோடு கூடினவர். தர்மராஜர் = தருமத்துக்கெல்லாம் அரசன். மாரஜித் = மாரனை, அல்லது காமனை, ஜயித்தவர். லோகஜித் = உலகத்தை ஜயித்தவர். அத்வயவாதி = தத்வம் ஒன்றேயென்று ஸ்தாபிப்பவர். ஸர்வார்த்தஸித்தன் = எல்லாவற்றிலும் ஸித்தியடைந்தவர். பகவான் = பெரியவர்.

அவர்களைக் கொண்டுவாருங்கள். அவர்கள் சொல்வது உண்மையானல், அவர்களது பைகளை, அரசரும் பொறுமைகொள்ளும்படியான இரத்தினங்களால் நிரப்புவேன். போய் அழைத்துவாருங்கள்!" என்றாள்.

அவ்வர்த்தகரும், அவ்வின்பவீட்டின் அழகிய பாதைகளின் வழியாக, மெல்ல நடந்து, அவ்விடத்தழகுகளையெல்லாம் கண்டதிசயித்துக்கொண்டு, உள்ளறைக்குட் சென்றார்கள். அவர்கள் அங்குசென்றதும், அங்கே விரிக்கப்பட்டிருந்த ஒரு திரையின் பின்பக்கத்திலிருந்து, யசோதரை, தழதழத்த பேச்சுடன், அவர்களைப்பார்த்து, "ஐயன்மீர்! நீங்கள் வெகுதூரமிருந்து வருகிறீர்கள். நீங்கள் என் நாயகனைக்கண்டுமிருக்கிறீர்கள். இது உண்மையானல் நீங்கள் என் வீட்டிற்குத் தோழர்களாகிறீர்கள். உங்கள் வரவு சந்தோஷத்தை விளைக்கிறது" என்றாள்.

உடனே அவர்களில் திரிபுஷன் என்பவன்; "அரசியே! நாங்கள் அத்தூய இறைவனைக் கண்டோம்; அவர்சேவடிகளை வணங்கினோம். நீங்கள் இழந்த இளவரசன், இப்பொழுது, இராஜாதிராஜரிலும் சிரேஷ்டனாயிருக்கிறார். பல்கு நதியண்டையில், போதி மரத்

தின் நிழலில், எல்லார்க்குந்தோழன் எல்லார்க்கும் இறைவனான உம்நாதன், உலகத்தை பிரகாசிக்கும் தர்மத்தை அறிந்தார். உமக்குண்டான துயரத்தினால், நம் ஐயன் பேசும் வார்த்தைகளின் தேறுதலான்து இவ்வுலகத்திற்குக்கிடைத்தது. இவ்வுலகத்தின் துன்பமொன்றும் கிட்ட அணுகாதபடி, இவ்வுலக விஷயங்களினின்று மிக உயர்ந்து, சத்தியத்தின் தேஜஸினால் பிரகாசித்துக்கொண்டிருக்கிற பகவான் புத்தர் சுகமென்று நாங்கள் சொல்லவும் வேண்டுமோ? மேலும் அவர் ஒவ்வொரு நகரத்திலும் புகுந்து, முக்திக்குக் கொண்டுவந்துவிடும் உயர்ந்த மார்க்கத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது,—உலர்ந்த சருகுகள் காற்றின்பின் செல்வதுபோலவும், ஆட்டிடையன்பின் ஆட்டுக்கூட்டங்கள் செல்வதுபோலவும்—மனிதரது இருதயங்களும் இவர்பின் செல்கின்றன. கயைக்கருகிலுள்ள வனத்தில் நாங்களே அத்திருவாயினின்றுவரும் அற்புதவசனங்களைக் கேட்டோம். கேட்டு வணங்கினோம். அவர், மழைக்காலந்தொடங்குதற்குமுன் இவ்விடம் வருவார்” என்றான்.

அவன் இப்படிச்சொன்னதும், யசோதரை, கண்களில் ஆனந்த வெள்ளம் பெருக,

சந்தோஷத்தினுல் வார்த்தைகளகப்படாமல், அவர்களைப்பார்த்து, "நற்றேழர்களே! இச்சுவிசேஷத்தைக்கொண்டுவந்த உங்களுக்கு எக்காலமும் இன்பமே சித்திக்கட்டும்!" என்று ஆசிகூறி, பின்னும், "இப்பெரிய காரியம் எப்படி நிகழ்ந்ததென்று அறிவீர்களா?" என்று கேட்க,

பல்லுகனென்பவன், அவ்விடத்து ஜனங்கள் அறிந்ததைச் சொன்னுன். அரசன் போதிமரத்தடியிற்போன நாள் இரவில், காமக்குரோதாதி பிசாசுகளாலும் அவைகளின் பரிவாரங்களாலும் ஆகாயமிருண்டு பூமி அதிர்ந்ததையும்; பகவானுக்கும் அவைகளின் அரசனுகிய மாரனுக்கும் நடந்த பெரிய யுத்தத்தையும்; அவனை அவர்வென்று மெய்ஞ்ஞானத்தை அடைந்ததினுல் மனிதர்க்குவரும் சந்தோஷமே உருவெடுத்து வந்ததுபோல பகல் வெகு உற்சாகமாயும், அமைதியாயும் விடிந்ததையும்; ஸாக்கியமுனி, அன்று காலையில், அறிவினுல் வரும் ஆனந்தத்துடன் அம்மரத்தடியில் உட்கார்ந்திருந்ததையும், சொன்னுன். பின்னும் அவன் சொன்னதாவது:—

ஆனுல் இப்படி சந்தேகமாகிற புசலினின்று தப்பி சத்தியத்தின் கரையில் பத்திரமாக இறங்கினதே, அவருக்கு வெகுநாளைக்கு ஒரு

பெருவிசாரமாயிருந்தது. ஏனெனில் மனி
தர்கள், பாபங்களினிடம் மிகுந்த பிரியத்து
டன், மாயாரூபமான வஸ்துக்களைத் தழுவிக்
கொண்டு, ஆயிரம் ஊற்றுகளினின்று அக்கி
யானத்தைக் குடித்துக்கொண்டும், நல்லவழி
யைப் பார்ப்பதற்கு மனமில்லாமலும், தங்
களைக்கீழே பிடித்திழுக்கும் மனோவிகாரங்
களைவெல்ல பலமில்லாமலும் இருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட மனிதர்கள் எப்படி தனது
உயர்ந்த தர்மத்தை ஏற்றுக்கொள்வார்கள்?
கூட்டிலடைபட்டிருக்கும் பக்ஷி எப்படி, தான்
தப்பித்துக்கொள்வதற்காக திறந்துவைக்கப்
பட்டிருக்கும் வாசலை விலக்குகிறதோ, அது
போலல்லவோ மனிதர்களும் இந்தக் கஷ்
டத்தினின்று விடுபடுவதற்காக அளிக்கப்
படும் வழியை விலக்குவார்கள்?—என்று இ
வ்விதமாக எண்ணினார். ஆகையால், நம்
ஐயன் முக்திநெறியைக்கண்டுபிடித்தும், அவ்
வழி மனிதர்க்கு [illegible] பிக்கஷ்டமானதென்
று எண்ணிப் போய்விட்டாரானால், இவ்வுலக
ம் நாதனற்று அவரது வெற்றியால் வரும் உத
வியை இழந்திருக்கும். ஆயினும், அவர்,
உயிர்வாழ்வன மேலுள்ள கருணையால, இவ்
வுலகத்தை அதின்போக்கில்விட மனமின்றி,
விசாரமாயிருக்கும்பொழுது, பூமாதேவியே

மிருந்த வியாகுலத்தை யடைந்ததுபோல், ஒரு விசனகரமான சப்தம், "𑌨𑌷𑍍𑌟𑍋𑌽𑌹𑌂 𑌭𑍋, 𑌨𑌷𑍍𑌟𑍋 𑌲𑍋𑌕𑌃" "நான் கெட்டேன்; லோகம் நசித்துப்போய்விட்டது" என்று கேட்டது. பின் சிறிது நேரம் எல்லாம் மௌனமாயிருந்து, பிறகு, இரங்கிக் கெஞ்சுவதுபோல் ஒரு பெருமூச்சு காற்றினால் அடித்துக்கொண்டு வரப்பட்டு, "𑌦𑍇𑌶𑌯𑌤𑍁, 𑌧𑌰𑍍𑌮𑌂" "பகவன்! உனது தர்மம் சொல்லப்படட்டும்" என்றது. உடனே நமது ஐயன், "ஆம்! நான் சொல்வதைச் சொல்கிறேன்; அறிபவர் அறியட்டும்" என்று எழுந்தார்.

அங்கிருந்து அவர் காசிக்குச் சென்றார். அங்குவசித்த ஐந்து தபசிகளிடம், மனிதனுக்கு தான் செய்த பழவினையைத்தவிர வேறு விதியில்லையென்றும், தானாகச்செய்து கொள்வதைத்தவிர ஒருவனுக்கு வேறு நரகமில்லையென்றும், தன் மனோவிகாரங்களை அடக்குபவனுக்குக்கிடையாத சுவர்க்கபோகமில்லையென்றும், ஜனனமரணத்திலிருந்து விடுபடுவதற்கு வழி இன்னதென்றும் காண்பித்தார். அவ்வைந்துபேர்களில் முதல் முதல் கௌண்டினியரென்பவரும், பின் பத்ரகர், அஸ்வஜித், பஸவர், மஹாநாமர், என்றவர்களும், அவரது தர்மத்தை ஒப்புக்கொ

ண்டார்கள். காசி உத்தியானவனத்திலிருக்கும்பொழுது, யசத் என்னும் அரசனும் ஐம்பத்நான்கு பிரபுக்களும் வந்து, நம்மையன் பேசினதைக்கேட்டு, அவரை வணங்கி, அவரைப் பின்தொடர்ந்தார்கள். ஏனெனில் மணற்காட்டின் வழியாய் ஒரு சிற்றாறு புறப்படும்பொழுது, புல்லும் புஷ்பமும் அங்கு உண்டாவதுபோல, நம்மையனது திருமொழிகள் மனிதருள்ளத்திற் செல்லும்பொழுது, அங்கு புதிதாக ஒரு சாந்தமும், அமைதியும், அறிவும் தழைக்கின்றன.

இவ்வறுபது பெயர்களுக்கும நன்ருக தர்மத்தைப் போதித்து; அவர்களை, மனம் வாக்குக் காயங்களை அடக்கி, காமாதிகளினின்றுவிடுபட்டவர்களாகப் பழக்கி; ஜனங்களுக்கு தர்மத்தைப்போதிக்கும்படி, நாலாதிக்குகளிலும் அனுப்பினர். ஆனல் அவர் தெற்குமுகமாகத்திரும்பி, பிம்பிசாரனது இராச்சியத்திற்கு வந்து அங்கு அநேகநாள் தர்மத்தைப்போதித்தார். கடைசியாக பிம்பிசாரனும் அவனது ஜனங்களும் இவரது போதனையை ஒப்புக்கொண்டார்கள். பிம்பிசாரன் நம்மையனுக்கு, ராஜக்கிருகத்திற்கடுத்த வேணுவனமென்ற தோட்டத்தைக் கொடுத்தான். அத்தோட்டத்தின் வாயிலில், பின்வருமாறு

வரைந்த ஒரு கல்லும் நட்டான்:—

**வாழ்வின் தன்மையையும், அதற்குக் காரணத்தையும் ததாகதர் தெரியப்படுத்தினர்.—வாழ்வின் கஷ்டத்தினின்று நீங்கும் வழியை அறிவித்தார்.**

அத்தோட்டத்தில் ஒரு பெரிய சபைகூட அதின் முன் பிரசங்கஞ்செய்தார். அவரது வார்த்தைகளின் ஞானமும் சக்தியும் கேட்டவர் மனதையெல்லாம் கவர்ந்தது. அப்பொழுது தொள்ளாயிரம் பேர் நம்மையனைப் போல் காவிவஸ்திரமுடுத்து, அவர்க்குச் சீடரானார்கள்.

இவ்விதம் ஸித்தார்த்தவண்ணலின் கீர்த்தியைப்பற்றி, அவ்வர்த்தகர் சொல்லிமுடித்த பின், அரசி அவர்களுக்கு வெகுமதியும் வந்தனங்களும் அளித்து, அவர்களைப்பார்த்து தன் நாயகன் எந்தவழியாக வருகிறார் என்று கேட்க அவர்கள், "ராஜக்கிருகத்திலிருந்து இவ்விடம் வர சுலபமான வழி சோனை நதியின் அருகாகவருகிறது. நாங்கள் இவ்விடம், மிக மெதுவாக நடந்து, ஒரு மாதத்தில் வந்தோம்" என்றார்கள்.

இந்தச்செய்தி அரசனுக்கு எட்டியவுடன், அவன் ஒன்பது பிரபுக்களைக் குதிரை மேலேற்றியனுப்பி, அவர்கள் ஒவ்வொருவரும், "சுத்தோதனன் உன்னைவிட்டு ஏழுவருஷம் பிரிந்

திருந்ததினல், மரணத்திற்குச் சமீபமாயிருக்கிருன். தன் மகனது முகத்தை இன்னுமொரு முறை பாராமலே யிறந்துபோவதற்கு முன் தன்னுட்டிற்கு வரும்படி ஸித்தார்த்தனைக் கேட்டுக்கொள்கிருன்" என்று தனித்தனி சொல்லும்படி கட்டளையிட்டான். யசோதரையும் ஒன்பது குதிரை வீரரை அனுப்பி, "உன் குலத்திளவரசி, ராகுலனது அன்னை,—ஆம்பல் சந்திரனது வரவை யெதிர்பார்ப்பதுபோலவும், அசோகம் ஸ்திரீயின் காலை யெதிர்பார்ப்பதுபோலவும்,—உம்மை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிருள். தாங்கள் நீத்ததைவிட அதிகமாகக் கண்டுபிடித்திருந்தால், அதில் அவளது பாகத்தையும் ராகுலனது பாகத்தையும் கெஞ்சிக்கேட்கிருள்" என்று சொல்லச்சொன்னுள். அப்படியே அவர்கள் விரைந்துசென்று, ராஜக்கிருகத்தையடைந்து, வேலுவனத்துட்புகுந்தார்கள். அப்பொழுது தான் புத்தர் தன் தர்மத்தைப்போதித்துக் கொண்டிருந்தார். அவர்கள் இதைக் கேட்டதும், ஒவ்வொருவனும், அரசனையும் அரசியையும் தான்வந்த காரியத்தையும் மறந்து, அன்பே உயிராக விளங்கும் அவரது திருவுருவை நோக்கியவண்ணமாக அதிலேயே மயங்கிநின்ருர்கள். கருணை சுரந்துகொண்டு,

கேட்பவர் மனதிலுள்ள அஞ்ஞான விருளையெல்லாம் போக்கடிக்கும் பரிசுத்தமான வார்த்தைகளைக்கேட்டு அவைகளினாலே மனமருண்டு நின்றார்கள். ஒரு சிற்றெறும்பு, தான் எவ்வித காரியத்தை நோக்கிபோய்க்கொண்டிருந்தபோதிலும், அருகில் ஒரு சர்க்கரைக் கட்டியைக் கண்டால், தன் காரியத்தையெல்லாம்விட்டு, அதைச் சுற்றிச் சுற்றி வளையவருவதுபோல, இத்தூதர்கள், பகவான் புத்தரது வார்த்தையைக் கேட்டு, அவர்கள் எதற்காக இவ்வளவு தூரம் வந்தார்களோ அக்காரியத்தைவிட்டு, ஒன்றையும் கவனியாது, அவரது பரிவாரத்துடன் சேர்ந்தார்கள். அவர்கள் திரும்பி வராததைப்பார்த்து, சுத்தோதனன், தன் சபையில் முக்கியமானவனும், மிக நம்பிக்கையுள்ளவனும், ஸித்தார்த்தனது பால்ய சிநேகனுமான, உதாயி என்பவனை அனுப்பினான். அவன் அவ்வனத்தண்டை செல்லும்பொழுது, காதைப் பஞ்சினால் அடைத்துக்கொண்டு, அவ்விடத்திற்குள் புகுந்து, ஸித்தார்த்தனிடம் நேராகச்சென்று, அரசனும் யசோதரையும் தன்னிடம் சொல்லிவிட்ட செய்தியைச் சொன்னான்.

உடனே கௌதமர் தலைவணங்கி, ஜனங்கள் முன்பாக, பின்வருமாறு சொன்னார்:

"நான் நிச்சயமாகப்போவேன், இது என் கடமை; என் விருப்பமாகவும் இருக்கிறது. நமக்கு இவ்வுயிர் கிடைத்திருப்பதினால்தான் அல்லவோ,—நாம் தருமத்தை யநுசரித்து, முன் செய்த பாபங்களைத் தீர அநுபவித்துத் தொலைத்து, அவைகளுக்கு ஒன்றும்புதிதாகச் சேர்க்காமல், பூரண அன்பினாலும் அன்பாகிய செயல்களினாலுமே வாழ்வை நிரப்பி, இனி ஜனனமரணத்தை யடையாமலிருக்க—ஏதுவாயிருக்கிறது. ஆனதினால், ஒருவனும் தனக்கு இவ்வுயிரைக்கொடுத்தவர்களுக்கு மரியாதைசெய்யத் தவறுகிறக்கட்டும்.—நான் இப்பொழுதே புறப்படுவதாக அரசனும் இளவரசியும் அறியட்டும்" என்றார்.

இது அங்கருக்கெட்டியதும், அங்கரமும், அதின் சுற்றுப்புறமுள்ள ஊர்களும் அல்லோல கல்லோலப்பட்டன. அங்கரத்தின் தெற்குவாயிலில், அழகாகச் சித்திரிக்கப்பட்ட ஒரு மண்டபம் இயற்றப்பட்டது. வீதிகளெல்லாம் வெண்மணல் விரித்து, வாழை கமுகுகள் வைத்து, மகரதோரணங்கள் நாட்டப்பட்டன. எங்குபோனாலும் பனிநீரும் சந்தனமும் வாரியிறைக்கப்பட்டு பரிமளம் வீசிக்கொண்டிருந்தது. ஒவ்வோரிடத்திலும் கொடிச்சீலைகள் காற்றில் அசைந்துகொண்

டிருந்தன. மேலும், ஸித்தார்த்தன் வரும் தினத்தன்று, வெள்ளியம்பாரிகளுடன் பொற்பூண்கட்டிய தந்தங்களையுடைய யானைகள், இத்தனையித்தனை, அவன் ஆற்றைக் கடக்குமிடத்து காத்திருக்கவேண்டுமென்றும்; இன்னின்ன விடங்களில், "ஸித்தார்த்தன் வருகிறான்" என்று முரசங்கள் அதிரவேண்டுமென்றும்; இன்னின்ன சோலைகளில் பிரபுக்கள் காத்திருந்து, அவன் வரும்பொழுது, கீழிறங்கி வணங்கவேண்டுமென்றும்; இன்னின்ன விடங்களில், நாட்டியப் பெண்கள், ஆட்டத்துடனும் பாட்டுடனும், அவன் சவாரிசெய்யும் குதிரையின் காலடிகள் நன்று பமுங்கும்படி, அவன் வரும்பொழுது புஷ்பங்களை வாரியிறைக்கவேண்டுமென்றும்; நகர் முழுவதும் இனிய கீதவாத்தியங்கள் கோஷிக்கவேண்டுமென்றும் ஏற்பாடாயிருந்தது. ஜனங்களும் தினந்தோறும், ஸித்தார்த்தன் வருவதைத்தெரிவிக்க முதற்பறை எப்பொழுது முழங்கப்போகிறதென்று, எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

யசோதரை எல்லார்க்கும் முந்தியிருக்கவேண்டுமென்ற ஆவலுடன், நகரமதில்களுக்கு வெளியே, புதிதாக மண்டபங்கட்டப்பட்டிருந்த இடத்திற்கு வந்துசேர்ந்தாள். அம்

மண்டபத்தின் ஒரு பக்கமாக, பசுமையான மரங்களும், புதிதாகச்செதுக்கப்பட்டு வளைந்த பாதைகளும், பழக்கொடிகளும் புஷ்பச்செடிகளும் வளர்கின்ற மேடைகளும், நிறைந்துள்ள, நிக்ரோதம், என்ற வனம் நெடுந்தூரம் பரவியிருந்தது. நகரத்தினின்று வெளியேபோகும் பாதை, இவ்வனத்தின் ஒரு ஓரமாகப்போயிற்று. அப்பாதையின் மற்றொரு பக்கத்தில், அரசர்க்கும் அந்தணர்க்கும் அருகில்கூடப் போகமுடியாத சண்டாளர்களின் குடிசைகள் நின்றன. ஆயினும், இவர்களும் காலமே எழுந்து, சோயில் மத்தளமோ யானைப்பறையோ கேட்டவுடன் வழியைப் பார்ப்பதும், மரங்களிலேறுவதும், ஒருவரும் வராதது கண்டு, வாசலைப்பெருக்குவதும், வழியில் போடப்பட்டிருந்த பச்சைப்பந்தர்களின் வாடிப்போன தழைகளை எடுத்துப் புதியவைகளை வைக்கிறதும், அடிக்கடி வழிப்போக்கர்களை ஸித்தார்த்தன் வருவதைப்பற்றி ஏதாவது பேச்சுண்டாவென்று கேட்பதும், இப்படி ஆவலுடன் இவர்களும் காத்துக்கொண்டிருந்தார்கள். யசோதரையும் இதையெல்லாம் பார்த்து, அவர்களைப்போலவே, ஸித்தார்த்தனைப்பற்றி ஏதாவது பேச்சுண்டா

வென்று, மிகக்கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது, ஒருவர், தலையை நன்றாகச் சிரைத்து, ஆண்டிகள்போல் காவிவஸ்திரமுடுத்து, கையில் சுரைக் குடுக்கைபோன்ற மண்பாத்திரமொன்றைப் பிடித்து, மெல்ல நடந்து வருவதைக்கண்டாள். அவர் அப்பாத்திரத்தை ஒவ்வொரு குடிசைவாயிலிலும் நீட்டி, கொடுத்தவர்களுக்கு மெதுவாக வந்தனமளித்து, கொடாத வீடுகளைக் கவனியாது போய்க்கொண்டிருந்தார். அவரை, அவர்போல காவிவஸ்திரந்தரித்த இருவர் தொடர்ந்தார்கள். ஆனால் கையில் மண்பாத்திரம் கொண்டுபோனவரது உருவத்தில் ஒரு பிரபுத்துவமும், கண்டவர் உடனே மரியாதை செய்யும்படியான ஒரு பெருந்தன்மையும் விளங்கிற்று. அவர் இருந்த இடத்திலேயே ஒரு மேன்மை நிறைந்திருந்தது. அவர் நடையில் விசேஷமான காம்பீரியம் தோன்றிற்று. அவரது பார்வை பரிசுத்தம் செய்யத்தக்க ஓர் சக்தியாக எல்லார்மேலும் பட்டது. அதினால், கொடுப்பவர்கள், பாத்திரத்தில் பிச்சைபோடும்பொழுது, அவர் முகத்தைப் பார்த்ததும், மிகுந்த பயபக்தியுடன் வணங்கினார்கள்; சிலர் தாம் ஏழையா

யிருப்பதை நொந்து, இன்னும் இவர்க்குக் கொடுக்க ஏதாவது உண்டோவென்று பார்க்க வீட்டை நோக்கி ஓடினார்கள். சீக்கிரத்தில், ஆடவரும், பெண்டிரும், பிள்ளைகளும், அவருக்குப்பின் கூட்டமாகக் கூடி, "இது யார்? இவ்வளவு தெய்வத்தன்மை பொருந்திய துறவியும் இங்கு இருக்கிறாரோ?" என்று, ஒருவருக்கொருவர் மெல்லப்பேசிக் கொண்டார்கள். இப்படி அவர் நகரவாசிகளினருகிற் செல்லும்பொழுது; அங்கு இயற்றப்பட்டிருந்த மண்டபத்தின் கதவு திறக்கப்பட்டது. உடனே உள்ளிருந்து யசோதரை வெளியேவந்து, அவர்முன் நின்று, "ஸித்தார்த்த! என்னாத!" என்று, கண்ணீர்பெருகக் கதறியழுதுகொண்டு, அவர்காலில் விழுந்து கிடந்தாள்.

இப்படி, ஸித்தார்த்தன், தலையைமொட்டையடித்துக்கொண்டு, ஆண்டிகளைப்போல் காஷாயவஸ்திரமுடுத்து, ஈனஜாதிகள் கொடுக்கும் பிச்சைக்காக தன் பாத்திரத்தை நீட்டிக்கொண்டு வருகிறசெய்தி அரசனுக்கெட்டியதும், விசனமும் கோபமும் அவன் மனதினின்று அன்பை ஓட்டிவிட்டன. மீசை படபடவென்று துடிக்க, கண்களில் தீப்பொறி பறக்க, தாடியைப் பிடித்திழுத்துக்கொண்டு

அக்கிருந்து எழுந்து; அவனது கோபத்தைக்கண்டு நடுங்கிக்கொண்டு பிரபுக்கள் பின்வர, புருவமிரண்டும் ஒன்றுசேரும்படி கடுத்துக்கொண்டு தன் குதிரைமேல் தாவி, இருபுறமும் இரத்தம் புறப்பட அதைக் குத்தி; அரசன் வருகிறானென்று ஜனங்கள் விலகுவதற்குக்கூட இடமில்லாது, வீதியின் வழியாய் விரட்டிக்கொண்டுபோனான். ஆனால் நகரத்தின் தெற்கு வாயிலுக்குத் திரும்புமிடத்தில் உள்ள கோவிலினருகில், ஒரு பெரிய கூட்டம் இவனது விரைவைத்தடுத்தது. ஒவ்வொரு தெருவினின்றும் ஜனங்கள் வந்துகொண்டிருந்ததால், அக்கூட்டம் இன்னும் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. அங்கே, குதிரையினின்றிறங்கி, கூட்டத்துக்குள் நடந்து செல்ல, அங்கு புத்தமுனியைக் கண்டான். கௌதமரும் சாந்தமான பார்வையுடன் அரசனை வணங்கவே, அவனது கோபமெல்லாம் சூரியனைக்கண்ட இருள்போல நீங்கிற்று. புத்தரது முகத்தில் விளங்கின, மண்ணாசர்க்கரிதான பெருந்தன்மையையும், இப்படி மனிதரையெல்லாம் கூட்டமாகப் பின்தொடரச்செய்த பிரபுத்துவத்தையும் பரிசுத்தத்தையும், கண்ணாரக் கண்டு களிப்பதே ஒரு பெரிய பாக்கியமா

கடு தோன்றிற்று. ஆயினும் அரசன் விசனத்துடன் தன் மகனைப்பார்த்து, சொன்னான்: "இவ்விடத்தில் தெய்வம்போல் ஆதரிக்கப்பட்டுவந்த ஸித்தார்த்தன், இப்படி மொட்டையடித்து, கந்தையுடுத்து, ஈனஜாதிகளிடம் பிச்சையெடுத்துக்கொண்டு தன்னூருக்குள் புகும்படியாகவோ முடிந்தது? என் குழந்தாய்! இந்நாட்டிற்குமட்டுமல்ல, உனக்குக்கொடுப்பதற்காகவே அரசும் அதிகாரமும் வகிக்கும் மன்னரது காடுகளுக்கும் நீ உரிமை பாராட்டவேண்டியவனன்றோ? நீ உன் அந்தஸ்துக்குத்தக்கபடி, மின்னுகிற வாட்களைப் பிடித்த போர்வீரர் பலர், குதிரைமேலும், கால்நடையாகவும், புடைசூழ வல்லவோ வரவேண்டும்? உன்னை எதிர்பார்த்து அழைப்பதற்காக என் படைவீரரெல்லாம், அதோ பாதையினருகிற்காத்துக்கொண்டிருக்கிறார்கள். உன் தந்தை விசனிக்க, இத்தனை வருஷங்களாக எங்கேயிருந்தாய்? அதோ நிற்கும், யசோதரையையும், சங்கீதத்தில் கொஞ்சமும் விருப்பமில்லாமல், தன் அழகான வஸ்திரங்களைக் கொஞ்சமும் தரியாமல், விதவைகள்போல் சுகங்களை வெறுத்து, வாழ்ந்துவந்தாள். இப்பொழுதுதான், காவிவஸ்திரந்தரித்த பிச்சைக்காரனை, வீட்டிற்

கழைக்க பொன்னுடை தரித்துவந்திருக்கிருள். என் மகனே, ஏன் இப்படி?"

புத்தமுனிவர், அதற்கு, "தந்தையே! இது என் வமிச பரம்பரையாக நடந்துவரும் வழக்கம்" என்று சொல்ல,

அரசன், "உன் வமிசத்தார் ஆதிகாலந் தொட்டு முடிதரித்த மன்னராய் இருந்தார்களேயன்றி, இம்மாதிரிக் காரியம் செய்தவர் ஒருவரும் இல்லை" என்றான்.

அதற்கு கௌதமர், "நான் இவ்வுலகத்தில் பிறந்த வமிசத்தைப்பற்றிச் சொல்லவில்லை. இதுவரையும் அவதரித்தும், இனி அவதரிக்கவும் போகின்ற புத்தர்களின் வமிசத்தைப்பற்றிச் சொன்னேன். நான் அவர்களில் ஒருவன். இப்பொழுது நடப்பது இதற்கு முன்னும் நடந்திருக்கிறது. தனது வாயிலில், கவசம் தரித்த மன்னவன் ஒருவன், காவியுடையுடுத்த தன் மகனைப் பார்ப்பதும்; அன்பினுலும், சாந்தத்தினுலும், உலகத்தின் அரசரெல்லாரிலும், உயர்ந்தவனுய் உலகத்திற்கு உதவிசெய்ய வந்தவன், தன் தந்தையை வணங்கி, மரியாதையுடனும் அன்புடனும், தான் தேடிவந்த திரவியத்தை, தனக்கு உயிர்கொடுத்துத் தன்னை வளர்த்த தந்தையிடம் அர்ப்பணம் செய்கிறதும்; ஆகிய இ

ணவைகள் இதற்கு முன்பும் நடந்திருக்கின்றன. அது போலவே, நான் தேடிக்கொண்டு வந்த திரவியத்தை உமது பாதத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்றார். அதற்கு, அரசன், "எது திரவியம்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

உடனே கௌதமர், அரசனது கையை மெதுவாகப்பிடித்துக்கொண்டு, ஒரு புறம் அரசனும் ஒரு புறம் யசோதரையும், நடந்து வர, வீதிகளின் வழியாகப் போகும்பொழுதே; மனவமைதிக்கும் பரிசுத்தத்திற்கும் வேண்டிய விஷயங்களைப்பற்றியும்; எல்லா ஞானத்தையும் தம்முள் அடக்கிக்கொண்டிருக்கிற நான்கு மேன்மையான உண்மைகளை*யும், தொண்டமானும் தோட்டியும் எல்லாரும் அநுசரித்து இவ்வாழ்வாகிய பந்தத்தினின்று விடுபட்டு நிர்வாண†த்தையடைவதற்கான எண்மடங்கு வழியை‡யும், பற்றிச் சொல

* இதை கௌதமசாக்கியமுனி 'சதுர் ஆரிய ஸத்திய'மென்று சொன்னார்.

† இது, மோக்ஷத்திற்கு ஸாக்கியமுனி இட்ட பெயர். நாம் இப்பொழுது 'மனிதன்' என்று சொல்வதெல்லாம், அப்பொழுதில்லாமலாகிறதினால், அதற்கு இப்பெயர் வந்தது.

‡ இதை, கௌதமர், நிர்வாணத்தில், "அஷ்டாங்க மார்க்கம்" என்றார். இவைகள் அடுத்த அத்தியாயத்தில் விரித்துச்சொல்லப்படும்.

விக்கொண்டுபோனார். அரசன், தன்கையிலேயே பிச்சைப் பாத்திரத்தைப் பிடித்துக்கொண்டு, தன் மகனது வாயினின்று வரும் சொற்களைக் கவனித்துக்கேட்க, இப்படி, எல்லாரும் அரண்மனை வந்து சேர்ந்தார்கள்.

---

## VIII.

### புத்தர் கபிலவாஸ்து வந்தடைந்து தம் சுற்றத்தாருக்குத் தருமத்தைப்போதித்தல்.

காசியினின்று வடகிழக்காக ஐந்து நாள் பயணத்தில், கொஹான் நதியின் கரையில், ஒரு விரிந்த மைதானமிருக்கிறது. இமய மலைத்தொடரினின்று விடும் கிளைகளின் சிகரங்கள் அங்கிருந்து நன்றாகத்தெரிகின்றன. அவ்விடம், அதினருகே ஓடும் நதியின் ஊரந்தினால், எப்பொழுதும் செழிப்பாய், பசுமையான சோலைகளினால் சூழப்பட்டு; எங்கு பார்த்தாலும் வெகு ரம்மியமாயும், குளிர்ச்சியாயும் இப்பொழுதுகூட பரிசுத்தமான ஆகாயம் நிறைந்தும், இருக்கிறது. முற்காலத்தில் நாகரீகம் நிறைந்த நகரத்தின் அடையாளங்கள் இன்னும் இருக்கின்றன; ஏனெனில் இங்கேதான், சுத்தோதனனது நகரமாகிய கபிலவாஸ்து நின்றது. இப்பொழுது, அரசனது சபாமண்டபத்தில் நரிக்கூட்டங்கள் அர

[illegible]ளுகின்றன; அரசர் நடந்துகொண்டிருந்த சித்திரித்த தளங்களில் ஒந்தியும் அணிலும் உலாவுகின்றன; அழகாகக் கொத்தப்பட்ட பளிங்குக்கற்கள் மீது, பாம்பு தன் உடலைச் சுருட்டிக்கொண்டு உறங்குகின்றது: அவ்விடத்துக் குன்றுகளும், சிற்றூறும், புல்தரைகளும், மந்தமாருதமுமே, மாறுபடாது நிற்கின்றன. மற்றவையெல்லாம், இந்தலோகத்தின் மற்ற ஆடம்பரங்களைப்போல், ஒடிமறைந்துவிட்டன. இவ்விடத்து நிற்கும் குன்றின் மேல்தான், கௌதமர் ஒருநாள் சாயந்திரம் தன் பந்துக்களுக்கு தர்மத்தைப்போதித்தார்.

அவர் அரசனுக்கு வலக்கைப்புறத்தில் இருந்தார். சுற்றும் அனந்தன், தேவதத்தன் முதலான பிரபுக்களெல்லாரும் நின்றார்கள். அவருக்குப்பின், அவரது சீடர்களில் முக்கியமானவர்களான செரியத், முகல்லன் என்பவர்கள் நின்றனர். அவரது பாதத்தருகில் யசோதரையும் ராகுலனும் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது, விண்ணுலகினின்று இமையவரும் பிதிருக்களும் ஒருங்குதிரண்டு வந்து கேட்டுக்கொண்டிருந்தார்களென்றும்; தாழ்ந்த பிராணிகள்கூட, கௌதமர் தம்மேல் வைத்திருக்கும் அன்பையறிந்து, தமக்கு விமோசனகாலம் கிட்டியதென்று, காட்டில்

மிக சமாதானமாயும், சந்தோஷமாயும் இருந்தனவென்றும்; அவரது சரித்திரத்தைச் சொல்லும் புத்தகங்கள் கூறுகின்றன.

அப்பொழுது, கௌதமர், தற்காலத்தில் நாற்பது கோடி ஜனங்களால் அநுசரிக்கப் பட்டுவரும் தருமத்தை எடுத்துச் சொன்னார்:—

*　*　*　*

"ஆதியில் அந்தகாரமிருந்ததாகவும், அந்த அந்தகாரத்தில் பிரமத்தினது தியானத்தினால் இவ்வுலகங்கள் உண்டானதாகவும் சாஸ்திரங்கள் சொல்கின்றன. நீங்கள் பிரமத்தையும் ஆதியையும் தேடவேண்டாம்; ஒருவராலும் அதை இந்த அசேதனமான கண்களாலும், மனதினாலும் பார்க்கமுடியாது. வெண்காயத்தின் வித்தைக்காணப்போகிறேன் என்று, ஒருவன் அதை உரிக்க உரிக்க, புதிய தோல்கள் வெளிப்படுகின்றதுபோல், ஒருவன் பிரமத்தைக் காணப்போகிறேன் என்று முயல முயல வேறு மாயைகள் வந்து கண்ணை மறைக்கின்றன.

"நக்ஷத்திரங்கள் தம்வழியே சுழல்கின்றன. ஏனென்றும் எப்படியென்றும் கேட்கவேண்டாம். ஜனனமும் மரணமும், சுகமும் துக்கமும், காரண காரியங்களும், ஆற்றைப்போல

எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கிற வாழ்வும், உள்ளனவென்று அறிவதேபோதும். ஆற்று நீர் ஒரே மாதிரியாய் இருக்கிறது; ஆயினும் எப்பொழுதும் மாறுபட்டுக்கொண்டே இருக்கிறது. திவலையின் பின் திவலையாக ஓய்வின்றி ஓடி, சமுத்திரத்தில் போய் விழுந்து, அங்கிருந்து மேகமாக உயரக்கிளம்பி, மலைகளில் நீரைச்சொரிய, அந்நீர் மறுபடியும் ஆற்றின்வழி நடக்கின்றது. இது போலவே வாழ்வும்.

“இருப்பதெல்லாம் மாயை என்று அறிவதேபோதும். இப்பூமியும், ஆகாயமும், ஆகாயத்திலுள்ள எண்ணிறந்த உலகங்களும், எப்பொழுதும் மாறுபட்டுக்கொண்டே இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் ஓய்வின்றி சண்டையும் சச்சரவுமாக இருக்கிறது. இதை ஒருவராலும் தடுக்கவும் முடியவில்லை.

“பிரார்த்திக்கவேண்டாம்; பிரார்த்தனையினால், உங்களைச்சூழ்ந்திருக்கும் இருள் நீங்காது. முன்னையே துக்கித்துக்கொண்டிருக்கும் உமது மனதை இன்னும் விரதங்களினால் வருத்தவேண்டாம். என் சகோதரர்களே! சகோதரிகளே! தேவர்களிடத்திலிருந்து பூஜையினாலும் பலியினாலும் ஒன்றை அடைய விரும்பவேண்டாம். உங்களுக்கு முக்தி, உங

களிடத்திலிருந்தே உண்டாகவேண்டும். ஒவ்வொருவனும் தானே தன்னைக் கட்டும் கயிற்றை முறுக்குகிறான். உயர்ந்தவர்களுக்கும் தாழ்ந்தவர்களுக்கும் தமது விதியின்மேல் அதிகாரமுண்டு. எல்லார்க்கும் உயர்ந்த தேவதைகள் முதல், மிகத்தாழ்ந்த பிராணிகள் வரை, எல்லாம் தத்தம் செய்கைகளினாலேயே தமது சுகதுக்கங்களை உண்டுபண்ணுகின்றன.

"இப்பொழுதிருப்பது இதற்கு முன்னிருந்ததினின்றும், இனிவரப்போகிறது இப்பொழுதிருப்பதினின்றும், நன்மைக்கு நன்மையும், தீமைக்குத் தீமையும் உண்டாகின்றன. சுவர்க்கத்திலிருக்கும் தேவர்கள், தாம் முன் செய்த புண்ணியங்களின் பலனை அநுபவிக்கிறார்கள். நரகத்தில் வருந்தும் பிசாசுகள் தாம் செய்த பாபத்தைத் தொலைக்கிறார்கள். ஒன்றும் சாசுவதமல்ல. நல்ல புண்ணியங்களும் நாளாவர்த்தியில் அழிகின்றன. கொடிய பாபங்களும் அப்படியே நீங்குகின்றன. அடிமையாக உழைத்தவன், தனது நற்குணங்களுக்காகவும், தான் செய்த புண்ணியங்களுக்காகவும், அரசனாகப்பிறக்கலாம். அரசனை ஆண்டவன், செய்யாததகாததைச் செய்ததற்காகவும், செய்யவேண்டியதைச் செய்யா

இருந்ததற்காகவும், கந்தையுடுத்து பூமியிற் றிரியலாம். உங்களுடைய அதிர்ஷ்டத்தை இந்திரனுடையதைவிட மேலானதாக உயர்த்திக்கொள்ளலாம்; அதுபோலவே புழுக்களைவிடத் தாழ்ந்ததாகச் செய்துகொள்ளலாம். ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம்: இப்படி, தாழ்ந்தது மேலேபோவதும், உயர்ந்தது கீழே வருவதுமாக, இந்த சக்கிரம் வளையவந்துகொண்டிருக்கையில், ஓரிடத்தில் தரிக்கிறதும் இல்லை; சிறிதும் அமைதியும் இல்லை.

"இந்த மாறுபாடாகிய சக்கரத்தில நீங்கள் கட்டுண்டு, அதினின்று விடுபட வழியும் இல்லையாயின், எல்லையற்ற வாழ்வின் அகம் ஒரு கொடிய சாபமே; சகல லோகங்களின் உயிர் கொடிய வேதனையே.

"ஆனால், நீங்கள் கட்டுண்டிருக்கவில்லை! லோகங்களின் உயிர் இனிமையாகவே இருக்கிறது; வாழ்வின் அகம் ஆனந்தமானதாய் இருக்கிறது. எனது சகோதரர்களின் துக்கத்திற்காக அழுது, இவ்வுலகத்தின் துன்பத்தினல் மனம் விண்ட நான் இப்பொழுது சந்தோஷமாயிருக்கிறேன்; ஏனெனில் இத் துன்பத்திற்கெல்லாம் விமோசன முண்டென்று எனக்குத்தெரியும். வருந்தும் மனிதர்

களே! நீங்கள் வருந்துவதெல்லாம் உங்களா லேயே என்று அறியுங்கள். வேறொருவரும் உங்களை வாழ்ந்து இறக்கக் கட்டாயப்படுத்த வில்லை. நீங்களே இம்மாறுபாடாகிய சக் கரத்தைக் கட்டிக்கொண்டு, துன்பமாகிய அ தன் கைகளை முத்தமிடுகிறீர்கள். நான் உங் களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

"எல்லாவற்றினும்மேலானதாய், ஆதிஅந்த மற்றதாய், எங்கும் நிறைந்ததாய், எப்பொழு தும் நன்மைப்பக்கமே செல்கின்றதாய், ஒரு சக்தி இருக்கிறது. அதின் சட்டங்களே ஸ்தி ரமானவைகள். அதோ நிற்கும் சிறுமுல்லை யின் மணமும், அத்தாமரையின் கம்பீரமும், இந்த வஸ்திரத்தின் அழகும் அதின்வேலை களே. பிரகாசமான மேகங்களின் சொர்ண நிறத்தையும், மயில் தோகையின் மரகதத்தை யும், எழுதியது அது தான். நக்ஷத்திரங்கள் தான் அதின் ஸ்தானங்கள்; இடியும் மின்ன லும், காற்றும் மழையும், அதின் அடிமை கள் . . . . . . அது எப்பொழுதும் வேலை செய்து செய்து, அழிந்து நாசமாய்ப்போன வஸ்துக்களினின்று அழகான பொருள்களை வெளிக்குக்கொண்டுவருகிறது . . . . . அ தின் போக்கை ஒருவராலும் தடுக்கவாவது

திருப்பவாவது முடியாது . . . . . . . அது தான் இரக்ஷிப்பதும் கொல்வதும்; அது தான் செய்வதும் அழிப்பதும் . . . . . அதின் சட்டத்திற்கு விரோதம் செய்பவன் நஷ்டமடைகிறான்; அதின் சட்டம் நிறைவேற்ற முயலுபவன் லாபமடைகிறான். ஒளிந்து செய்த நன்மைகளுக்குப் பதிலாக அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுக்கிறது. ஒளிந்து செய்த தீமைக்குத் துன்பத்தை அளிக்கிறது. அது எங்கும் பார்த்து எல்லாவற்றையும் குறித்துக்கொள்கிறது. நல்லதைச் செய்; உடனே உனக்கு அது வெகுமதி அளிக்கும். ஒரு தீங்குசெய்—அதற்குத்தகுந்த தண்டனை நிச்சயமாய் வாய்க்கும். அதற்கு கோபமென்பதும் மன்னிப்பென்பதும் கிடையாது. அதின் தராசில் ஒவ்வொரு காரியமும் மயிரிழைகூடப் பிசகாது நிறுக்கப்படுகிறது. அதற்குக்காலமென்பது கிடையாது; இன்று தீர்ப்புசெய்தாலும் செய்யும்; வெகுநாள் கழிந்து செய்தாலும் செய்யும். இப்படி இந்த சக்தி எல்லாரையும் நன்மைக்கே கொண்டுபோகிறது. அதை ஒருவராலும் திருப்பவாவது தடுக்கவாவது முடியாது. அதின் அகம் அன்பு. அமைதியும்

ஆனந்தமும் அதின் முடி: அதற்கு எல்லா ரும் பணியுங்கள்!

* * * *

"என் சகோதரர்களே! இச்சன்மம் முந்திய ஜன்மங்களால் உண்டானதென்று சாஸ்திரங்கள் சொல்வது உண்மையே. முன் ஜன்மங்களிற் செய்த பாபங்களால் துன்பமும் துயரும் உண்டாகின்றன. முன் செய்த புண்ணியத்தால் சுகமும் சந்தோஷமும் உண்டாகிறது. நீங்கள் விதைக்கிறதையே அறுக்கிறீர்கள். அதோ நிற்கும் வயல்களைப்பாருங்கள்! நெல் நெல்லாகவும், எள் எள்ளாகவும், இருந்தது. அதுபோலவே மனிதனது அதிஷ்டமும். தான் முன்ஜன்மத்தில் விதைத்தபடி நெல்லோ எள்ளோ, அல்லது முள்ளோ, விஷ வித்தோ அறுக்கவருகிறான். அவன் இம்முள்ளையும், விஷப்பூண்டையும், வேரோடு பிடுங்கியெறிந்து, அவைகள் இருந்த இடத்தில் நல்ல விதைகளைப்போட்டு, சிரமப்படுவானானால், பூமி சுத்தமாயும் செழிப்பாயும் இருக்கும்; அறுப்புக்காலத்தில நிரம்பக்கிடைக்கும். ஒருவன், துன்பங்களுண்டாகும் காரணத்தை அறிந்து, அவைகளைப் பொறுமையுடன் சகித்து; தன்னால் கூடிய வரையிலும் பிறர்க்கு அன்பும் உண்மையுமே

கொடுத்து, அதினால், தான் முன்செய்த தீமைகளை ஒருவாறு நிவிர்த்திசெய்ய முயன்று; ஒருவர்க்கும் அணுவளவும் துன்பஞ்செய்யாது; தன்மனதிலிருந்து பொய்மையும், ஆசையையும், ஒழித்து; எதையும் தாழ்மையுடன் அனுபவித்துக்கொண்டு, பிறரிழைத்த தீங்குக்கு பதில் நன்மையையே செய்துகொண்டு; ஒவ்வொருநாளும், கருணையையும், பரிசுத்தத்தையும், நியாயத்தையும், அன்பையும், உண்மையையும் அபிவிர்த்திசெய்துகொண்டுவந்து; வாழ்வின்மேல் உள்ள ஆசை மடியுங்களையும், காமத்தை வேரோடு களைந்து;—ஒருவன், இப்படியெல்லாம், இருப்பானானால்; அவன் இறக்கும்பொழுது ஒப்பிக்கும வாழ்வின் கணக்கில், தீமை எல்லாம் இறந்து, நன்மையே நிறைந்திருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு உங்களைப்போல் வாழவேண்டுவதில்லை, அவன் எதற்காக மனிதன் ஆனானோ அக்காரியம் முடிந்துவிட்டது. அவனுக்கு இனிமேல் ஆசையென்பது கிடையாது; பாபமென்பது கிட்ட அணுகாது; இவ்வுலகத்திய இன்பதுன்பங்கள் அவனது நித்திய சாந்தத்தைக் கலக்கமாட்டா. ஜனனமரணங்கள் திரும்பிவரா. அவன் நிர்வாணத்தை அடைகிறான். அவன் உயிருடன் ஒன்

ருகிவிடுகிறன்; ஆயினும் வாழ்வதில்லை.— ஓம்! மணிபத்மேஹும், ஓம்!—பனித்துளி கடலில் விழுந்துவிட்டது!

* * * *

"இதுதான் கர்மமென்று சொல்லப்படுவது. அறிந்துகொள்ளுங்கள்! பாபமாகிற அழுக்கெல்லாம்போய், எண்ணெய் செலவழிந்து நின்றுவிட்ட தீபம்போல், வாழ்வும் நிற்கிற வரையில், மரணமும் நிற்கிறதில்லை. முன் ஜன்மங்களில் செய்து அனுபவியாத கர்மமெல்லாம் கூட்டமாகக்கூடி இந்த ஜன்மத்தில் வந்து பிறக்கிறது. பட்டுப்பூச்சி பட்டு நெய்து அதில்வசிப்பதுபோல், இதுவும் தனக்குச்சரியான இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொள்கிறது. பாம்பின் முட்டை பொரித்ததும், உடனே மேற்கோடுகளையும், விஷப்பற்களையும், உண்டாக்கிக்கொள்வதுபோல், அதுவும் தனக்குத் தகுந்த குணமும் தொழிலும் செய்துகொள்கிறது . . . . மேலும், இக்கர்மம், உதவிபுரியவோ கெடுதல் செய்யவோ காரணமாகிறது. கொடிய கொலைபாதகன் இறக்கும்பொழுது, அவன் செய்த பாபம், பூமியில் திரிந்து போகுமிடமெங்கும் வியாதியையும் துன்பத்தையும் விர்த்திபண்ணிக்கொண்டுபோகிறது. ஆனல் நல்லவர்

களும், நியாயவான்களும் இறக்கும்பொழுது, சுகமான காற்றுவீசி, உலகஞ்செழிக்கிறது. அதுபோலவே, இக்காலத்தவர் செய்யும்புண்ணியங்களால், இவர்க்குப் பின்வருபவர், இவர்களிலும் சுகமாக வாழ்ந்து, இன்னும் நல்லவர்களாய் இருப்பார்கள் ; இவர்கள் செய்யும்பாபத்திற்குத் தக்கபடி, துன்பமும் தீமையும் கலந்திருக்கும்.—ஆயினும், கல்பம் முடிவதற்குள், அன்பே எல்லார்க்கும் அரசாக ஆளும். . . . .

"புத்தியினால் வெட்டப்பட்டு, சாந்தத்தினால் மிருதுவாக்கப்பட்ட, நடுவான வழியைப்பிடித்து, நிர்வாணத்திற்குக்கொண்டு சேர்க்கும் உயர்ந்த பாதையில் நடக்க விரும்புபவர்கள், நான்கு **மேன்மையான உண்மைகளைக்** கேட்கட்டும் :

"முதல் உண்மை, **துன்பம்.**—நீங்கள் மிக விலைமதிக்கும் இவ்வாழ்வு ஓர் பெரியதுயரம். அதின் கஷ்டங்கள்தான் சாசுவதமானவைகள். அதிலுள்ள இன்பங்கள் எல்லாம், ஓரிடத்தில் தங்கி, உடனே திரும்பிப்பறந்துபோகும் பறவைகள் போலத்தான். பிறக்கும்பொழுதுள்ள அவஸ்தையும், பச்சைக் குழந்தையாக இருக்கும் பொழுதுள்ள கஷ்டங்களும், யௌவனத்திலுண்டாகும் துக்கங்களும், பௌரி

ஷவயதின் வியாகுலங்களுமே உமது வாழ் நாளை நிரப்புகின்றன. அன்பான காதல் இனிமையானதுதான்; ஆனால் மிருதுவான ஸ்தனங்களையும், கனிவாயிதழ்களையும், சுடுகாட்டுத் தீ முத்தமிட வேண்டும். பலம் மிக செளரியமானதே; ஆயினும் கடைசியில், பெரிய அரசர்களினதும், பிரபுக்களினதும் புஜங்களை, யுத்தகளத்தில் கழுகுகள் கொத்தும்படி நேரிடும். பூமி வெகு அழகாயிருக்கிறது; ஆனால், அதின் காட்டிலுள்ள உயிர்களெல்லாம், வாழ்வின்மேல் உள்ள ஆசையால் ஒன்றையொன்று வதைக்கின்றன. ஆகாயம், நீலக்கல்போல் பிரகாசிக்கிறது; ஆயினும், பஞ்சநாட்களில் மனிதர் பசித்து மெலிந்து, ஆகாயத்தைப் பார்க்கும்பொழுது, அது ஒரு சொட்டு மழையாவது கொடுப்பதில்லை. நோயாளிகளிடத்திலும், துக்கிப்பவரிடத்திலும், எல்லாரையும் இழந்து ஒண்டியாய் தடியைப் பிடித்துத் தள்ளாடும் கிழவனிடத்திலும், போய், 'வாழ்வெப்படி?' என்று கேளுங்கள். அவர்கள், 'பிறந்தவுடனே அழுகிற குழந்தை பெரிய ஞானி,' என்று சொல்வார்கள்.

"இரண்டாவது உண்மை, துன்பத்தின் காரணம்.—உலகத்தில் உள்ள துயரங்களில் எது தான் ஆசையினால் உண்டாகாதது? விஷயங்

களும் இந்திரியங்களும் கலப்பதினால், மோகம் உண்டாகிறது. அதினால் நீங்கள் நிழல்களைக் கட்டிக்கொண்டு, கனவுகளை நிஜமென்று பாராட்டுகிறீர்கள். நடுவில் நான் என்ற ஒரு பொய்மனிதனை ஸ்தாபித்து, அதன் சுற்றும் நிஜம்போல் தோற்றும் ஓர் பொய்யுலகும் நிருமிக்கிறீர்கள். அதனால், அப்புறமிருக்கும் உண்மையின் சிகரங்களைக் கண்ணெடுத்துப் பார்க்க முடியாமலும், வெகு தூரத்தினின்று வரும் ஆநந்தத்தின் இனிய கீதத்தைக் கேட்க முடியாமலும், இவ்விதப்பொய்த் தோற்றங்களை யெல்லாம் கடப்பவனுக்காக வைக்கப்பட்டிருக்கும் மெய்யான வாழ்வை அறியாமலும், போகிறீர்கள். ஆகையால், ஆசையும் சச்சரவும், இவ்வுலகில் ஓயாத கூக்குரலை உண்டாக்குகின்றன; பொய்த்தோற்றங்களை நம்பி ஏமாந்துபோன இருதயங்கள் துக்கிக்கின்றன; பொறாமையும், கோபமும், பகையும் அதிகரிக்கின்றன; தானியங்கள் விளையவேண்டிய இடத்தில், முட்செடிகளும் விஷவித்துக்களும் உண்டாகின்றன; நல்ல விதைகள் விழுந்து முளைப்பதற்கிடமில்லாமல் போகிறது. இப்படிப்பட்ட விஷங்களைத் தின்று மயக்கத்துடன் உயிரானது புறப்பட்டுப்போகிறது; ஆனால், கர்மத்

தினலே, இன்னும் இவைகளைப் பருகவேண்டுமென்ற ஆவலுடன் திரும்பிவர, வந்தவிடத்தில் வேறு தோற்றங்கள் அதை மயக்குகின்றன.

"மூன்றுவது, துன்பத்தின் முடிவு.—வாழ்வின் மேல் உள்ள ஆசையையும் தன்மேலுள்ள பிரியத்தையும் ஜயித்து, மனோவிகாரங்களை வேரோடு பிடுங்கி யெறிந்ததினல் உண்டாகும் அமைதியும்; தனக்குத் தானே அரசனுயிருக்கிற கீர்த்தியும்; விண்ணவரிலும் மேலாக வாழும் சுகமும்; தன்னல எவ்வளவு முடியுமோ அவ்வளவும் பிறர் துயரை நீக்கி, தருமஞ்செய்தல் இனியவை கூறல் முதலிய கடமைகளைச் சிறிதும் குறைவின்றிச் செய்கிறதாகிய, என்றுமழியாத நிறை செல்வமும் ஆகிய இவைகளை எல்லாம் ஒருவன் அடைவானுனல், அவனுக்கு அப்பொழுது துன்பம் முடிகிறது. அவனுடைய பழைய கடன்களெல்லாம் தீர்ந்துபோய்விட்டன; புதிதாக ஒன்றையும் சேர்க்கவும் இல்லை. ஆகையால், அவனுக்கு இனி ஜனனமரணம் கிடையாது. . . . . . .

"நான்காவது உண்மை, துன்பத்தை நீக்கும் வழி.—அது எல்லாரும் நடக்கும்படி சுலபமாயும் சமீபமாயும் இருக்கிறது. அது எண்மடங்

தாய், நேராக அமைதிக்கும் சாந்தத்திற்கும் கொண்டுவிடுகிறது. அதோ! சொர்ணமயமான மேகங்களால் சூழப்பட்டு, எப்பொழுதும் பனி நிலைத்திருக்கும் அம்மலைச் சிகரங்களுக்குப்போக அநேக வழிகள் இருக்கின்றன. செங்குத்தான பாதைகளின் வழியாயோ, அல்லது மெதுவாக சரிந்திருக்கும் பாதைகளின் வழியாகவோ, அச்சிகரங்களின் மேல் ஏறலாம். அநேக அபாயங்கள் பொருந்தியதாய், மலையின்மேல் நேரே ஏறுகிற முரட்டுப்பாதையில் மிகப்பலமுள்ளவர்களே துணிவார்கள். பலவீனர்களோ, சுற்றிச்சுற்றி நடந்து, அநேக இடங்களில் தங்கியே போக வேண்டும். அதுபோலவே எண்மடங்கான வழியும். அது உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கிறது. பலமான உயிர் விரைந்து செல்கிறது; பலவீனமான உயிரோ மெல்லமெல்லப் போகிறது. ஆனால் எல்லாரும் நிச்சயமாய் ஒளி நிறைந்த சிகரங்களுக்குப் போவார்கள்.

“ அவ்வழியின் முதற்படி நற்கொள்கை. தருமத்திற்குப் பயந்து, குற்றத்தை விலக்கி, நடவுங்கள். மனிதனது விதிக்குக் காரணம் கர்மமாகையால், அதைக் கவனியுங்கள். ஐம்புலன்களுக்கு அதிபதியாயிருங்கள்.

“ இரண்டாவது, நல்லெண்ணம்.—உயிர்வா

ழவனவற்றிற்கெல்லாம் நன்மையையே சேய்யுங்கள். கொடுமையும், லோபமும், கோபமும் மடிந்துபோகட்டும். அதினல் உமது வாழ்வு, இனிய கீதம்போல் எல்லாம் இசைந்து மெதுவாக ஓடும்.

"மூன்றுவது, நல்வசனம்.—அரசன் வசிக்கும் அரண்மனைக் கதவுகள்போல் உங்களது வாயைக் காத்துக்கொள்ளுங்கள். உங்கள் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும், சாந்தமாயும், மெதுவாயும், ஒருவர் மனதையும் புண்படுத்தாமலும் இருக்கட்டும்.

"நான்காவது, நன்னடக்கை.—ஒவ்வொரு செய்கையும் ஒரு குற்றத்தை அழிக்கவோ, அல்லது ஒரு நன்மையை அதிகரிக்கவோ செய்யட்டும். ஸ்படிகக்கற்களைக் கோர்க்கும் நூல் அக்கற்களின் வழியாகத் தெரிவதுபோல், உங்களது செய்கைகள் ஒவ்வொன்றிலும் அன்பு விளங்கட்டும்.

"மற்ற நான்கு கெடிகள் இன்னும் உயர்ந்தவைகள். இவ்வுலக விஷயங்களினின்று நீங்கினவர்கள்தான் அவைகளில் நடக்கலாம். அவைகளாவன: நற்சுத்தம், நற்றியானம், நல் ஏகாந்தம், நல் ஆனந்தம் என்பவைகளே.

"பலமான பறவைகள்தான் தமது கூட்டை விட்டு உயரப் பறக்கின்றன. இன்னும் வள

…ாத சிறகுகளையுடைய சிறிய குஞ்சுகள், ஒரு கிளையினின்று மற்றொரு கிளைக்குத் தாவித் தாவியே போகும். அநுபவம் முதிராத, பலவீனமான உயிர்கள், இல்லறத்திலேயே இருந்து வளரல்வேண்டும். மனைவி குழந்தைகள்மேல் உள்ள அன்பு அருமையானதென்று எனக்குத்தெரியும். உமது நேசர்களும் விளையாட்டுகளும் இனிமையாயும் தர்மங்களை விளைவிப்பனவாயும் இருக்கின்றன. அதிலுள்ள துயரங்கள் பொய்மையானாலும், வலிமையுள்ளனவாய்த் தோற்றுகின்றன. ஆகலால், வாழவேண்டுபவர்கள், இவைகளின்மேல் எவ்வளவு நன்றாக வாழ முடியுமோ அவ்வளவும் வாழட்டும். தமக்குள்ள குறைகளைக் கொஞ்சங்கொஞ்சமாக மிதித்துக்கொண்டு சென்று, இம்மாயங்களோடு பழகிப்பழகி சிறிது சிறிதாக உண்மையை அறியவேண்டும். அதினால் அவர்கள், இன்னும் உயர்ந்த இடங்களுக்குப்போக சுலபமான ஏற்றங்களையும், இலகுவான பாபச் சுமைகளையும், ஐம்புலன்களின் கட்டை அறுக்க அதிகபலத்தையும், உடையவர் ஆவார்கள். இவ்வித ஆரம்பத்திற்கு வந்தவர்கள் முதற்படியை அடைகிறார்கள். அவர்களுக்கு நான்கு மேன்மையான உண்மை

களும், எண்மட்க்கு வழியும் தெரியும். அவர்கள் இன்னும் சில ஜன்மங்களில் நிர்வாணத்தை அடைவார்கள்.

"இரண்டாம் படியில நிற்பவர்கள் சந்தேகங்களை ஒழித்து, மனோவிகாரங்களினின்று நீங்கி, காமங்கள் அணுகாது உயர்ந்தவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் ஒரு ஜன்மந்தான் எடுப்பார்கள்.

"இதற்கும் உயர்ந்தது மூன்றாவது படி: அதை அடைந்தவர்கள் பரிசுத்தமுடையவராய், எல்லா உயிர்களையும் சமமாகப்பார்ப்பவர்களாகிறார்கள். அவர்களுக்கினி ஜனன [illegible] வாழ்வோடு சேர்த்துக்கட்டிய பந்தம் அறுந்துபோய்விட்டது. இதிலும் உயர்ந்தவர்கள் கடைசிப் படியை அடைந்தவர்கள்; அவர்கள்தான் புத்தர்கள்.

"இப்படி நான்காவது படியை அடைந்தவன் சென்றவழியில், ஓர் வீரனால் கொல்லப்பட்ட மிருகங்கள்போல், பத்துப் பாபங்கள் இறந்து கிடக்கின்றன. அவை: தன்னயம் பாராட்டுங் குணம், கெட்டகோட்பாட்டை, சந்தேகம், பகை, காமம், வாழ்வின்மேல் ஆசை, சுவர்க்கத்தில் ஆசை, டம்பம், மோகம், கர்வம் என்பன. அதோ நிற்கும் வெள்ளைச் சிட்டுக்

களை அடைந்தவன், தனக்குமேல் நிர்மலமான ஆகாயத்தைத்தவிர வேறொன்றும் இல்லாமல் நிற்பதுபோல், இவனுக்கு மேலும் நிர்வாணத்தைத்தவிர வேறொன்றுமில்லை. தேவர்கள் தமது தாழ்ந்த இடங்களிலிருந்து அவனைப்பார்த்து பொறாமைப்படுகிறார்கள். மூவுலகும் இடிந்து விழுந்தாலும் அவனை அசைக்க முடியாது. அவன் வாழவேண்டுவதெல்லாம் வாழ்ந்து, இறக்க வேண்டுவதெல்லாம் இறந்து தீர்த்துவிட்டான். கர்மத்தினால் அவனுக்குப் புதிய வீடுகள் உண்டாகமாட்டா. அவனுக்கு விருப்பம் ஒன்றும் இல்லை யாதலால் எல்லாம் கிடைத்துவிடுகிறது தான் என்பதை மறந்ததினால் பிரபஞ்சமுழுவதும் தானேயாகிறான். 'நிர்வாணமென்பது எல்லாம் அழிவது' என்று சொல்பவர் அறிந்தவர் அல்லர். 'நிர்வாணமென்பது வாழ்வு' என்று சொல்பவரும் அறிந்தவர் அல்லர். அவர்கள், மங்கிய லாந்தரைப் பிடித்துக்கொண்டிருப்பவர்போல், சிறிது தூரமே பார்க்கிறார்கள்.

*       *       *       *

"இந்த தர்மமாகிய திரவியம், உலகத்தின செல்வங்கள் எல்லாவற்றிலும் மேலானது; [illegible]வமை இல[illegible]மல் இன்[illegible]து. அதின்

படி எல்லாரும் நடக்க ஐந்து விதிகளைக் கேளுங்கள் :—

“ஒரு பிராணியைக் கொல்வதினால், அது தன் தாழ்ந்த ஜன்மத்திலிருந்து உயரக்கிளம்பும் வழியில் அதைத் தடுக்கிறீர்கள். ஆகையால், ஒன்றையும் கொல்லவேண்டாம்.

“ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால், அதியாசையினாலாவது, பலவந்தத்தினாலாவது, மோசத்தினாலாவது, பிடுங்கிக்கொள்ளக்கூடாது.

“வாக்கு சுத்தத்தினின்றே மனச்சுத்தம் உண்டாகிறதினால், பொய்சொல்லவாவது, [illegible]ம.

“புத்தியை மயக்கும் பானங்களையும், மருந்துகளையும் விலக்குங்கள். சௌக்கியமான உடம்பும் தெளிவான மனதும் உடையவர்களுக்கு கிராக்ஷரசம் வேண்டியதில்லை.

“மறுமாதரைக் கனவிலும் நினைக்கவேண்டாம். வேறு அநீதியான சிற்றின்பங்களினின்று விலகுங்கள்.”

---

இவ்விதமாக அவர், தாய் தந்தை குழந்தை நேசர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிப் பேசினார். விஷயங்களினின்

தம்முனதை விடுவிக்க முடியாதவர்கள், தான கருமங்களைச்செய்துகொண்டு, சுத்தமும் மரியாதையும் பொறுமையும் கருணையும் உள்ளவராய் இருந்து, உயிர்களை எல்லாம் தன்னுயிர்போல் நேசித்துக்கொண்டு எப்படி வாழலாம் என்பதைப்பற்றிச் சொன்னார்.—

ஒரு நாள் காலையில் ராஜகிருகத்தில் வேணு வனத்தருகில் அவர் நடந்துகொண்டிருக்கையில், சிங்காலனென்ற குடியானவன், ஸ்நானம் செய்து, பூமிக்கும் ஆகாசத்திற்கும் நான்கு திக்குகட்கும் வணங்கி, இவ்வாறு திக்குகட்கும் அரிசியை வாரியிறைத்ததைக் கண்டு, "நண்பனே! ஏன் இப்படி வணங்குகிறாய்?" என்று கேட்க, அவன் "ஐயா! இது எங்கள் வழக்கம். ஒவ்வொரு காலையிலும் வேலையாரம்பிப்பதற்குமுன், ஆகாயத்தினின்றும் பூமியினின்றும் நான்கு திக்குகளினின்றும் தீங்கைவிலக்க இவ்விதம் செய்ய எம்முன்னோர்கள் படிப்பித்தார்கள்" என, கௌதமர் "நண்பனே! அரிசியை இறைக்கவேண்டாம்; ஆனால் எல்லார்க்கும் அன்பான எண்ணங்களையும் செய்கைகளையும் வாரியிறை. சூரியன் உதிக்கும் கிழக்கைப்போல் தாய்தந்தையர்க்கும்; உயர்ந்த வஸ்துக்களைகொடுக்கும் தெற்கைப்போல் ஆசிரியர்க்கும்; ஒவ்

வொரு தினத்தின் முடிவிலும், சூரியன் அழகாயும் சாந்தமாயும் பிரகாசிக்கும் மேற்கைப் போல் மனைவி குழந்தைகளுக்கும்; வடக்கைப்போல் சிநேகர்களுக்கும் பந்துக்களுக்கும்; கீழேயுள்ள தாழ்ந்த பிராணிகளுக்கும்; மேலேயுள்ள தேவர்களுக்கும் மஹாத்துமாக்களுக்கும்; அன்பான எண்ணங்களையும் செய்கைகளையும் வாரியிறை. அப்பொழுது ஆறு ஸ்தானங்களும் பத்திரமாக இருக்கும்; தீங்கெல்லாம் பறக்கும்" என்றார்.—இப்படி அவரவர் சக்திக்குத்தக்கபடி உண்மையைப் புகட்டினார். ஆனால் அவரது சிஷ்யர்களுக்கோ அவர்கள் உண்டுடுத்து வாழ வேண்டிய விதத்தைப்பற்றியும்; தியானஞ்செய்யவேண்டிய வழிகளைப்பற்றியும், இன்னும் அநேக விஷயங்களைப்பற்றியும் சொன்னார்.

இவ்விதம் அவ்விரவு முழுவதும் தர்மத்தைப போதித்தார். அங்கு வந்திருந்த எல்லாரும் ஒருவராவது உறங்காமல் சளைப்பில்லாத சந்தோஷத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர் முடித்தவுடன், அரசன் எழுந்து, அவரை வணங்கி, அவர் காலை முத்தமிட்டு, "குழந்தாய்! உன் சீடர்களில எல்லார்க்கும் தாழ்ந்தவனாக என்னை எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்" என்றான்.

யசோதரை முற்றுங்களித்து, "பகவன்! உமது வாக்காகிய அரசை ராகுலனுக்குக் கொடுக்கவேண்டுகிறேன்" என்றாள். இப்படி மூவரும் அன்றிரவு நல்ல மார்க்கத்தை அடைந்தார்கள்.

---

## முடிவுரை.

இதுவரை மிகுந்த தயவுடன் என்னைத் தொடர்ந்துவந்த என் அன்பர்களே! பகவான் புத்தர் மனிதர்மேல் வைத்திருந்த அன்பினாலும், அவ்வன்பிற்காக அவர் தனது செல்வங்களையெல்லாம் இழந்ததினாலும், அவரிடத்தில் எனக்குண்டான பக்தியால் தூண்டப்பட்டு, எனது தாய்மொழியும் [illegible] வையும் கவனியாது, என்னிலும் உயர்ந்தோர் எழுதியதைப்பார்த்து, தமிழில் எழுதத்துணிந்த இச்சிறு புத்தகம் இத்தோடு முடிகிறது. அவர் வெகு காலம் ஜீவித்திருந்து, கங்கை நதியாயும் ஊர்களில் எல்லாம் நடந்து சென்று, ஏழையென்றும் செல்வனென்றும் உயர்ந்தவனென்றும் தாழ்ந்தவனென்றும் பாராமல் எல்லார்க்கும் தர்மத்தைப் போதித்து, போகிற இடமெங்கும் சாந்தமும் இன்பமும் மனவமைதியும் விளைவித்துக்கொண்டு சென்று, கடைசியில் எண்பதாவதுவயதில் மெது

வாக இவ்வுலகினின்று போனதைப்பற்றி வேறு புத்தகங்கள் கூறுகின்றன. மனிதரது துன்பத்தின்மேல் அவருக்கு இருந்த அளவற்ற கருணையும், லோகம் முழுவதிற்கும் பரவிய அவரது அன்பும், மனிதரது நற்கதியைப்பற்றி அவருக்கிருந்த எல்லையில்லாத நம்பிக்கையும், இப்பூமியின் சரித்திரத்தில் நடுநாயகம்போல் ஒப்பற்று விளங்கும் அவரது வாழ்வும், இதைவாசிப்பவரது வாழ்நாட்களின் மத்தியில், அவர்களுக்குக் கஷ்டங்கள் உண்டாகும்பொழுது, தேறுதலைக்கொடுக்குமென்று நம்புகிறேன்.

சுபமஸ்து.

## CORRIGENDA.

### திருத்துப்பத்திரம்.

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 12 | ஆட்டமும் | ஆட்டும் |
| ,, | 25 | ஒரு | ஓர் |
| 5 | 9 | பார்வை | காட்சி |
| 9 | 19 | அததாணுகிய | அத்தாணுகிய |
| 10 | 24 | ஒரு | ஓர் |
| 11 | 11 | கொண்டுவந்த | வீழ்த்தின |
| 12 | 17 | எபபடி கிருஷி | எப்படிக்கிருஷி |
| ,, | 24 | இரத்தினகம்பளம் | இரத்தினக்கம்பளம் |
| 13 | 14 | முணுமுணுவென்று | முணுமுணென்று |
| 14 | 8 | ஒளிந்திருக்க | ஒளித்திருக்க |
| 15 | 11 | ஒரு | ஓர் |
| ,, | 23 | அடுத்தாப்போல் | அடுத்தாற்போல் |
| 16 | 7 | நிரம்பப்பட்டு | நிரப்பப்பட்டு |
| 19 | 23 | ப்பொறுக்கியெடுத்த | த்தெரிந்தெடுத்து |
| 21 | 11 | பார்வையும் | பார்வையையும் |
| 22 | 13 | குதிரைசவாரி | குதிரைச்சவாரி |
| 23 | 15 | வெகு | மிக |
| 26 | 17 | தகதகவென்று | தகதகென்று |
| 27 | 9 | உறைத்த | உறைந்த |
| 30 | 16 | காற்ணுனது | காற்றுனது |
| ,, | 20 | புசல் | புயல் |
| 31 | 3 | ஒரு | ஓர் |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம் |
|---|---|---|---|
| 33 | 3 | வளைய | வளையவளைய |
| 37 | 14 | உரிஞ்சி | உறிஞ்சி |
| 40 | 23 | தொத்து | தொற்று |
| 41 | 21 | தொத்துவியாதி | தொற்றுவிய |
| 45 | 16 | ஆலோசித்தது | ஆலோசிப்ப |
| 51 | 18 | கிழேவிழ | கீழேவிழ |
| 99 | 17 | யாதானும் | யாவனோ |
| 108 | 2 | అహంభూ | అహంభూ |
| ,, | 3 | లాక్ష | లాక్షః |
| ,, | 8 | ధర్మ, భగవత్ | ధర్మః, భగవ |
| 111 | 17 | விசைந்து | விளைந்து |
| 115 | 7 | ஒரு | ஓர் |
| 116 | 21 | தக்கவர் | [illegible]தோர் |
| 117 | 24 | படபடவென்று | படபடென்று |
| 127 | 8 | சக்கிரம் | சக்கரம் |
| 129 | 19 | ஒளிந்துசெய்த | ஒளித்துச்செ |
| 130 | 9 | உண்டாகின்றது | உண்டாகின் |
| ,, | 17 | வேறோடு | வேரோடு |

# விவேகசிந்தாமணி

அறிவைப்பரவச் செய்வதற்கான மாதாந்தத்
தமிழ்ப்பத்திரிகை.

"ஸ்திரீகள், புருஷர்கள், பாலர், பெரியோர் அனைவரும்
ஆசையுடன் வாசிக்கக்கூடியது."

இது

ஒவ்வொருவீட்டிலும் இன்றியமையாதிருக்கவேண்டியது
பிள்ளைகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும்
பேருபகாரமானது.

---

## சந்தாவிவரம்.

<u>லேசான காகிதப்பதிப்பு</u>:—சாதாரணமாய் எல்லா ஜனங்களுக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ 4. 6-மாசத்துக்கு ரூ 2-2.
தனிப்பிரதி 5½ அணா. பழையபிரதி 6 அணா.

<u>வருஷாரம்பத்திலே</u> தவறாமல் கட்டினால் வருஷசந்தாவில் 8 அணாவும், 6-மாசசந்தாவில் 4 அணாவும் தள்ளிக் கொடுக்கப்படும்.

ஏப்பிரல் அல்லது மேமாதம் துவக்கியே சந்தாகணக்கு வைக்கப்படும். ரிஜிஸ்தரான சந்தாதாரர்கள் வருஷமுடிவிலன்றி [illegible]ப்படி சந்தாவை நிறுத்துதல்கூடாது.

☞ வருஷக்கணக்காய் ஒழுங்காய் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு இரண்டு மாசத்தவணையும், 6-மாசக்கணக்காக ஒழுங்காய்ச் சந்தா செலுத்திவருகிறவர்களுக்கு மூன்று வாரத்தவணையும் கொடுக்கப்படும். அதற்குள் சந்தாவை முன்பணமாகச் செலுத்துகிறவர்களுக்கே மேற்கண்டதின்படி செய்துகொடுக்கப்படும்.

---

<u>தளமான காகிதப்பதிப்பு</u>:—அத்தியக்ஷர்கள், ரீடிங்ரூம்கள், புத்தகசாலைகள் முதலான ஸ்தாபனங்களுக்கு உபயோகமானது. ☞ வருஷ சந்தா குறைந்தது ரூ 5.

தனிப்பிரதி 7½ அணா. பழைய பிரதி 8 அணா.

கையொப்பக்காரர்கள் ஆபீசுக்குக் கடிதமெழுதும்போதெல்லாம் அவர்கள் ரிஜிஸ்தர் நம்பரைக் குறிப்பிட்டெழுத வேண்டும். அப்படிச்செய்வதால் அவர்கள் எழுதும் கடிதம் உடனே கவனிக்கப்படுவதன்றி இருதரப்பாருக்கும் வேதனையுண்டுபண்ணும் தாமதத்துக்கும், வீண்கடிதப் போக்குவரவுக்கும் இடமிராது.

ஸி. வி. சாமிநாதய்யர்,
அ. ப. ஏஜன்சி காரியதரிசி.

# THE VIVEKA CHINTAMANI.

## A MONTHLY TAMIL MAGAZINE & REVIEW.

DEVOTED TO THE DIFFUSION OF GENERAL KNOWLEDGE.

**'Men & Women, Young & Old, can Read it thro' with Sustained Interest.'**

*Regularly published every month from May 1892.*

INDISPENSABLE TO EVERY INDIAN HOUSEHOLD.

INVALUABLE TO STUDENTS AND TEACHERS.

*Considered a most useful publication by Those Best qualified to Judge.*
*Recommended for use in all the Board schools as well as in girls' schools.*

## TERMS OF SUBSCRIPTION.

**Thin Paper Edition** for the People:-

SUBSCRN. PRICE: YEARLY RS. 4; HALF-YEARLY RS. 2-2.
SINGLE COPY, CURRENT NO. 5½ AS. BACK NOS. 6 AS. EACH.

**If Strictly prepaid** at the commencement of the term 8 As. discount off the annual rate, and 4 As. off the half-yearly rate.

Subscriptions Entered to begin with only April or May of each year. Enrolled Subscribers may not withdraw except at the end of the year.

☞ To regular annual subscribers 2 months' grace is allowed for the prepayment of subscription and in the case of regular half-yearly subscribers 3 weeks' time, within which all subscriptions should be paid to entitle them to the discounts allowed.

**Thick Paper Edition** for Patrons, Reading Rooms, School and Circulating Libraries, &c.
Minimum Subscription Rs. 5 per annum.
Single Copy 7½ As.; Back Nos. 8 As. each.

In all business correspondence, Subscribers are requested to quote their register number found on the wrapper, as it would ensure prompt attention and save both sides from vexatious delay and needless correspondence.

☞ APPLY TO **C. V. SWAMINATHA AIYAR,**
*Secy. D. K. Agency, Triplicane, Madras.*